9362

உ

கடவுள் துணை.

புலிப்பாணி மகாமுனிவர்
திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம் 500.

இஃது
தி. வீ. இராஜுமுதலியாரவர்களால்
பரிசோதித்து,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்
பி. நா. சி. கடைகாரியம்,
மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாங்கல்.
நாராயணசாமிமுதலியார்குமாரர்
சிதம்பரமுதலியாரவர்களது
சென்னை:
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1916.

சென்னை குயப்பேட்டை.
படவேட்டம்மன்கோயில் வீதி, நெ. 65.

உ

கணபதிதுணை.

நீதிநெறிநாடக உபாத்தியாயர்

# சங்கிலியா பிள்ளையவர்களியற்றிய

புதியவர்ணமெட்டுள்ள

நீதிநெறி

# அரிச்சந்திர நாடகம்.

அச்சிட்டு வந்துவிட்டது.

---

இதற்குமுன் இப்பெரும் நாடகத்தை சில வர்ணமெட்டுகளாலமைத்து நீதிநெறி அரிச்சந்திர நாடகமெனப் பெயர் கொடுத்துப் பாடியவித்வான் ம-ள-ள-ஸ்ரீ, சங்கிலியாபிள்ளை யவர்களால் இப்போது தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு - பாரீஸ், இந்துஸ்தான், திருப்புகழ் முதலிய பலவர்ணமெட்டுகளிற் புதிதாய் அமைத்து நீதிநெறிநாடக உபாத்தியாயர் சங்கிலியாபிள்ளை யியற்றிய புதிய வர்ணமெட்டுள்ள அரிச்சந்திர நாடகமெனப் பெயர்கொடுத்து ஷை உபாத்தியாயரைப்போல லெத்தகிராப்படமும் அத்துடன் ஷை புஸ்தகத்துக்கேற்ற ஐதிகப்படங்களும் சேர்த்து உயர்ந்த கிளேஸ்காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிக்கோபயிண்டு செய்து விற்பனைக்குத் தயாராயிருக்கிறது, ஷை புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1 4 0 பிரியமுள்ளவர்கள் நேரிலும், வி-பி-போஸ்டு மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்

உ

கடவுள் துணை.

புலிப்பாணிமஹாமுனிவர்
திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியம்-ருாா.

## காப்பு.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

அண்டரண்டமாகிநின்றவனேகாப்பு ஆனந்தமாகிநின்றவுமையேகாப்பு,குண்டமெனுங்குண்டலியின்குறியேகாப்புகுமாரகுருவேல்முருகர்பாதம்காப்பு, புண்டரிகமானதிருமாலுங்காப்பு புகழ்பிரமமுகமகுலிசனைவர்காப்பு, சண்டமென்னும்மாருதம்போல்வைத்தியத்தில்சாற்றுகிறேன்போகருடபாதங்காப்பே. க

பிரமன்-பிர்மர்-குலிசன்-வைரவன்.

நூல்சூதமாத்திரை.

காப்பாகசூரக்குளிகைசொல்லக்கேளு கருவானசௌரியதுவிராகனைந்து, சேப்பாகமிளகதுவுமதிலேபாதி திரமானவுளுந்ததுவுமிதுநேரப்பா, வேப்பாகவிருசரக்குங்கல்வத்திட்டு விதமாகயெருக்கம்பால்தன்னலாட்டி, பாரப்பாக்கௌரிக்குகவசங்கட்டிப் பாங்காகரவிமுகத்தில்வைத்திடாயே. உ

*ரவியில்-வெய்யலில்

வைத்தவுடனெடுத்துவந்துதுணிமேற்சுற்றி வகையாகவெள்ளாவிதன்னில்வைத்து, கைத்தவுடனெடுத்துப்பின்கவசம்வாங்கி கனமாகஅமுறியினலழுகப்போட்டு, செத்தவுடன்ரவிதனிலே *கடிகைவைத்து செயலானகல்வத்திலிட்டுநீயும், உய்த்தவுடன்பாச்சாணலாட்டிதண்ணீருத்தமனேமாற்சாமமரைத்திடீரே. ங

*அமுரி-மூத்திரம் *பாச்சான்-கள்ளி *கடிகை-நாழிகை.

திரேசீகுளிகையதுசிறுபயறுபோலே திரமாகவுண்டைசெய்துநிழலுலர்த்தி, சேரேசிமிழ்தனிலேயடைத்துக்கொண்டுசெகத்திலுள்

ளமனிதருக்குசுரத்துக்கெல்லாம், பாறேநீசுக்குடையகியாழந்தன்னி ல்பண்பாககுளிகையொன்று கொடுத்துப்பாரு, வீரேநீமூன்றுபகல் கொடுக்கும்போது விதமானமுறையின்சுரம் ள்போமே. ௪

போமேநீபத்தியமா யாறுநாள்காறு பொங்கமுடன்வெந்நீருஞ் சாதமாகும், ஆமேநீமற்றொன்றுமாகாதப்பா அடவாகயேழாநாள்ச லத்தைவாரு, நாமேநீமினகுடனேகீரைவேறும்நலமாகக்கியாழமவை த்துக்கொள்ளச்சொல்லு, போமேநீபத்தியந்தான்முறிக்கச்சொல்லி ப்புனிதமுடன்மற்றநாளெல்லாஞ்சேரே. ரு

சனிக்கு மேல்பூசத்தயிலம்.

சேரேநீசன்னிக்குத்தயிலமொன்று செப்புகிறேன்புலிப்பாணி விளக்கமாக,நீரேநீவேப்பெண்ணைபடி,நாலொன்றுவிதமான* கார்த்தி கையின்கிழங்குதண்ணீர், பாரேநீபடிதண்ணீரனந்துவாரு பாங்கான கருநாவிவிராகனொன்று, கூரேநீவசம்பதுவும்விராகனைந்துகொடிதா னவெள்ளுள்ளிவிராகனஞ்சே. சு

* கார்த்திகைக் கிழங்கு-கலப்பைகிழங்கு-தண்ணீர்கிழங்குச்சார் வெள்ளுள்ளி வெள்ளைப்பூண்டு

அஞ்சான * காயமதுவிராகனொன்று அப்பனேஓமமதுவிராக னைந்து, தஞ்சானசதகுப்பைவிராகனைந்து சாதிக்காய்வெந்தோன்றி விராகன்பத்து, மஞ்சானஇதையெல்லாங்கிழங்குநீரில் மைந்தனே மைபோலேயரைத்துப்போடு, சஞ்சானஎண்ணெயிலேகலக்கிக்கொ ண்டு தயவாககடுகுபதந்தன்னில்வாங்கே. எ

* காயம்பெருங்காயம் வெந்தோன்றி ஆகாசகருடன்கிழங்கு

வாங்கியேயெண்ணெய்மேல் பூசசன்னிபோகும் வகையானகு டைச்சல்முதல்வாசம்போகும், பாங்கியேஉள்ளுக்குகொடுக்கொணு துபாங்காகமஞ்சளிட்டுச்சாணமிட்டு, தாங்கியேநீரிட்டுக்கழுவிப்போ டுதயவாக இந்தயெண்ணெயுறுதிமெத்த, யேங்கியேமலையாதேயப்பா சொன்னே னிதமாகவைத்தியந்தா னின்னங்கேளே. அ

சூதகவலிக்குஉப்பு.

கேளாய்நீசூதகத்தின்வலிதான்போக கெடியாகசொல்லுகிறேன் ஒன்றுய்க்கேளு, வீளேநீபோகாமலுப்பைவாங்கி விதமானகரந்தையு டசாற்றுலாட்டி, நாடேளநீகாயவிட்டுப்புடத்தில்போட்டு நாயகனேயி ம்முறையாயைந்துதிரு, பாளேநீபோக மலெடுத்துக்கொண்டுபண்பா ன*ஆண்செருப்படையின்சாறே. கூ

*கரந்தை-கொட்டகரந்தை *ஆண்செருப்படை-சிருசெருப்படை.

சாற்றுலே யைந்துபுடம் போட்டாயானும் சார்வாகச்செங்கனீ றுபோலேயாகும், பார்த்தாலேடோரியதுஇதற்கொவ்வாது பண்பாக சூதத்தின்வலியேகண்டாய், மாற்றுலேமெலுமிச்சம்பழச் சாற்றுலே மைந்தனேயகஸ்தியனும் குழம்பைக்கேளு, யேற்றுலேபணவெடைதான்சாற்றிற்சேர்த்து இதமாகஉள்ளுக்குக்கொடுத்திடாயே. ய

கொடுத்திடவேபேதியது அதிகங்கண்டால் குணமாகவசம்பதனைகரிக்கிக்கொண்டு, அடித்திடவோர்படிசலந்தான்கூடவார்த்துஅடவாகஎட்டொன்றாய் குறுக்கிக்கொண்டு, கடுத்துடனேகொடுத்து விடுபேதிநிற்கும் கருவாகப்பத்தியமாய்காருகாரு, சடுத்தமில்லை பச்சரிசிபசற்றினேடு சார்வாகப்பத்தியந்தானுப்பாகாதே. யக

ஆகாதுமற்றென்று மாகாதப்பா அடவாகமற்றுநாள் மருந்தைக்கேளு, சாகாதவெள்ளுள்ளித்தயிலம்வாங்கி சாதகமாய்த்துட்டெடைதானென்றில்வார்த்து, நோகாதுமுன்சொன்ன வுப்பைமைந்தா நோய்தீரவிராகனென்று பொடித்துப்போடு, போகாதகூதமாம்வல்லிதான்திரபுகட்டிவிடுதயிலத்தைத்கொடுத்திடாயே. யஉ

கொடுத்திடுவாயிந்த முறைநாள்மூன்றப்பா குணமாகபத்தியமாய்க்கார்க்கச்சொல்லு, அடுத்திடுவாபச்சரிசிபருப்பினேடு அடைவாகபுனர்பாகமாகக்காச்சி, சடுக்கமில்லைகொடுத்துவிடுஉப்பாகாது சார்பாகவைந்தாளுள்தலையைமூழ்கி, நடுத்திடுவாயுப்பதுவும்வறுத்துக்கூட்டு நலமானமற்றுநாளெல்லாமாமே. யஙு

பெரும்பாடுக்குமருந்து

ஆமேநீபெரும்பாடுவந்தபேர்க்கு அடவாகஆவல்பட்டை யெருமைமோரில், தாமேநீவைத்திடித்துப்பிடித்துக்கொண்டுதயவாகசந்தனந்தான்விராகனைந்து, நாமேதான்புளித்தமோர்தனிற்கலக்கி நாயகனேகொடுத்துவிடுநாள்மூன்றப்பா, வீமேநீபெரும்பாடு எங்கேபோச்சு விதமாகப்பத்தியந்தானில்லைதானே. யச

குன்மம்ஆறுக்கும் உப்பு.

தானேநீகுன்மம்வகையாறுந்திர தயவாகவுப்பொன்று சொல்லக்கேளு, மானேநீஉப்பதுவும்படி தானென்று மைந்தனே யெருமைமோர்படிதானென்று வானேநீவரிக்குமட்டிசாறுநாழிவகையானஇந்துப்புவெடியுப்போடு, தேனேநீதவுட்டுப்புவளயலுப்பு தெளிவானவகைவகைக்குவிராகனென்றே. யரு

ஒன்றாகஅதையெடுத்து பாண்டத்திலிட்டுஉத்தமனேமோருட னேசாறும்விட்டு, நன்றாகஅக்கினியிலெரிக்கும்போது பதராமலுப்ப துசர்க்கரைபோலாகும், குனமாகப்பாண்டத்திலெடுத்துலர்த்தி குண மாகவுதையாகி*அன்னநீரில், நன்றாக விராகனெடையுப்புரண்டு நல மாகத்தான்போட்டுக்கொடுத்திடாயே. ௰௬

* அன்னநீர் பழந்தண்ணீர்.

கொடுத்திடுவாய்மண்டலந்தானிந்த விதங்குணமாக அவரவர்க் குநாள்தான் தள்ளு, கொடுத்திடுவாவாயுவென்றகட்டுபோகுந்தொந்தி ப்புச்சோகைபோம்பொருமற்றீரும், படுத்திடுவாய்விசையொடுவிரிச் சினங்கள்பாழானகெண்டைமுதற்பறந்துபோகும், காத்திடுவாய் அரு வைஎன்றகட்டிப்போகும் கடலாணவுப்புடைய இறந்தான்கண்ணே.

நீரடைப்புக்கு-வாழைக்கிழங்கின்நீர்.

காணென்றநீரடைப்புகண்டபேர்க்கு கனிவாக வாழையுடகிழ ங்கைத்தோண்டி ஊணேநீமற்றநாட் பார்க்கும்போது உத்தமனேவா ழையுள்ளேதண்ணீர்நிற்கும், வீணேநீபோகாமற் கிழங்குதண்ணீர்வி தமாக அரைபடிதானெடுத்துவந்து, பூணேநீவெடியுப்புவிராகன்ரண் டுபோட்டதிலேகொடுக்கநீர் கட்டிப்போமே. ௰௮

மெத்தவியாதிக்கெண்ணெய்.

போமேதான்மெத்தலையின் வியாதிதீரபொங்கமுட னெள்ளெ ண்ணெபடிதானொன்று, நாமேதான்பசுவின்பால் படிதானொன்று தய வாககம்பஞ்சோற்றின்னீரைவிட்டு,வேமேதான்தொண்டையிலையில் தானும்விதமாகத்தானதுவைத்துச்சாறுநாழி, வாமேதான்மிளகதுவு ப்பலந்தான்ரண்டு வணிமாகத்தானுடைத்துப்போட்டிடாயே. ௰௯

போட்டதொருமிளகதுவு மிதக்குமட்டும் பொங்கமுடனக்கினி யிலெரிக்கவேண்டும், நாட்டவேயிறக்கிவைத்துவடித்துக்கொண்டுநல மானமிளகதனைவஸரத்துக்கூட்டு, ஊட்டவேவுதயாதி துடங்குமுன் னே உத்தமனேதலைமுழுகியமுதுகொள்ளு, காட்டவேமண்டையிடி கண்ணுக்குத்து காலமேமுழுகிவரஓடிப்போமே. ௨௰

அண்ட வியாதிக்கு எண்ணெய்.

போமப்பா அண்டத்தின்வியாதிவந்தாற் பொங்கமுடனெண்ணெ யொன்றுசொல்லக்கேளு, ஆமப்பாபோகருடகடாட்சத்தாலே அட வாகப்புலிப்பாணிமுறையைச்சொல்வேன், தாமப்பாவிளக்கெண்ணெ

படிதானென்று தயவானமிளகுதக்காளிச்சாறு, வாமப்பாபடியொன்று அளந்துவாரு வளமானவெந்தியந்தான்பலமும்ரண்டு. உக

ரண்டான வெந்தயத்தை சும்மாப்போடு நினைவுகள்தான்பிசகாமலெரிப்பாயப்பா, உண்டானவெந்தயந்தான் மொருமொருப்பானல் உத்தமனேகடுகோடேவூற்றிக்கொள்ளு, பண்டானவெண்ணையைத் தான்கொள்ளவென்றால் பாங்காகபடியரைக்கால்கொள்ளச்சொல்லு, திண்டானகற்பமதுகரண்டிகொள்ள திரமாகமூன்றுநாள்முறையைக் கொள்ளே. உஉ

கொள்ளவேபத்தியந்தானென்றுமாகா கொடியதோ ராறுநாட்காருகாரு, கொள்ளவேவுப்பாகாபுளியுமாகாகொள்ளுமையாய்சாதமன்றியைகளாகா, மெள்ளவேபத்தியந்தானேழுநாளின் மேன்மையாய்த்தான்முறித்துயெல்லாங்கொள்ளு, உள்ளவேஅண்டமென்றவியாதிபோகும் உத்தமனேநாட்சென்றுற்போகாதென்னே. உ௩

ஒருதலைக்குநசியம்.

போகுமப்பாஒருதலையின்வியாதிரோகம் பொங்கமுடன்சமுத்திரப்பழத்தைவாங்கி, ஆகுமப்பாபெருங்காயம்நேராய்ச்சேர்த்து அடவானபலமுலைப்பால்தன்னுலாட்டி, ஏகுமப்பாகுளிகைபோல்செய்துகொண்டு இதவானபெண்முலைப்பால்தனிலுரைத்து, வேகமப்பா நாசியிலேவிட்டபோது விண்டோடியகன்றுவிடும் வீரந்தானே. உச

சமுத்திரப்பழம்-சவிரிப்பழம்.

வீரந்தானின்னமொருவுபாயங்கேளு விதமானமாதளம்பூ அருக்கன்பூவும், காரந்தான்குங்குமப்பூ மூன்றுநேராய் கலவத்திலாட்டியிதைமுலைப்பால்விட்டு, சேதந்தானில்லாமல்நாசியிலேபிழியச்*சோரியென்றபிணிசந்தானேழுந்திரும், பாரந்தானில்லையப்பா சூட்சமாக பாடினேன்புலிப்பாணி விளக்கந்தானே. உரு

அருகன்-எருக்கன்-சோரி-இரத்தம்.

காதுவலிக்கு வெண்ணெய்.

விளங்கவேகாதிலுற்றநோய்தனக்கு விதமானமரமஞ்சள்வெள்ளைப்பூண்டு, அளங்கவேசுக்கோடுவலம்புரியின்காயும் அடவானகரியசீரகத்தினோடு, முளங்கவேகண்டிவரைச்சிங்கையோடு*முசுறு முட்டை கருங்கோழிமுட்டையோடு, புளங்கவேயிவையெல்லாம் வீராகனென்று புதுமையிலேக்கள்ளிபுனல் முருங்கைச்சாறே. உசு

*முசுறுமுட்டை ஒருவிதயெருவின்முட்டை.

காரென்றவகைக்குவகை தான்படிவீசம் சார்வானபசுநெய்படிதான்காலு, வாறென்னவேவெண்ணெய்படிதான்காலு வளமாகவிட்

டெறித்தூரசத்திலூற்றிபாரென்னபஞ்சுகொண்டு மூடச்சொல்லுபா
ங்காகாரா றுனுள்தான்வாரு, கூரென்னகாதிலுள்ள வியாதியெல்லாங்
குணமாகும்போகருட கடாட்சந்தானே. உஎ

கண்டபலம்திர-ரத்தனூதிகுளிகை.

தானென்றகண்ணிலப்பாபடலந்திர தாவானமிளகுடனேசுக்கு
சூட்டி, கானென்றதிப்பிலியுஞ்சங்குகூடக்-கரியமால்தாரமுடன் புங்
கம்விந்து, மேனென்றஅதிமதுரந் தூக்கத்தோடு*விதமான பீதரோ
ணியுங்கூட, பானென்றமனோசிலையு*மேனக்கொம்பும் பண்பான ஆ
மையுடஓடுங்கூட்டே. உஅ

*மஸ்தாரம்-அரிதாரம்* ஏணக்கொம்பு-பன்றி-சிங்கப்பல்.

கூட்டப்பாபுலிநகமும் வெள்ளியோடுகொடிதாணதேவலின் நெ
ஞ்செலும்புங்கூட்டு, மூட்டப்பா இந்துப்பு யிவையெல்லாந்தான் மு
னையாகஒரெடையாய்நிறுத்துக்கொண்டு, ஆட்டப்பாகல்வத்தில் நந்
திபத்திரிஅடவாகச்சாறுவிட்டுஒருநாளாட்டி, சூட்டப்பாஅதனுடை
யபூச்சாறுதானேசொல்லடாஒருவனால்தானாட்டித்திரே. உகூ

*நந்திபத்திரி-நந்தியாவட்டயிலை.

நீர்த்தெடுத்துக்கயிர்போலுருட்டிக்கொண்டு திறமாகநிழலுலர்
த்திபதனம்பண்ணு, பார்த்தெடுத்துதேனதிலையுரைத்துப்போடப
டருமென்றவகைகளெல்லாம்பறந்துபோகும், சார்த்தெடுத்தமுலைப்
பாலிலரைத்துப்போடசார்வாகவிராறுகாளுக்குள்ளே, யீர்த்தெடுத்த
ரத்னமதிகுளிகையென்பார் யிருவழியின்படலமெல்லாம் வாங்குந்
தானே. ௩௰

மாலைகண்ணுக்குமை.

தானென்றமாலையுடகண்ணுக்கப்பா தயவான சுழல்வண்டுசுட்ட
ச்சாம்பல்ல, வேனென்றகல்வத்தில்போட்டுக்கொண்டு, விதமாகயெ
ள்ளெண்ணை*நீர்ப்பூண்டுசாறும், பானென்றபருத்தியிலைச்சாறுங்கூ
ட்டிப்பாங்கானவெள்ளுள்ளி மிளகுபத்து, வாவென்றமைப்போல ஆ
ட்டிக்கொண்டு வளமாகஅந்திசந்திகண்ணிற்போடே. ௩௧

* நீர்ப்பூண்டு-நீர்முள்ளி.

போடப்பாநாள்மூன்றுபோட்டபோது பொங்கமுடன் மாலைய
துஅகன்றுபோச்சு, வீடப்பாவிளக்கெண்ணெய்வாரவீதம் விதமாக
நாலைந்துமுழுகும்போது, சாடப்பாஅருந்தூதிகண்ணில்தோற்றுஞ்
சார்வாககீழ்ப்பார்வைகண்ணிற்காணும், நாடப்பாபோகருடகடாட்ச
த்தாலேநலமாகப்புலிப்பாணிபாடினேனே. ௩௨

### கண்ணில்நீர்வடிதலுக்குமை.

பாடினேன் கண்ணில்நீர்வடிந்ததானால் பரிவாகப்பூலாயிலையோர்குந்து, நாடினேன்கருவேல்நிலையோருத்து நலமானதான்றிக்காய் மாசிக்காயுஞ், சூடினேன்கடுக்காயுங்காசிக்கட்டி சுகமானவகைவகைக்குவிராகனென்று, கூடினேனிவையெல்லாம்பொடித்துப்போட்டுக் குணமாகவேவைத்து பிழிந்திடாயே. ௩௩

பிழிந்திடுவாய்கரண்டியிலேவேணமட்டும் புனிதமுடன்அபினியதுவிராகன்கால்தான், செழித்திடுவாய்*சீனமதுபொரித்துக்கொண்டு செயலானபொரியதும்விராகன்கால்தான், பிழிந்திடுவாயடுப்பிலே காயும்போது கூசாமலாவாரையின்குச்சியாலே, சுழித்திடுவாய்மை போலடைவாயப்பா சுகமாகக்கண்ணைகற்றி வழித்துப்போடே. ௩௪

* சீனம்படிகாரம்.

போடுமுன்னேபுளியிலையை வேகவைத்துப்பொங்கமுடன்கண்ணை நீகழுவிப்போட்டு, ஆடுமுன்னேயிந்தயிலேவேகவைத்து அடவாகப்போட்டவுடன்கண்ணீர்நிற்கும், நாடுமுன்னேசிவப்பெல்லாம்வாங்கிப்போகும் நலமானஅழுகண்ணுந்திரும்பாரு, கூடுமுன்னேஇன்னமொருவைத்தியந்தான் குணமாகச்சொல்லுகிறேன்கேளுகேளே.

### கண்வலிக்கெல்லாம்.

கேளப்பாகண்ணுவலிவந்தபேர்க்கு கொடியானதுளசிபுண்ணாக்கிலையினேடு, சூளப்பாபுலியிலையிந்தமூன்று சுகமாகக்கட்டியதை துணியில்வைத்து, வீளப்பாயில்லையடா *கோளங்கட்டி விதமென்ன தூளதுவும்விராகன்பத்து, பாரப்பாபழம்புளியைகரைத்துநீயும்பாங்கானகண்ணுக்குப் பிழிந்துபாரே. ௩௫

* கோளங்கட்டி திறட்சியாய்க்கட்டி முன்சொன்னவகையிலைகன் பத்துவிராகனிடைகொண்டது.

பாரேநீபொட்டணத்தைப் பிடிக்கச்சொல்லு பண்பாகநாலுதாமொருநாள்வாரு, சேரேநீவார்த்தவுடன்வலிதாநிற்குஞ் சிறப்பாகநான்மூன்றுயிந்தபாகம், ஆரேநீயைந்துநாள்சொல்லக்கேளு ஆவாரம்பூதலையிட்டுமுழுகச்சொல்லி, கூரேநீகண்ணுவலியெங்கேபோச்சுகுருவானபோகருடகடாட்சத்தாலே. ௩௭

### தந்தவியாதிக்கெல்லாம்பொடி.

தானேதான் *தந்தமென்றவியாதிக்கப்பா தயவானஅரப்பொடியும்பலந்தானென்று, வேணேதான்பீங்கானில்போட்டுக்கொண்டு வி

தயாகக்காயுந்தான் தான்றிக்காயும், பானே தான்மாசிக்காய்ச் சிஞகா ரம் பண்பானகொ ஜுக்காயின்புளியுங்கூட, காணே தான் துருசுடனே காசகட்டி கணக்காகவுவைகைக்கு விராகன்மூன்றே. ௩௮

*தந்தம்-பல்.

மூன்றாக அவைபெல்லாம்பொடித்துப்போட்டு முனையெலுமிச் சம்பழத்தின்சாறுவிட்டு, நன்றாகவற்றமாடும்ரவியில்லைத்தாலமாக அம்மியிலேயரைத்திட்டப்பா, வன்றாகப்பழச்சாற்றைமைபோலாட் டி பண்பாகப்பொடியாக்கிவைத்துக்கொண்டு, குன்றாகதனுதினமும் விளக்கிவாரீ கொடிதானபலரோக மோடிப்போமே. ௩௯

பல்புழுச்சாக.

போமேநீயின்னமொருவிபரஞ்சொல்வேன்பொல்லாதபுழுவிரு க்கும்பல்லுக்கப்பா, காமேநீகன்னியுடங்கிதயநூலே வாகாகநூலதனை சொல்லக்கேளு, ஆமேநீகீழ்க்காய்நெல்லிவேரை அடவாகக்காப்பிட் டுஆதிவாரம், வாமேநீபச்சரிசிகருப்புக்கட்டி வைத்துமசி கசியென் றுகூடறே. ௪௰

கூறேநீநூற்றெட்டுதரமுஞ்சொல்லிக் கூறடா அவன்பேரைச் சொல்லிமைந்தா, பாறேநீபுழுச்செத்துதிரவெஞறு பண்பாகவேரத னையருமற்றனுஞ், சேறேநீபிடிங்கிவிடுமெழுநாட்குள்ளே செத்துத டாபுழுவங்கேசேரத்தானும், வீறேநீபோகருடகடாட்சத்தாலே வி தமாக இன்னமொன்றுசொல்லக்கேளு. ௪௧

வாய்புண்ணிற்குஎண்ணெய்.

கேளப்பாவாயெல்லாம் புண்ணேவந்தால் கெணிதமுடனெண் ணெயொன்றுசொல்லக்கேளு, காளப்பாவிளக்கெண்ணெபடிதானொன் றுகலமானசங்கஞ்சார்படிதானொன்று, வீளப்பாச்சாணைவரட்டித்த ண்ணீர் விதமாகப்படியொன்றுஅளந்துபாரு, சூளப்பாநீர்பூண்டுச்சா றுநாழி சுருக்கானகஸ்தூரிமஞ்சள்தானே. ௪௨

நீர்ப்பூண்டு நீர்முள்ளி.

தானனகரியசிரகத்திஞேடு தயவாகவகைவகைக்கு விராகன்மூ ன்று, கோனனபொடிபண்ணி யிதனிற்போட்டுக் கொடிதான அக்கி னியிலெரித்துவாங்கி, பானனயெண்ணெயைத்தான்பதத்தில்வார்த்து பண்பாகத்தான்வடித்துயெடுத்துக்கொண்டு, நானனபடியரைக்காவீ தங்கொள்ள நாள்மூன்றுதான்கொள்ள ரணங்கள்போமே. ௪௩

போமேநீவாய்ப்புண்ணும்வெள்ளைப்பாகும் பொங்கமுடன்கடி ப்புவகைசிரங்குந்திருந், தாமேநீசூலையென்றகட்டுந்திரும்தயவாகபத்

தியக்தாறுறுகேளும்,வேமேநீவெங்நீறுமன்னமாகும்விதமாகமற்றொ ன்றுமாகாதப்பா, வாமேநீயேழாநாள்முழுகும்போது வகையாகச்சு றுக்கொன்றுசொல்லக்கேளே. ௪௪

சொல்லுவேன்குதிரையஸ்தியோமத்தோடுசுருக்கானவூஞ்சலு டபட்டைக்கூட்டி, வெல்லுவேன சுறுக்கியதைகியாழும்வைத்து வித மாகவுள்ளுக்குக்கொள்ளச்சொல்லு, கெல்லுவேனுப்பிட்ட பருப்பி ன்சாறு கெணிதமுடநீர்விட்டு அமுதுகொள்ளு, மல்லுவேன் மற்று ளுள்புளியைக்கூட்டு மைந்தனேயெட்டுக்குமாகாதென்னே. ௪௫

குதிரை அஸ்தி குதிரை பெலும்பு.

ஆகாதுவாழையிலேவாழக்காயும் அப்பனே யீராறுநாள்தான்த ள்ளு, வேகாதுவாயுவென்ற பதார்த்தங்தள்ளு விதமான பெண்ணு டையமாய்கையாகா, போகாதில்லாவிட்டால்வியாதியப்பா பொங்கமு டன்தானிருந்தால் பறக்கும்பாரு, ரோகாதுகிரந்தி யெல்லாமகன்று போகும் நோய்தீரும்போகருடகடாட்சந்தானே. ௪௬

தானென்றதடிப்புக்குச் சொல்லக்கேளு தயவான பச்சரணை வாட்டித்தண்ணீர், பாளென்றபடிக்கால்தான் வடித்துக்கொண்டு ப ண்பாகநாள்மூன்றுகொடுத்தபோது, காளென்றதடிப்பெல்லா மோ டிப்போகும் கனலானபுள்ளியென்றமேகந்தீரும், கோனென்றமூன் றுகெடுக்கொள்ளும்போது கொடிதாகமுன்போல பத்தியமாக்காரே.

மேகதடிப்பு புள்ளிக்கு

அரையாப்பு.

காரடா அரையாப்புவந்தபோக்கு கருவாகமருந்தொன்று சொ ல்லக்கேளு, பாரடாகொல்லனுக்கொவ்வைமூலம் பண்பாகமேற்றே லைநன்றாய்ப்போக்கி, சேரடா அப்பையுடக்கொவ்வைமூலம் செயலா னவகைவகைக்குப்பலந்தான்றண்டு, கூரடாகொடுவேலிப்பட்டையப் பாகொடிதாகபலமொன்றுபோடுபோடே. ௪௮

*கொல்லங்கோவைமூலம் ஆகாசகெருடன்கிழங்கு

*அப்புகொவ்வைமூலம் கற்கோவைகிழங்கு

போடேநீர்பூண்டு பலந்தான்ரண்டு பொங்கமுடனிதுவெல்லாம் நறுக்கித்தட்டி, சூடேநீவிளக்கெண்ணே படிதான்பாதிச் சுகமான எ ள்ளெண்ணேபடிதான்பாதி, நாடேநீமிருதாசிங்கியப்பா நாயகனேவி ராகன்ரண்டு பொடித்துப்போட்டு' கூடேநீஇவையெல்லா மொரு மொரென்று கூடையிலேபின்னமொன்று சொல்லக்கேளே. ௪௯

கேளேநீசூலையிடக்கருப்புக்கட்டி கொடியாக பலம் ரண்டுசேர்
ப்போட்டு,வீளேநீபோகாமலிறக்கிவைத்து விதமாகப் பலமறைதா
ன்கொள்ளச்சொல்லி, சூளேநீயெண்ணெயொரு கரண்டிகொள்ளச்சு
கமாக யீராறுவேளையப்பா, கோளேநீவாராமற்பத்தியத்தைக்கேளு
கொடிதாகஉப்பிட்டபருப்புநெய்யே. ருய

கருப்புக்கட்டி-கற்கண்டு.

நெய்யப்பா பசுவினெய்வெந்நீராகும் நேராக இன்னமப்பா மற்
றொன்றுகா,மெய்யான வெண்ணெயைத்தான் மேலிற்பூசி மேன்மை
யாயேழாநாள்நீரைவாரு, வெய்யானடபுளியுடனேயெல்லாஞ்சேரு வி
தமாகக்கண்கட்டியதுகரைந்துபோகுஞ், செய்யானபுரைகண்டால்கி
ழித்துவார்த்துச்செப்புவேன்ரணம்கண்டால்களிம்மைப்போடே.

போடேநீவிளக்கெண்ணை முழுகச்செய்வாய் பொங்கமுடன் வி
ட்டுநாளாதானப்பா, நாமேநீமுழுகப்பாபத்துநாளும் நலமாகயெண்
ணையைத்தான்முழுகும்போது, கூடேநீபெண்மாயையாகாதப்பா கு
ணமாகிவாசமென்று சொல்லுமட்டும், ஆடேநீயரையாப்பு தீர்ந்து
போகும் அடவாகப்போகருடகடாட்சந்தானே. ருச

சகலரணங்களுக்கும் களிம்பு.

தானப்பாகளிம்பொன்று சொல்லக்கேளுதயவான லிங்கமுட
ன்மிருதார்சிங்கு, ஊனப்பா ரசகர்ப்பூரத்திலோடு உத்தமனே வெ
ள்ளையென்றகுங்கிலியந்தான். கோணப்பா கடுக்காயு மாசிக்காயுங்கு
ணமானகாசுகட்டிதான்றிக்காயும் வாணப்பாவேசரெடையாய்க் கல்வ
த்திட்டுவகையாகதானறைக்க விபரங்கேளே. ருரு

கேளேநீபசுவினிட வெண்ணெபோட்டுகெணிதமாயொருசாமம
ரைத்தபின்பு, சூளேநீதண்ணியிலே மிதக்கவைத்துசுகமாகமற்றநா
ளெடுத்துக்கொண்டு, போடேநீசூளையப்பா ரணத்திற்பூச கொடிதா
னரணங்களெல்லாமாறிப்போகும், வேளேநீகளிம்பதுவுஞ் சுருக்கு
மெத்த விதமாகயின்னமொன்றுசொல்லக்கேளே. ருசா

விக்கலுக்கு.

விளம்புவேன்விக்கலுக்குச்சொல்லக்கேளு. விதமாகச் சந்தனத்தி
ன்பட்டையோடு, நளம்புவேன்சாம்பிராணிசமனாய்சேர்த்துதப்பாம
ற்பொடிபண்ணிகாகிதத்திற்,குளம்புகிறேன்சுருட்டியதைபுகைபிடிக்

க்குணமாகவிக்கலது திரும்பாரு, விளம்புகிறேனின்னமொன்றுசொ
ல்லக்கேளு விதமாகக்கலிக்கமொன்று சொல்லுவேனே. ருரு

சன்னிகள் பசாசுகள்விஷயங்கள் மயக்கத்துக்கு அகத்தீசர்கலிக்கம்.

சொல்லுவேன்கிராம்பொடிமிளகுசுக்கு சுகமானவகைரயென்றப
ருப்புகூட்டி, வெல்லுவேனிவையெல்லாம்விராகனொன்று விதமாகஅ
கத்தியனார்குழம்பைக்கேளு, சொல்லுவேன்விராகனது கால்தான்கூ
ட்டிசுகமான* மேனிச்சார்தன்னாலாட்டி, மல்லுவேன்வெற்றிலையின்
சாற்றாலாட்டி மைந்தனேகயிரதுபோல்வைத்துக்கொள்ளே. ருசு

*மேனி குப்பைமேனி.

கொள்ளடா முருங்கையிலைசாற்றிற்றேய்த்துக் குணமாகக்கண்
ணிலேபோட்டபோது, மெள்ளடாசன்னிமுதற்பாகம்போகும்மேன்
மைநாய்விஷமோடுமயக்கம்போகும், விள்ளடாபோகருட கடாட்சத்
தாலே விளம்பினேன் புலிப்பாணிவிளக்கமாக, கள்ளடா மனத்தோ
ற்குக் காட்டொணாதுகருவானவைத்தியந்தானின்னங்கேளே. ருஎ

முகசன்னிக்கு யெண்ணெய்.

கேளேநீமுகஜன்னி நோய்க்கெண்ணையொன்று கெணிதமுடன்
தேங்காய்நெய்படிதானொன்று, சூளேநீவசம்பினொடு வெள்ளைப்பூண்
டு சுகமாகஓமமொடுசதமாங்குப்பை, வாமேநீ வகைக்குவிராகன் பத்
து வனமான பெருங்காயம்விராகனொன்று, ஆளேநீமாலிங்கம்ஆலின்
பட்டை அப்பனேகொச்சியொடுபெருமரமுமாமே. ருஅ

ஆமேநீபட்டைவகைசொல்லக்கேளு அடவாகவகைவகைக்குவி
ராகன்பத்து, தாமேநீ யிவையெல்லாமிடித்து மைந்தா தயவாகசரக்
கெல்லாம்பொடியாப்பண்ணி, வேமேநீயெண்ணையிலேபோட்டுக்காய்
ச்சிவிதமானகடுருபதந்தன்னில்வாங்கி,போமேநீமுழுகிடவேபறக்கு
ஞ்சன்னி பொங்கமுடநாள்விட்டுநான்மூழ்கே. ருசு

சன்னிக்கு யெண்ணெய்.

முழுகவிட்டு எண்ணையொன்று சொல்லக்கேளு முரிங்தோடுஞ்
சன்னியப்பாஎண்ணைகண்டால், பழுக்கானவேப்பெண்ணைப் படிதா
னொன்று பண்பானசிறுபானை தன்னில்வார்த்து, அழுக்கான மயிர்ப்
பீலி யிலைதான்பத்து அப்பனே நறுக்கி நன்று யதனிற்போடு, கழு
தான சூடனொடு சாம்பிராணி * கடுகோடு திப்பிலியு * மாத்தைகூட்
டே. சுய

## * அரத்தை-சிற்றரத்தை.

கூட்டய்யாபெருங்காயமோமத்தோடு குணமானகிராம்பப்பாமி ளகுகூட, நாட்டப்பாரசகர்ப்பூரத்தினோடுநலமான தேகவரஞ்சதமா ங்குப்பை, கூட்டப்பா இவையெல்லாம் பொடியாப்பண்ணி குணமா னசிலையிலே முடிந்துகொண்டு, சாட்டப்பாவகைவகைக்குவிராகனெ ன்று சாதகமாயடுப்பேற்றி தீயைமூட்டே. ௬௧

மூட்டப்பாசிறுசட்டிக்கொண்டுமூடி முக்கியமாய்க் குப்புரவே றுவேர்பாண்டுங், காட்டப்பா அக்கினியையெரித்தபோதுகடிதாகவெ ண்ணெயிலேதீயேபற்றும், மாட்டப்பா அதைவிறக்கி வைத்தபோது மைந்தனேசுடர்காட்ட பற்றும்பாரு, மூட்டப்பா சட்டிகொண்டு மூ டும்போது முக்கியமடாதண்டலங்கிலாசமாமே. ௬௨

ஆமேநீயப்பைமிக * அணைத்துப்போடுஅப்பனேயாறவிட்டுஇற க்கிவைத்து, தாமேநீசட்டியிலேவைத்துக்கொள்ளு தயவானஇஞ்சி ச்சார்படியுங்கால்தான், வேமேநீவெள்ளுள்ளித்தயிலமப்பா விதமா கக்கால்படிதா னளந்துவாரு, போமேநீ* அண்டத்தின் தயிலமப்பா பொங்கமுடன்படிவீசமதிலேவாரே. ௬௩

* அணைத்தல்தீயாற்றல் அண்டத்தின்தயிலம் கோழிமுட்டைதயிலம்.

வாரேநீசுக்கப்பாவிராகனுறு வகையாகசலமதுதான்படிதானுனு சீரேநீபொடிபண்ணிக் கியாழம்வைத்துசிறப்பாககால்படிதானதிலே வாரு, பாரேநீயோட்டைத்தூன்கழஞ்சியொன்று பாங்காக அடுப்பே ற்றித்தீயைமூட்டி, கூரேநீகடுகுபதந்தனிலிறக்கிகுணமாககலசத்தில் வார்த்திடாயே. ௬௪

வார்த்தவுடன் கணபதியை துதித்துநாடி வகையாகசோடசபூங் தூபஞ்செய்து, பார்த்தவுடனுள்ளுக்கு கொடுத்தபோது பாங்கான சன்னிமுதல்வலிப்புதோஷங், காத்தவுடன் மூன்றுநாள் கொடுக்கு ம்போது காரடாபத்தியந்தானென்றுமாகா, சேர்த்தவுடனேழாவ ள்நீரைவார்த்து செயலானஉப்புமுதல்கூட்டலாமே. ௬௫

### சேர்க்கை காமாலை வீக்கம் நீர்க்கோவை பாண்டுமகோதரம் பீலிகை இவைகளுக்கு கியாழம்.

ஆமேநீர்முள்ளிகீழ்க்காய்நெல்லிஅப்பனே வீழிவேர் கோவைத் தண்டு. வாமேநீபூவரசம்பட்டை*கையான்வளமானசெந்தி தொட்டி வெட்டினோடு,தானேநீசிறுபூளைவேரினோடு தயவாகச்சம்புடையகளி

மப்பா, நாமேநீநெருஞ்சுவேர் சிறுமைகீரையின்வேர் நலமானநிலவா
கைஊஞ்சல்பட்டைகேளே. சுசு

கேளேநீஊஞ்சலென்றபட்டைகூட்டி கெணிதமுடன் வகைவ
கைக்குப்பலந்தானாறு, சூளேநீசரக்குவகைசொல்லக்கேளு சுக்கான
கடுக்காய்ரோகணியுங்கூட்டி, வீளேநீகருஞ்சீரகத்தினோடு விதமான
காட்டுசீரகமுங்கூட்டி, பாளேநீயில்லையப்பா திப்பிலியுங்கூடப் பண்
பான வகைவகைக்குவிராகனாரே. சுஎ

ஆரேநீ இவையெல்லாமிடித்துத்தோண்டி அடவாகஆறுபங்காய்
நிறுத்திக்கொண்டு, ஊரேநீயெட்டொன்றாய்க்குருக்கக்காய்ச்சி குண
மாகத்தான்பிழிந்துவடிதான்கட்டி, சேரேநீகொடுத்துவர ஆறுநாள்
தான் செயலானபத்தியந்தானுப்பாகாதே. சுஅ

ஆகாதசோகைகாமாலைவீக்கம் அடவானநீர்க்கோவை பாண்டு
போகும், போகாதமகோதரமும்பீலிகையும்போகும் பொருமலுட
ன்மேலிளைப்புத்தீர்ந்துபோகும், நோகாதஏழுநாள் நீரைவாரு நணு
க்கமாயப்பிடப்பருப்புங்கூட்டி, வேகாதமற்றுநாள்புளியுஞ்சேரு வி
தமாக இந்தநோய்திரும்பாரே. சுகூ

### பித்தவெடிப்புக்கு.

பாரேநீபித்தவெடிவந்தானாற் பாங்கானமருந்துடையஇலையை
வாங்கி, சீரேநீபசுவின்பாலூறவைத்துச் சிறப்பாகமூன்றுநாட்குடிக்
கச்சொல்லு, வீரேநீபத்தியந்தான்பாலுஞ்சோறும் விதமாகஏழுநா
ள்நீரைவாரு, போரேநீபோகருடகடாட்சத்தாலே பேதமில்லைப்புலி
ப்பாணிபாடினேனே. எய

### னீரிலிறத்தங்கண்டால்.

பாடினேநீர்தனிலே ரத்தம்வீழ்ந்தால் பாங்கானபுழுங்கரிசிபல
ந்தானொன்று, கூடினேன்விராலியிலை பலந்தானொன்று குணமாகவரி
சியைத்தானூறவைத்து, சாடினேனிடித்தெடுத்துக்கொடுப்பாயப்பா
சார்வாகமூன்றுநாளாறுவேளை, நாடினேனிந்தவிதங்கொடுத்தபோது
நடுநடுங்கியோடிவிடுந்திண்ணந்தானே. எக

### முழங்கால்வாதம்.

தானென்னமுழங்காலின்வாதத்துக்கு தகவாகவீழியிலைப்புண்
ணைக்குப்பூண்டும், கோமென்றஆவரையினிலையுங்கூடகுணமாக இலை

மூன்றுஞ்சமனாய்ச்சேர்த்து, தேனென்றவெள்ளுள்ளிப்பூண்டே மூன்றுந் தெளிவா தாணிடித்து எடுத்துக்கொண்டு, வேனென்றவிளக்கெண்ணெ யொன்றில்விட்டு விதமாகவைத்திட்டுக்கட்டிப்போடே. எஉ

போடேநீயிந்தவிதமா றுநாளும் பொங்கமுடன்வேத்திட்டுக்கட்டும்போது, ஆடேநீமுழங்காலின்வாதமெல்லாம் அன்றேடுபோய்விகமகலத்தானே, கூடேநீநாட்டுசென்றால்பிடித்துக்கொள்ளுங் குணமாடு மாட்டாதேகூர்ந்துபாரே. எ௩

இரணங்களுப்புலகை.

விளம்பினேனின்னமொருகருவைக்கேளு விதமானரணங்களென்றவியாதிக்கெல்லாம், தளம்பினேன் கொழுச்சியுட வேறுபட்டைதயவாகயூரவைத்துவைய த்தட்டிக்,குளம்புகிறேன் சங்கன்மேல்வைத்துப்பின்னும் நலமாகமுன்பட்டைநிறையமூடே. எச

*கொழுச்சி கொட்காய்வேளை.

முடியபின்தலையைவைத்துப் புறையவாங்கி முக்கியமாய் விழுங்கியதைவாசந்தன்னில்,நாடியமுன்னால்மூன்றுவேளையாகும்நலமாகக்குடித்தவுடன்பாற்சோறுண்ணு,தேடியபின்னேந்தாநாட்பத்தியமாய்க்காரு தெளிந்தபின்பு ஆறுநாள் தலையைமுழ்கி,பாடியபின்னேழநாளுப்பைக்கூட்டு பண்பாகஎட்டாநாள்புளியைச்சேரே. எரு

திரும்வியாதி.

சேரப்பாகரப்பனென்ற வகைகளெல்லாஞ்சிறப்பாக ஈராறுநாள் தான்தள்ளு, பாரப்பாகண்ணுவலிகண்ணேசையோடு பாங்கான விப்புருதிகண்டமாலை, வீரப்பா அரையாப்புகுலையோடு விதமானபிளவையொடுலிங்கப்புற்று, கூரப்பா ரணங்களென்றநோய்களெல்லாங்கூசாமலோடிவிடுங்கொள்கைபாரே. எசு

வாய்வுகுத்தலுக்கு ஔஷதம்.

பாரப்பாவாயுவென்றகுத்துக்கேதான் பண்பானகொடிவேலிப்பட்டையோடு,வீரப்பாசுக்குடனேபரங்கிப்பட்டைவிதமானபிரமனுடகிழங்குக்கூட, சேரப்பாவகைக்குவிராகன்மூன்று செயலானநாலுபடிசலத்தைவிட்டு, கூரப்பாஎட்டொன்றாய்க்கியாழம்வைத்து கொடுத்தவுடன்வாயுவென்றமேகம்போமே. எஎ

போமப்பா அந்திசந்திமூன்றுநேரம் பொங்கமுடன்குடித்துவி டவாயுதீரும், ஆமப்பாபத்தியந்தா னப்பாகாது அடவாக வைத்தா லெல்லாங்கூடும், வாமப்பாகொடிவேலி சுருக்குக்கூட்டுவகையாக க்கிஷாயம்வைத்துண்டபோது, தாமப்பாகொடிவேலி சுருக்குமெத்த தயவாகவாயுவெல்லாங்குணமதாமே. எஅ

கிராந்திக்கெண்ணெய்.

குணமாகப்பூசினிக்காய்ச் சாறுபடிரண்டு குருவானதாழையுட விழுதுச்சாறு, மணமாகுங்கற்றாடழைகுமிழின்சாறுமைந்தனேநெல்லி க்காய்கையானசாறும், வணமாகும்வல்லாமைவில்வத்தோடும்வணமா னதொடப்பையப்பா வீழியோடு, சிணமாகும் ஆதொண்டைஇலைநீர் பூண்டு சிறப்பான அப்பையுடக் கிழங்குதானே. எகூ

* கொடப்பைபொன்னங்காணி.

தானென்றபாச்சானே வாட்டித்தண்ணீர் தயவானசங்கோடு நீர் ப்பூலவும், மானென்றமென்னையுடப்பாலையப்பா மைந்தனே தக்கா ளிஇலையினேடு, கோனென்ற ஆனையுட நெருஞ்சிலோடுகொடிதான ஆல்விழுதுஅருதன்வேரும், பானென்றவகைக்குச்சார்படியொன்று கும் பாங்கானபாண்டத்தில் விட்டிடாயே. அய

விட்டவுடன்சாறுவரா மூலிஎல்லாம் விதமாகநீர்விட்டுப் பிழிந் துகொண்டு, சட்டமுடன் அடுப்பேற்றி வற்றிக்காய்ச்சிசட்டிதனை இ றக்கியபின்சொல்லக்கேளு, கட்டவுடன் இளநீரும் பசுவின்பாலும் கருவானபனிநீரும் காடிதண்ணீர், முட்டமுடன் * கோசலமும்அத் தினீரும் குணமாகவகைவகைக்குப் படிதான்வாரே. அக

*கோசலம் கோமயம்.

வாரேநீகோவையெல்லாம் எட்டொன்றுக்கி வகையாக எண் ணெயப்பாவடிக்கச்கேளு, சீரேநீசிற்றாமணக்கின்முத்தைவாங்கிசிறப் பாகக்காடியிலே ஊறவைத்து, தீரேநீபசுவின்பால்விட்டுமைந்தா திற மாகவேகவைத்து உலரப்போட்டு, காரேநீஇளநீரா லெண்ணெயூற் றிக் கணக்காகஐந்துபடியெண்ணெய்வாரே. அஉ

வார்த்தபின்புவேருவகை சொல்லக்கேளு வகையாகநிலப்பனை யும் அசுவகெந்தி, காத்தபின்புநிலக்குமிழுஞ் சித்திரமூலம்கருவான தாமரையின் கிழங்கினேடு, ஏத்தபின்புபூமிச்சர்க்கரையுங்கூட்டுஇந் தானதுத்தியின்வேர் * நீர்நெருப்ப, சேர்த்தபின்பு வகைவகைக்குப் பலந்தானென்று சேர்த்தரைத்துஎண்ணெயிலே போட்டிடாயே. அங

அசுவகெந்தி-அக்கிரக்கிழங்கு-நீர்செருப்பு-கல்லுருவி.

போட்டபின்புசரக்குவகை சொல்லக்கேளு பொங்கமுடன் சாதிக்காய் சாதிபத்திரி, கேட்டபின்பு லவங்கத்தில் மதுரமாஞ்சில்கெணிதமாய்ச்சோம்போடேலமப்பா, மூண்டபின்புதிரிகடுகுதிரிபலாதிமுக்கியமாய்வெந்தயஞ்சீரகமுமாகும், காட்டப்பாகஸ்தூரிமஞ்சளோடு நலமானரோசனையும் பூரமாமே, அச

ஆமேநீவால்மிளகு கசகசாவும் அடவானசிறுநாகங் கடுக்காய்ப்பூவும், வாமேநீமல்லிகைதாசமும்பத்திரி வகையான (சிறுலவங்கங் கார்போகந்தான், தாமேநீசினிகற் கண்டியோடு தலையான() கூகைநீறு முத்தக்காசும், ஆமேநீவகைக்கு கழஞ்சிமூன்று அடவாகப் பொடிப் பண்ணிப் போட்டிடாயே. அரு

() சிறுலவங்கம்-சன்னலவங்கப்பட்டை.
() முத்தக்காசு-கோரைக்கிழங்கு.
() கூகைநீறு கூகைக்கிழங்கின்-மா.

போட்டபின்பு ஆவினெய்படி தானைந்து பொங்கமுடன் தானளந்துஅதனில்வாறு, நாட்டபின்புமெழுகுபதந்தனிலிறக்கி நாயகனே கடுகோடேஒன்றிலூற்றிக், கூட்டிபின்புகணபதியைப் புகழ்ந்துநாடி குருவினுடதாள்பணிந்து பூசைசெய்து, ஆட்டபின்பு எண்ணெயொருகரண்டிகொள்ளு அடவாகப்பத்தியந்தா னில்லைதானே. அசு

தானென்றவாயிலேநான் புண்ணிேேடு தயவாகத்தடிப்புமுதல்புள்ளிமேகம், வானென்ற செங்கிரந்தி கருங்கிரந்தி வளமானபிரமியங்கள் கிரந்திபுண்ணு, கோனென்றபெருஞ்சிரங்கு சிருசிரங்குகொடிதானமேகங்களிருபத்தொன்றுங், தேனென்றதேகமப்பா அருணன்போலாந் தெளிவானபேகருட கடாட்சந்தானே. அஎ

மேகம்-உக-க்கும்-வாய்காற்றத்திற்கும்-எண்ணை.

தானாகஇன்னமொன்று சொல்லக்கேளு தயவான விளக்கெண்ணைபடி தான்ரண்டு, மானாகஇளநீரும் பசுவின்பாலும்மைந்தனேகாடியுடன் பொன்னாங்கண்ணி, கோனாக ஆடுதொண்டை இலைவல்லாரைக் குணமானவில்வயிலை அறுகன்வேறு, வானாககள்ளிவையும் வாட்டித் தண்ணீர் வளமாகநீர்ப்பூண்டு சாணிப்பாலே. அஅ

பாரப்பா வகைவகைக்குப் படிதானொன்று பாங்காக சரக்குவகை சொல்லக்கேளு, சாலவேவெந்தியஞ் சீரகத்தினோடு சார்வாக கொத்தமல்லி சிறுநாகப்பூ, கோலமுடன் ஜாதிக்காய்கிராம்பு யேலங்

குணமான அதிமதுரங்கூகைநீருஞ், சேலமாய்சீனமென்றகாரந்தானு
ஞ் செயலான வகைவகைக்குவிராகனென்றே. ௮௬

ஒன்ருனயிவையெல்லாம்பொடிந்துப்போட்டு உத்தமனேசர்க்க
ரைதான்பலமேயொன்று. பன்ருகக்காச்சியது மெழுகதானல் பக்கு
வமாய்த்தான்வடித்து எடுத்துக்கொண்டு, நன்ருகதுட்டைதான்
கொள்ளும்போது, நலமாகருண்டலத்தில்சூடேதப்பா, ஒன்ருகமே
னியது ஊரும்பாரு உத்தமனேவாய்நாற்றம்போகும்பாரே. ௬௰

பாரப்பாபோகருடகடாட்சத்தாலே பண்பானபுலிப்பாணிவிள
ங்கத்தானுஞ், சிராகக்கொக்கோகத்திரட்டொன்றப்பா திறமுடனே
நூற்றைம்பதுவுஞ் சொன்னேன், கூறப்பாவாடைபதி னுறிற்சொன்
னேன் குருவானஞானமொடுதொண்ணூற்ருறு, வீரடா சோதியமு
ன்நூற்றுக்குள்ளே விளம்பினேன்நேத்திரம்போல் தோணும்பாரே.

எலிகடி-௰௮-க்கு.

பாரேநீஇன்னமொன்றுசொல்லக்கேளு பதினெட்டு எலிக்கடிக்
குமருந்தை அப்பா, வீரேநீகரும்பூனைமலத்தைவாங்கி விதமாகக்கழற்
சிக்காயளவுசேர்த்து, சேரேநீமூன்றுநாளாறுவேளை செயலாகக்கொ
ண்டிடவேதீரும்பாரே. ௬௨

பாரப்பா ஆறுநாள்பத்தியமேகாருபண்பானவுப்பு முதலொன்று
மாகா, வீரப்பாஏழாநாள்தலைமுழுகு விதமாகவுப்பிட்ட பருப்பு
மாகுஞ், சேரப்பாஎட்டாநாளெல்லாங்கூட்டிச் செயலாகநாட்சென்
ருல்சொல்லக்கேளு, கூரப்பாமூன்றுகெடுகொண்டபோது குணமாக
எலிக்கடிகள்தீருந்தானே. ௬௩

பேய்-நரி-நாய்கடிக்குமருந்து.

தானென்றபேய்நரிகடித்ததானல் தழைத்தமணத்தக்காளியிலை
ச்சாரப்பா, பானென்றபடிகால்தான் கொடுப்பதப்பா பாங்காகமூன்
றுநாளாறுவேளை, கோனென்றபத்தியந்தானுப்பாகாது குணமான
யேழுநாள்நீரைவாரு, வேனென்றபேய்நரிநாய் கடிதான்தீரும் வித
மாகமிதின்தலைமேலேபூசே. ௬௪

பூனைகடிதீர மூலிகை.

பூசியேபூனையுடன் கடிதான்தீர புனிதமுள்ள பூனைதொழும் பட்
டைவாங்கி, ஆசியேபசுவின்பால்தனிலரைத்து அப்பனேபத்தியமாய்

க்குடிக்கச்சொல்லு, கூசியேமுன்போலபத்தியமேகாருகுண முள்ள நீலிவேர்தனை அரைத்து, வாசியோராறுநாளும்பூச வகையாகப்பூனை கடிதீருந்தானே. கூ௫

* பூனைவணங்கி-குப்பைபேனி-தொழும்வணங்கும்.

வண்டுகடிக்கு மருந்து.

திருமப்பா வண்டுகடிவந்தபேர்க்குத் திறமாகமருந்தொன்று சொல்லக்கேளு, மாருமப்பா வெள்ளாட்டுக் கறுத்தபாலு மைந்தனே தினையரிசிபடிதான்காலு, வீருமப்பாமூலியொன்று அறியச்சொல்வேன் விதமான ஆடுதொடா மூலிச்சாறு, கூறுடனே வேகவைத்து அந்திசந்தி குணமாகக்கொண்டிடவே திரும்பாரே. கூசு

பாரேநீசாரதுதான் படிதான்வீதம் பண்பானபத்தியந்தா னுப்பாகாது, கூறேநீவெள்ளாட்டு பாற்சோருண்ணு குணமாக ஏழுநாள்நீரைவாரு சேரேநீவசம்புடனே நீலிவேருஞ்சிறப்பாகத்தானரைத்துப்பூசுபூசு, தீரேநீவண்டுகடி யெல்லாம்போகுந் திறமானபோகருடகடாட்சந்தானே. கூஎ

தானேதா னிதுபோல விஷமுமுண்டு தயவாகமேகவகை யிதுபோலுண்டு, கூனேதான்செய்தொழிலு மிதுபோலுண்டு குடிலமாய்த்தாமரையு மிதுபோலுண்டு, சோனேதா னிதுபோலேதீராவிட்டால்துணிவாகரசபங்கம் கொள்ளச்சொல்லு ஊனேதான்கண்டுகண்டு மருந்துசெய்ய உத்தமனே இல்லாவிட்டாலேய்க்கும்பாரே. கூஅ

பாரேதான்பூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பான எருக்கம்பூகொண்டுவந்து, சீரப்பாபூவேழு கொடுத்துப்பாரு சிறப்பாக ஞாளிமலம் புகையைக்காட்டுக், கூரப்பாநாட்சென்றால் மண்டலங்கள் குணமாகப்பத்தியந்தா னில்லைபாரு, வீரப்பா பூரான்தான் தடிப்புமாறும்விதமாக அதின்விஷமுந்தீருதாலே. கூகூ

* ஞாளிமலம்-நாய்மலம்

செய்யான்-பெருச்சாளிகடிக்கு.

தானென்றசெய்யான் தான்கடித்தபேர்க்குதயவாகக்கொல்லனுடக்கோவைமூலம், பானென்றப க்களவுகொள்ளச்சொல்லு பண்பானமயிற்பீலிபுகையைப்போடு, கோனென்றசெய்யான்தான் விஷமும்போகுங்குணமானபெருச்சாளிகடி தான்தீர்க்க, வேனென்ற அறுகம்வேர்வெள்ளி தன்னிச்விதமாககுடித்தவுடன்தீர்ந்துபோமே, ௱

* மயில்பீலி-மயிலிறகு.

## தேள்காலிவிஷந்தீ மூலிகை.

போமப்பா தேள்காலிகடித்தபேர்க்குபொங்கமுடன் பெரியகங் கைவேரைத்தானும், வாமப்பாநீரிலேஉரைத்துப்பூசு வளமாகமட்டி ப்பால்புகையைப்போடு, ஆமப்பாகடுகடுப்பு அடங்கிப்போகும் அப் ப்பனேதேள் காலிவிஷமும்தீரும், நாமப்பாபோகருட கடாட்சத்தா லே நலமாகப்புலிப்பாணிபாடினேனே. ௱க

* மட்டிப்பால்-சாம்ராணி.

## சகலவிஷங்களுந்தீர மருந்து.

பாடியதோர்விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாகவெட்டிபழந் தன்னைவாங்கி, கூடியதோர்சட்டியிலேவேணமட்டுங் குணமாகத்தா னெடுத்துவேப்பெண்ணைவிட்டு, நாடியேஅடுப்பேற்றி வேகவைத்துந லமாகஉருட்டியதைச்செப்பில்மூடி, மூடியேவிஷந்தீண்டிவந்தபேர்க் கு தூதுளங்காயளவுகொடுத்திடாயே. ௱உ

## விஷத்துக்கு-நசியமாலிக்கம்.

கொடுத்திடவேவிஷத்துக்குநசியமொன்று குணமாகநீலமென்ற துரிசைவாங்கி, அடுத்திடவேவிராகனிடை துணியில்வைத்துஅடவா கசிறுநீரால்நசியம்பண்ணு, எடுத்திடவேவிஷமெல்லாமிறங்கிப்போகு ம்இதமானகலிக்கமொன்று இயம்பக்கேளு, கொத்திடதேசிறுபூளைக சக்கிக்கண்ணில்தேராமல்சிங்கமென்றுகொட்டிப்போடே. ௱௩

## சிறுபாம்புகடிக்குமருந்து.

போடப்பாசிறுபாம்பு கடித்தபேர்க்குப்பொங்கமுறுசிறிகுறிஞ் சான்வேரைவாங்கி, காடப்பாவென்னீரிலரைத்துக்கொண்டு நலமாக அந்திசந்திமூன்றுநாளுண்டு, வாடப்பாபத்தியந்தானுப்பாகாது வள மானவழூநாள்ஜலத்தைவாரு, சாடப்பாசிறுபாம்பு கடிப்புமாறுஞ்சா ர்பாகபோகருடகடாட்சந்தானே. ௱௪

## குஷ்டத்துக்குமருந்து.

தானென்னகுஷ்டநோய் வந்தபேர்க்குத் தயவாகமருந்தொன் றுசொல்லக்கேளு, ஊனென்றசெவ்வலரிவேரையப்பா உலரவிட்டுக் குழித்தயிலமாகவாங்கிப், பானென்சகுப்பினி லடைத்துக்கொண்டு டாகண்பாகச்சிறுகுச்சித்தயிலத்திட்டு,யேனென்றஒருதுளித்தண்ணீரி ல்குத்தி இதமாகத்தான்கலக்கிக்கொடுத்திடாயே. ௱௫

கொடுத்திடப்பா நாள்மூன்று காலைவேளைக் குறுதியப்பாவடியுமடாரணங்கள்தோறும், அடுத்திடப்பா பத்தியந்தானுப்பாகாது அடைவாகஏழாநாள்நீரைவாரு, விடுத்திடப்பா உப்பிட்டபருப்புக்கூட்டி விதமாகமற்றுநாள்புளியைச்சேரு, எடுத்திடப்பாகுஷ்டநோய்தீர்ந்துபோகும் இதமானபோகருடகடாட்சந்தானே, ௱௬

* குருதி-இரத்தம்.

மருந்திட்டுக்குச்சிட்சை·

தானாகஇன்னமொன்றுசொல்லக்கேளு தயவாக மருந்திடுகொண்டபேர்க்கு, கோனாகஎண்ணெயிட்டு முழுகச்சொல்லிக் குணமாகரசம்விட்டுஅன்னமீய்ந்து, வேனாகத் தேங்காயின்பாலைவாங்கிவிதமாகக்கரும்பாலைச்சக்கரையுஞ்சேர்த்து, வானாகத்தேங்காயின் பாலையுண்டு வகையாகக்கம்பிளிமேல்படுக்கச்சொல்லே. ௱௭

சொல்லப்பாமுருங்கையென்றஇலையைவாங்கி சோரவேவதக்கிபதைசார்பிழிந்து, அல்லப்பாசாறுபடிகாலேயாகும் அடவாகஆவின்பால்நேரேசேர்த்து, அல்லப்பாகாலமேகொடுத்தபோது அடவாகப்பேதியிலேமருந்துவிழும், கல்லப்பாவிழுந்தவுடன் ஸ்நானம்பண்ணுநலமாகவேணதெல்லாங்கூட்டிக்கொள்ளே. ௱௮

நஞ்சுண்டார்க்குகெர்ப்பமழிக்கவும்.

கொள்ளவே நஞ்சுண்டபேர்கட்கெல்லாங் குணமாக* நீலிவேர்பட்டைதன்னை, அள்ளவேகாடியிலேஅரைத்தூட்ட அடவாகநஞ்சுகக்கிமயக்கம்வாங்கு, மெள்ளவே அளிகருவை யழிக்க வேண்டில் மேன்மையாய்ச்சேர்த்தனையிடித்துமாமோல், தள்ளவேபூநீறு படிதான்போட்டுத் தயவாகநீறுபடியொன்றுவாரே. ௱௯

* நீலிவேர் அவுரிவேர்.

வாரப்பாபடிகால்தான்வாங்கிக்கொண்டு வகையாகமுந்நூரில்பிசைந்தபின்பு, தாரப்பாஅந்திசந்தி மறுநாளொன்று தான்கொடுக்ககர்ப்பமது அழிந்துவிழும், கூறப்பா இந்நீரைமூன்றுநேரம் குறிக்கண்டால்மாவப்பாகொடுக்கப்போகா, சேரப்பாஇந்தரிசிகஞ்சிவைத்துசிறப்பாகக்கருப்புக்கட்டிப்போட்டுக்கொள்ளே. ௱௰

கொள்ளவேஉதிரமதுஅதிகம்கண்டால் குணமான வேம்பின்பட்டைநனைத்துவைத்து, நள்ளவே மோருவிட்டு பிழிந்துக் கொண்டு நலமாகஒருநாளிலாருவேளை, வெல்லவேகொடுத்துவிடஉதிரம்நிற்கும் மேன்மையாயறுதிங்களப்பாகேளு, தெள்ளவேகுச்சியிலே துணியைச்சுற்றி தெளிவாகஎருக்கம்பால்தடவிவையே. ௱௧௧

வையப்பா *அல்குலிலேவிரலேவிட்டு வகையாகச்சுழற்றியங்கே பார்க்கும்போது, ஐயப்பாஉந்தியிடப்பவளம்போல அடவாககுழி யொன்றுஇருக்கும்பாரு, வையப்பாகருக்குழிதான்வாயைமூடி வகை யாகத்தானிருக்கு மறிந்துபார்த்து, கையப்பா விரலோடேகுச்சியிட் டுக் கணக்காகநெல்சீளம்வைத்துப்பாரே. ாகஉ

*அல்குல்-பெண்குறி.

பாரப்பாஉதிரமதுகாணுமட்டும் பண்பாகஇம்முறைபோல்பாங் காய்வைநீ, சேரப்பாமல்லாந்துபடுக்கச்சொல்லு செயலானவிடியுமட் டுமிந்தபாகம், வீரப்பா இடுப்புவலிசுரமுங்காணும் விதமானதலைவலி யுமதிகமாகுங், கூரப்பாதிங்களொருபத்தாறுலுங் குணமாகக்கழிந்து விடுதிண்ணந்தானே. ாகங

விதவையைக்கூட பிள்ளையில்லாதிருக்க

தானப்பாகன்னியர்கள்விதவைகூடித் தான்தழுவவேணுமென் றால்சொல்லக்கேளு, மானப்பாதலைமுழுகும்பக்கந்தன்னில் மைந்த னேபுணர்ந்திடவேகெர்ப்பமில்லை, வீணப்பா இதுவறியமாட்டாமல் தான் விதமாகக்குலைகள்வந்துநேரும்பாரு, ஊணப்பாஇதுவல்லோ பாவம்பாவம் உத்தமனேஅறிவாயே அறிந்துதானே. ாகச

()பக்கம்-வீட்டுக்குத் தூரமாகிறபட்சத்தில்

பார்வைக்குக்குளிகை.

தானென்றபார்வைக்குக்குளிகைசொல்வேன் தயவாகபுண்ணாக் கிலையும்வீழியோடும், மானென்றஆயிலைரஞ்சங்குகோவை மைந்த னேசின்னியொடு()முட்டைகாறி, வானென்றநிலவாகை () இராசக னிவித்து வளமானமுசல்களூவாகையப்பா, கோனென்றகோழியுட அவரையப்பா குணமானஅறுகம்புல்தக்காளித்தானே. ாகரு

() முட்டைகாரி-எருமுட்டைபீகாரி

() இராஜகனிவித்து-எலுமிச்சம்பழம்.

தானப்பா()வேலியென்றபரித்திகூட்டித் தயவானமுளகாயினி லையுஞ்சேர்த்து, பானப்பா()பெருமருந்து இலையுங்கூடப் பண்பான தோதகத்தின்மேனியப்பா, ஆணப்பா இலுப்பையுடஇலையுங்கேளு அடவாக வகைவகைக்குநிராகவேந்து, ஊணப்பாபெருங்காயம் விரா கனைந்து உத்தமனேசீனமதுவிராகனஞ்சே. ாகசா

அஞ்சப்பா இவையெல்லா மரைக்கும்போது அடவாகஎலுமிச் சம்பழச்சார்விட்டு, மஞ்சப்பாகாற்சாமமரைக்கும்போதுமைந்தனே மெழுகதுபோலிருக்கும்பாரு, தஞ்சமாய்க்குளிகையப்பாகழஞ்சிவீத ம் தான்சேர்த்துநிழலுலர்த்திபானம்பண்ணு, வஞ்சமில்லாமந்திரத் தை ஆயிரந்தானோதி வகையாகத்தேவிக்குப்பூசைசெய்யே. ௩00கஎ

தேவிக்குஎசமூலம்.

செய்யவேமந்திரந்தான்-அம்-உம்-ஓமென்று செப்படாபம்மோ டேறீயுஞ்சேரு,பையவேஸ்ரீயுடனேசுங்குவங்குபண்பாகஆயிரத்தெ ட்டேபோது,நையவேபார்வையுடன்சூனியங்கள்நன்றாகத்தீர்ப்பதற் குக்குளிகையொன்று, உய்யவேஅப்பையுடசாற்றிக்கொள்ளு உறவா னதேங்காயின் பாலின்கொள்ளே. ௩00கஅ

சூனியந்தீரப்புகை.

கொள்ளப்பாமஞ்சளேநீ யரைத்துப்பூசி குணமானவெந்நீரில்ஸ் நானம்பண்ணு, அள்ளப்பாபகையொன்றுசொல்லக்கேளு அடவான எட்டிவிரை எட்டிப்பட்டை, கள்ளப்பாசெக்கடிகீழ் மண்ணுமஞ்சள் பணிவானகொட்டைவிரைத்தூளுங்கூட்டி, பள்ளப்பா மாவிலிங்கம் ஆலின்பட்டை உத்தமனேவேம்பின்மேல் காக்கைகூடே. ௩00கக

கூடேநீஆமையுடஓடுங்கூட குணமான குதிரையுடகுளம்புங் கூட்டி, ஆடேநீபாம்பின்சட்டைதிட்டுச்சீலை அடவாகக்காணம்பூசி றுகிரைவேறு, நாடேநீமாடடுக்கொம்புமூஞ்சூறுத்தோல் நலமில்லாக் கம்பிளியமுசுறுமுட்டை, சாடேநீ இவையெல்லாமொன்றாய்ச்சேர்த்து சார்வாகத்தானிடித்து எடுத்துக்கொள்ளே. ௩00உ0

கொள்ளப்பா இந்தைடைக்குங்கிலியங் கொடிதாகத்தானிடித்து எடுத்துக்கொண்டு, மெள்ளப்பாபுகைபிடிப்பாய் அந்திசந்திமேன்மை யாய்பத்தியமென்றவேளைமூன்றும், கள்ளப்பாஏவலென்றகுணங்கள் யாவுந்தருவான்புகைபில்லிஆக்கைவைப்பு, விள்ளப்பாசக்கரங்கள் ஓ லைவாட்டல் விதமானவேர்பிடுங்கல்தீருந்தானே. ௩00உக

பிரம்மைக்கு அண்டபற்பம்.

தானென்றபிரமையதுகொண்டபேர்க்குத் தயவாகமருந்தொன் றுசொல்லக்கேளு, கோனென்றபோகருட கடாட்சத்தாலே குண மான புலிப்பாணிவிளக்கஞ்செய்தேன், ஊனென்றகபாலத்தைஎடுத் துவந்து உத்தமனேஎலுமிச்சம்பழச்சாற்றாலே, நானென்றநீனம தைப்பொடித்துப்போட்டு நலமானகல்வத்திலரைத்திடாயே. ௩00உஉ

அரைத்தெடுத்தவில்லைதட்டி யுலரப்போட்டு அடவாகப்புடம் போட்டு எடுத்துக்கொள்ளு, விரைத்தவுடன்பொடியாக்கி பதனம்ப ண்ணி விதமாகவிராகனெடை கொடுக்கக்கேளு, உரைத்தவுடன் கத் தபத்தின்பாலையப்பா உறவாகத்துட்டெடைதான் ரண்டேயாகும்,கு ரைத்தவுடனிஞ்சிச்சாறதனிற்பாதி குணமாகவிதுநேர சர்க்கரையுங் கூட்டே. கஉங

* கத்தபம்கழுதை.

கூட்டப்பாஈராறுகாளேகொள்ளே குணமாக அந்திசந்தியிந்த பாகம், ஆட்டப்பாகசியமதநம்மைச்சாறு அடவாகத் தான்விட்டுச் சொல்லக்கேளு, சூட்டப்பாபேய்பீர்க்குபேய்மிரட்டி சுகமானபேய் ப்புடலும்பேய்க்குமட்டி, நாட்டப்பாபேயத்திபேயாந்தும்மை நலமா னஎலுமிச்சம்பழமுமாமே. கஉச

ஆமேநீயிச்சாற்றைதேய்த்துத் தேய்த்து அடவாகநூறுகுடஞ் சலத்தைவாரு, தாமேநீஈராறுநாள்தான்வாரு தயவாகப்பத்தியந்தா ன்சொல்லக்கேளு, வாமேநீபச்சரிசி பருப்பினோடுவளமாகதான்கொ டுப்பாயுப்பாகாது, ஆமேநீதேவரொடுபிரமைபித்தம் அடவானவஞ் சனையுந்திருந்தானே. கஉரு

கிரகசாரத்துக்கு.

திருமப்பாசாந்தியொன்று சொல்லக்கேளுதிட்டமாய்க்கிரகமெ ன்றசாரந்திர சாருமப்பாபன்னிரண்டுராசியோற்குச் சகலமுமாங்கி ரகங்களிருக்கும்பாரு, வீருமப்பாவீட்டைத்துத் தகடுதன்னில் வித மாக்கும்பம்வைத்துச்சோடசஞ்செய்து, கூறுமப்பாஓமமுதல்சாந்தி க்கெல்லாம் கூறுவோமந்திரத்தைச்சொல்லக்கேளு. ருாஉசு

நவக்கிரகதியானம்,

ேளநீவக்கிரகதியானஞ்சொல்வேன் கெணிதமுடன் அம் ஸ்ரீ யும்சம்ஸ்ரீயும், ஆளேநீஸ்ரீநசிஸ்ரீதசிகூஉம்கிலி அடவாகசாச்சரீநசிஅ ங்கிசநசியென்று, நாளேநீஆயிரத்தெட்டுருவையோதி நலமாகசாந்தி செய்துமருந்தையூட்டி, கேளேநீகேடிவிஷங்க ளெல்லாம்போகுங் கெ டிதானஅகாத்தியமென்றுற்செய்யொணுதே. ருாஉஎ

செய்யாதேபொய்க்கோபங்கொலைத்திருட்டு செயலானவைத்தி யங்கள் செய்யும்பக்கம், வையாதேபெண்களுடன்சேர்ந்திடாதேமை யல்மிகக்கொள்ளாதேகிருதுசெய்யாதே, வையாதேயவரிடத்தில் வீ ண்பேசாதே வகையானவல்லமையே சொல்விடாதே, பையாதேகம லத்தில்தேனையுண்டு பண்பானவண்டதுசொல்பொருளைசாற்றே. ()

## சூனியத்திற்கு எண்ணெய்.

சாகாதேசூனியங்கள் தீர்த்தியெண்ணெ சாற்றுகிறேன்சுடுதூரு
த்தி () தவமுருங்கை, விராதேமுயல்தாறுசெங்நாயுருவி விளையாகு
ங்கோவைமிளகுதக்காளி, சிராதேநாய்பாகல் வட்டத்துத்தி சிறப்பா
ன அசுவகெந்திசிறுகீரைச் (சூரி, மீராதேநிலவாகை நன்னாரிபாலேமித
மாகவேர்க்கால்பலஞ்செப்பினேனே. ௧௨௯

() தவமுருங்கை தவசுமுருங்கை அசுவகெந்தி அமுக்கரா

() சூரி நத்தைச்சூரி.

செப்புநெருஞ்சி முருங்கைவாகையோடு செழுந்திருக்கும் ()
முட்டியுடன் நாமக்கொவ்வை, கப்பவேப்பெய்ப்பருத்தி கண்டங்கத்
திரி கடியமருனுமத்தைப்பேப்பீர்க்கைப்பை, வெப்பகலவநமேனி
பெருந்தக்காளி வேடிதமாஞ்சின்னயிலே இவைகள்சாறும், அப்புமி
துவகைக்குவகைபடியதாக அணைந்துவிட்டெட்டொன்றாய்க் குறுக்கி
வாங்கே, ௧௩௰

* முட்டி. பேருமுட்டி.

குறுக்கியேஎள்ளெண்ணெ நாழிவிட்டுக் கூறியமுன்வேரிங்கை
சூரணித்து, துறுக்கியேயலைத்திகைப்பூண்டுமூன்று துணியும்வல்லா
லதோல்பல மரைக்கால்சேர்த்து, முறுக்கியேவேம்பாடம்புள்ளியோ
மம் முனையானகருஞ்சீரகமுங்கிராம்பு, பெருக்கியகாயங்கோஷ்டஞ்
சாதிபத்திரிபேனுங்கோரோசனையுமுனையாக்கூட்டே. ௧௩௧

முனையாகவசகைக்கரைக்கால் பலமதாகு முட்டியிடி சூரணமு
ம்பொடியுமொன்றாய், வினையறுக்குமெண்ணெயிலே பொடியும்போட்
டுவெந்துமெழுகுபதந்தனில்வடித்து, எனையாளுங்கணபதிக்கு மல
ருஞ்சூட்டி யேழுபங்காய்தக்ஷணையும் வைத்துப்போற்றி, பனையவே
தேகத்தில்துவளைபோட்டால் பறக்குமேசூனியங்கள் பகரக்கேளே.

கேளேநீமுகமாறு மாங்கிஷத்தெரிதல் கெடியம்புதான்தெரிதல்
முட்டேனியும், நீளேநீபாவமுட்டுவிளக்கெரித்தல் நிலையாணிமுனையடி
த்தல்அட்டைதத்தல், சூளேநீபெண்கட்டு ஆணின்கட்டு சுருக்காக
அனலெரிவுகுடல்கள்வெப்பு, வாளேநீகம்பியொடுசூத்திரங்கள் வட்
டத்தில்தம்மெதிரெற்றுஞ்சூனியமாமே. ௧௩௩

சூனியமாங்கட்டைதன்னில் புதலியாம்புச் சுணங்குடனேபச்
சேரந்திவிரியன்பல்லி, வாணியபுலியமுயல்கழுதைப்பன்றி வலுமுத
லைநரியுடும்புதவளைமீன்கள், ஈயானைஎலிபட்சியினில் வைத்து இத
மாகஈகமொடுஅந்திபாதை, காணியாமோலைமுதல்சக்கரம் வரட்டுக்க
டுப்பெதிர்வைத்திடுசூனியமும்போமே. ௧௩௪

பேரானநரம்பு சுற்றியுடம்பெரிவுகாணும் பொலிவுடனே விராகமுடன் ரத்தம்விக்கல், நேரானபாவைசெய்துமுடங்கலக்கி நிலையாதபிரம்மையொடுமயக்கஞ்செய்தால், நேரானகண்டபலங் கண்டவாலே மதிகெட்டவிருப்புருதிமொருட்டங்கள், வீரானகொடிமரங்கள் பாவைவைப்பு வெடிமலங்கள்வஞ்சனைசூனியமும்போமே. ௧௩௫

## மூலரோகத்துக்கு-சூரணம்.

போமேனீமூலமென்ற ரோகந்தீரப் பூட்டுகிறேன்மருந்தொன்று சொல்லக்கேளு, ஆமேனீதூதுவளைமூலத்தோடு அடவானமருட்கிழங்குகருணைமூலம், வாமேனீமிளகருணைமூலந்தானும் வளமானஅறுகினுடக்கிழங்குதானே. ௧௩௬

## மூலமென்பது கிழங்கு அல்லதுவேர்.

தானென்றனீர்ப்பூண்டுகிழங்குமூலி நயவாகஉரலிலிட்டுத் தூளாச்செய்து, கோனென்றபொடியெல்லாஞ் சமனுச்சேர்த்துக்கொடுப்பரேவிரற்கரைதான் தேனிற்கொள்ள, நானென்ற நாற்பதுநாள் கொள்ளும்போது நடுநடுங்கிமூலமெல்லா மோடும்பாரு, வானென்ற போகருடகடாட்சத்தாலே வளமானபுலிப்பாணி விளம்பினேனே.

## கிரந்தி அரையாப்புக்கு-எண்ணெய்.

விளம்புகிறேனெண்ணெயொன்று சொல்லக்கேளு விதமானசங்கோடுசங்கங்குப்பிவிளம்புகிறேன்கருநொச்சிஉடுதுரத்திஉத்தமனேவெள்ளறுகிசின்னியோடு, களம்புகிறேன்கிரந்திநாயகமுங்கூட தளவானபூவரசம்பட்டையோடு, குளம்புகிறேன்பாச்சானை வாட்டிதண்ணீர் குணமானனீர்ப்பூண்டுச்சார்தான்வாரே. ௧௩௭

வாரப்பாவகைவகைக்குப்படிதான்வீதம் வகையாகஅளந்துவிட்டுஎண்ணெய்நாழி, சேரப்பாஒருநாள்தான்ரவியில்வைத்து சிறப்பாகமற்றுநாளனலேமூட்டு, மாரப்பாஎட்டொன்றாய்க்காயும்போது மைந்தனேசரக்குவகைசொல்லக்கேளு, கூரப்பாபறங்கியுடப்பட்டைதானும் குணமானகருஞ்சீரங்கார்போகமாமே. ௧௩௮

ஆமேனீகஸ்தூரிமஞ்சளோடு அவ்வானவசம்புடனே வெள்ளைப்பூண்டு, தாமேனீவகைவகைக்கு விராகனைந்து நயவாகஎண்ணெயிலேபொடித்துப்போடு, வாமேனீமெழுகுபதந் தனில்வடித்து வகைவகையாகபடியரைக்கால் கொள்ளச்சொல்லு, போமேனீமூன்றுநாள்கொண்டபின்பு பொலிவானபத்தியந்தானாறுநாளே. ௧௩௯

நாளானஎழுநாள்தலையைமுழ்கி நலமானஉப்பிட்ட பருப்பை சேரு, கேளானநாற்பதுநாள் ()கடுகொள்ளாதே குணமானவாழை யிலைவாழக்காயுங், கேளாணகரப்பனென்றதெல்லாந்தள்ளு தெளிவா னபெண்மயக்கஞ் சற்றுமாக, பாழாணகிரந்தியரையாப்புச்சூலை பண் டானமேகமெல்லாந்திருந்தானே. கசக

()கடு கசப்பு.

பிரமனுக்கும்வாசனுக்குஞ்சாபம்.

தானானமுன்யுகத்தில்பிரமாவுக்குத் தயவானபார்வதியாள்தந்த சாபம், கோனானதண்டாயுதத்தைப்பூசைசெய்து கொடிதான சாப மதுநிவர்த்தியாச்சு, தேனானதிரேதாயின்யுகத்திலப்பாதேவேந்திர னுக்கு துறுவாசர்சாபம், (-மானான() தேவர்கோன் பூசைசெய்து மைந்தனேமுனிசாபந்தீர்ந்துபோச்சே. கசஉ

தேவர்கோன் தேவேந்திரன்-கற்சிலை.

போனபின்பு சொக்கலிங்கந் தன்னிற்சென்று பொன்னுலகில் தேவேந்திரன்பட்டமாச்சு, ஆனபின்புதுவாபுரியில்யோகநாதர் அட வானகற்சிலையில்அம்மனென்று, போனபின்புகொங்கணரும் கருவூ ராரும் கூட்டிவந்துமுன்னிட்டாரையன்முன்னே, போனபின்பு () கற்சிலையைசேர்ந்தபோது சிந்தைதனிற்சிலையொன்று அறிந்திட்டா ரே. கசங

() கற்சிலை உருப்பட்டகல்.

அறிந்தபின்புஅச்சிலையைப்பார்த்துஅம்மா அபசாரமடியேற்கு நிவர்த்தியென்ன, வரிந்தபின்புசிவகிரியில்தண்டபாணிமன்னவரைப் பூசிக்கநிவர்த்தியாகும், புரிந்தபின்புதேவி என்ன சிலைதான்சொல்ல போகருமேதுவாபுரியில் பூசைசெயதார், தெரிந்தபின்பு அபசாரம் நிவர்த்தியாச்சு சார்வானகலியுகத்திற்சொல்லக்கேளே. கசச

மே ளேனீகலியுகத்தி லிருநூற்றைந்தில் ()கேசரிபோல்புலிப்பா ணிபேரும்பெற்றேன், சூளேனீசலந்திரட்டிக் கரத்திலேந்திசுகமாக வேங்கையின்மேலேறிச்சென்று, நாளேனீசிவகிரியில் தண்டபாணி நாகருக்குப்பூசித்து அருளைப்போற்று, ஆளேனீபோகருடகுகைமே லையா அட்சயத்தில் தனிலேவாழ்ந்தேன் பாரே. ாசரு

()கேசரி சிங்கம்.

மேருவுக்கு-வடக்குமனிதர்.

பாரேனீயுகந்தோறும் சொல்லக்கேளு பண்பானமேருவுக்கு வ டபாகத்தில், நீரேனீமனிதரப்பா தங்கவண்ணம் திகழ்மதியாமுயா மடபாசொல்லக்கேளு, வாரேனீகாலாயிரமுழமேயாகும்வளமானஆ

லங்கனியும்னீரோடே, சிரேஷ் அருந்துர துஅதுதானப்பா சிறப்பான சதாசிவமே தெய்வந்தானே. கசசு

தானுகும்வயதுதான்நாலுலட்சம் தாயாகசத்தியத்தைக் கையி விட்டார், கோனனபொய்யொன்றுஞ்சொல்லிடாதார் குவலயங்கள் கைலையல்லால்வேறொன்றில்லை, சேனனமேருவுக்கு வடபாகத்தில் செயலானமைந்தருடசெய்கையப்பா, தேனனபோகருடகடாட்சத் தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. கசஎ

விளம்புகிறேன்மேருவுக்குக்கிழக்கேயப்பா விதமானமனிதர்க ள்தாம்னீலவண்ணம், களம்புகிறேனுயரமதுஎண்ணூராகும் தயவாக நவக்கனியுமன்னீரோடே, கிளம்புகிறேன் அருந்துறதுஇதுதானப்பா கிருபையுள்ளவிஷ்ணுவேதெய்வமாகும், களம்புகிறேன்வயதுதானிர ண்டுலட்சம் நலமில்லாஅசத்தியங்களில்லைத்தானே. கசஅ

இல்லானமேருவுக்குமேற்கேயப்பா இருப்பார்கள்மனிதரப்பா ரத்தவண்ணம், வல்லானவுயரமதுநாற்பதாகும் வகையானமாங்கனி யுமன்னீரோடே, எல்லாருமருந்துறதுஇதுதான்பாரு இதமானபரா சத்திதெய்வமாகும், சல்லானவயதுதான்லட்சமாகும் சார்வானசத் தியமும்பொய்யில்லாரே. கசகூ

பொய்யில்லைமேருவுக்குத் தெற்கேஐயா பொங்கமுடன்மனித ருடநிறத்தைக்கேளு, கையில்லாநிறமதுதான் அந்தலண்ணமைந்த னேயுயரமதுமுழந்தானுலு, செய்யில்லாஅறுசுவையு மனேகவர்க்க ஞ் செயலானஅன்னமொடுகருகைநீரும், எய்யானபாலோடுகிழங்கு காய்கள் இதமானஅமுர்தமதுகொள்வாருண்டே. கருய

உண்டானஅனேகவித தெய்வமுண்டு வுத்தமனேசாஸ்திரங்க ளனேகமுண்டு, பண்டானபொய்கோலையும் களவுமுண்டுபண்பில்லா விசுவாசம்பாவமுண்டு, செண்டானமுறைமைகெட்டு மையல்கொ ண்டு செய்யானபாக்கியமும் மறுமையுண்டு, கொண்டானவயதுதா னூறென்பார்கள் கொற்றவனேநிட்சயந்தானில்லைதானே. கருக

தானென்றகோயில்குளம் ஆறுமுண்டு தயவானபுண்ணியமும் பாவமுண்டு, மானென்றசித்தனென்றும் முனிவரென்றும் மகிமை யாந்தபோதனர்கள்பெரியோரென்றும், கோனென்றவாசனென்றும் குருக்களென்றும் கொடிதானபிரமலபிக்கடந்தோரென்றும், வானெ ன்றகிரகங்கள்கோய்களென்றும் வகைவகையாய் பலசாதியனேகந் தானே. கருஉ

தானனபோகருடகடாட்சத்தாலே தயவாகப்புலிப்பாணி விள க்கஞ்செய்தேன், வீணுக அவரவர்கள்செய்தார்கர்மம் விளைந்துதடா நோய்போலேஅனேகங்கோடி, கோனுகவந்தகர்மந்தீரவேண்டிக் கு

ணமாகத்தானதர்மஞ் செய்யவேண்டும், தேனுகதர்மங்கள்செய்யா விட்டால் தேகமதுநோயிட்டபாண்டமாமே. ௧௫௩

மருந்திடுமுறிய

ஆமேனீமறிந்திடுமுறியவேண்டில் அப்பனேஇலவினுடபட்டை கொண்டு, தாமேனீஎலுமிச்சங்காயின்சோடு தயவாகஅரைத்துக்கா டியிற்கலக்கி, வாமேனீதுட்டெடைதான்சர்க்கரையுங்கூட்டி வளமா கக்கொடுத்தவுடன்மயக்கந்தீரும், போமேனீபெண்மயக்கம்ஆண்மய க்கம் போச்சேனீமூன்றுநாள்கொடுத்தபோதே. ௧௫௪

சூலைக்கு.

போதேனீசங்கம்வேரிழைத்தரைத்துப் பொங்கமுடன்புன்னை க்காய்விதமாச்,சூதேனீயில்லையடா காடியிற்கொள் சுருக்கானமண் டலத்தில்வியாதியெல்லாம், ஊதேனீயோடிவிடு காடுவிட்டு உத்தம னே பத்தியந்தானில்லையப்பா, சாதேனீவெள்ளாட்டமுரிதன்னிற் கொள்ள சாவார்கள்சூலையதுதிருந்தானே. ௧௫௫

கற்பமுண்டாக எண்ணெய்.

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு, தயவானவிழியிலை ச்சாறுநாழி, மானேதான்தைவேளைச்சாறுநாழி கொடியதானநிலவ கைச்சாறுநாழி, கோனேதான் () கொட்டையிலைச்சாறுநாழிகொடி தானநிலவகைச்சாறுநாழி, தேனுதானுவின்பால் படிதானுழி தெளி வாகசரக்குவகை சொல்லக்கேளு. ௧௫௬

() கொட்டையிலை கொட்டைக்கரந்தை.

கேளேனீமஞ்சளுடன்கடுகுகூடக் கெணிதமுடனிந்துப்புவெண் காரந்தான், நாலேனீகடுக்காயும்வெள்ளைப்பூண்டு கலமானஆண்வசம் புசுக்குங்கூடப், பாமேனீவகைவகைக்கு விராகன்மூன்று பண்பாக பொடிசெய்துஇதனிற்போட்டு, கேளேனீவிளக்கெண்ணை நாழிவிட் டுக் கொடிதாகமெழுகுபதந் தன்னில்வாங்கே. ௧௫௭

வாங்கியேகணபதிக்குமுன்னேவைத்து வகையாகசோடசங்கள் செய்தபின்பு, பாங்குடனேமாதவிடைமூன்றும்நாள்தான் பண்பாகத் தலைமுழுகிக் காண்டியெண்ணை, தாங்கியேகொடுத்துவிடுநாள்மூன்றப் பா தயவாகமறுபத்தியமொருநாட்காரு, தூங்கியேதிரியாதே ஐந்து நாளில் துருசாகசிரசுக்குனீரைவாரே. ௧௫௮

வாரேனீவறுத்தவுப்புபொரிச்சாரப்பா வளமாகமற்றுநாளெல் லாஞ்சேரு, தீரேனீமற்றுநாள்கசியமொன்று தீர்க்கமாய்வேலியிலை வேரைத்தட்டி, கூரேனீவலதுநாசியிற்பிழிந்தால்கொற்றவனேஆண் பிள்ளைபிறக்கும்பாரு, சீரேனீயிடதுநாசியிற்பிழிந்தால சிறப்பான பெண்ணொன்றுஞ் செப்பினேமே. ௧௫௯

## துவளை.

செப்பினேந்துவளையொன்றுசொல்லக்கேளு சிறப்பானமாவிலை மாதளையுஞ்சேர்த்து, கப்பினேங்கஸ்தூரிமஞ்சளோடுகாயகமாயிவை மூன்றுஞ்சமமாய்ச்சேர்த்து, அப்பினேஞ்சலம்விட்டு அரைத்துமை போல்அடவாகமேனியெங்கும்பூசச்சொல்லு,வெப்பினேமேனேக்கி யுதிர்த்துப்போட்டுவிதமாகஅரிந்தைத்தான்சேரவாரே. ௱௬௰

## புகை.

வாரினதைமாவிலையின்தன்னில்வைத்து வகையாகமுகங்காட்டி தலையைசுற்றி, கோரினேநடுவாசல்குழியைத்தோண்டிகுணமாகத்தா ன்புதைத்துச்சொல்லக்கேளு ஆரினேன்ஜலமதுதான்சிரசில்வார்த்து அப்பனேபுகையொன்றுசொல்வேன்பாரு, தூரினேன்சாம்பிராணிஅ லின்கட்டைத்தூளித்துப்புகைகாட்டுநாள்தான்மூன்றே. ௱௬௧

மூன்றுநாள்துவரையிட்டுப்புகையும்போட்டு மூர்க்கமுள்ளசிதம் பரத்தைமாரிக்கட்டுஎன்றுபோமூன்றுதிங்களிந்தபாகம் இதமானமா தவிடாயாகும்பக்கம், கூன்றுபோவிம்முறையைச்செய்யும்போது கு ணமாககற்பமதுதரிக்கும்பாரு, ஊன்றுபோல்போகருடகடாட்சத்தா லேஉத்தமனேபுலிப்பாணிபாடினேனே. ௧௬௨

## சிவகிரிவளப்பம்.

பாடினேன்சிவகிரியின்மற்றேதன்னில் பண்பாகஆயிரத்தெட்டு மாற்று, குடினேநவலோகமிதிலேயுண்டுசுருக்கப்பாசாஸ்திரமும்வே தையோடும், வாடியேதிரியாதே கரையும்மாறும் வயதப்பாலக்கில்லை கெவனிவாயாம், நாடியேகன்னமொடுசிந்தூரக்காடு நாயகனேஅஷ்ட சித்திகடனந்தானே. ௱௬௩

தானென்றநவசித்தர்கோடாகோடி தாநடனமதிலமடாசித்தர் கூட்டம், கோனென்றமலையுள்ளே விட்சமூலிகுற்றமில்லைவேதையுந் தானநேகஞ்செய்வார், வானென்றதேவரோடுமுனிவர்சித்தர்வருகிற தும்போகிறதுங்காணச்செய்யு, மானென்றதேவரொடு தவமேசெய் தோர்மைந்தனேசித்திமுத்திபெருவர்வானே. ௱௬௪

## வரக்கிரி.

தானென்றவரக்கிரிச்சருவில்மைந்தா தயவான வோடைகளும் ஆறுதோறும், தேனென்றஅருவியுடமண்ணுங்கல்லுந் தெரியாமல்த ங்கமாயிருக்குமப்பா, பானென்றமூலிகையால்வேதையாகும் பட்ட ணமண்ணுங்கல்முதலாய்த்தங்கமாகும், கோனென்றசிலைபோலேகிட க்கும்பாரு கொற்றவனேவரியார்களாருந்தானே. ௱௬௫

## சதுரகிரி.

தானாகசதுரகிரிமேலேயப்பா தயவான உதயமொன்றுஇருக்குதப்பா, மானானகாஞ்சனமாங்காயசித்தி மைந்தனே அஷ்டசித்திகேவுணசித்தி, கோனானவேர்முதல்கணங்கள்யாவுங்கூப்பிட்டால்கேள்விவந்துகேட்கும்பாரு, வானானசித்தருடகூட்டமெத்த வளமானசஞ்சீவிமூலியுண்டே. ௱௬௬

## உதயம்-சலம்-காஞ்சனம்-பொன்.

உண்டானமூலியைத்தான்குகையிலுள்ளேயுரித்துவைத்தார்சித்தரெல்லாம்வெளியாமென்று, பண்டானசித்தருக்குமூலியிட்டும்பாவிகட்கும்கர்மிகட்குங்கிட்டுமோசொல், செண்டானபூவுலகில்மனுடரெல்லாஞ் செத்தவர்களெழுந்திருப்பாரிடங்கொள்ளாது, கொண்டானவிதியாளிவந்தானாகில்கூப்பிட்டுத்தான்கொடுப்பார்சித்தர்தானே.

## இருமலுக்கு லேகியம்.

தானானலேகியந்தான்சொல்லக்கேளுதருவானகரிப்பான் சாற்படிதானொன்று, பானானகாணிச்சார்நாழியொன்று பண்பாகசங்கம்பழச்சாறுநாழி, வானான்தேன்படிதானரையுங்கூட்டிவளமானஆவினெய்படிக்கால்சேர்த்து, கோனானதிப்பிலியுமிளகுசுக்குகொடிதானசிற்றரத்தைகடுக்காய்தானே. ௱௬௮

## கரிப்பான்சார் கையாந்தகரை.

தானப்பாவகைக்குவகைவிராகனேந்துதான் பொரித்துவடிகட்டிலேகியமாய்க்கிண்டி, வானப்பாநெல்லிக்காயளவாய்க் கொள்ளவளமாகஈராறுநாளுக்குள்ளே, கோணப்பா அந்திசந்திகொண்டபோது கொடிதானஇருமலெல்லாங்குடியேபோகும், நாமப்பாபத்தியந்தானில்லையையாநாயகனேலேகியந்தான்மேருவென்னே. ௱௬௯

## சூலைவாயுமேகத்துக்குதயிலம்.

என்னவேதயிலமொன்றுசொல்லக்கேளு இதமானகொடிவேலிமூலிதானும், பன்னவேதுலாமறைதானிடித்துப்போட்டுபண்பானஆவின்பட்டைசங்கவேறும், கன்னவேவகைக்குவகைதுலமேகால்தான் நாயகனேஇத்துடனேகூடச்சேர்த்து, அன்னவே தூணிநீர்விட்டுக்காய்ச்சி அப்பனேஅட்டொன்றாய்குறுக்கிவாங்கே. ௱௭௰

வாங்கியேயெள்ளெண்ணெ நாழிவாருவகையாகமிளகு பலமரைத்துப்போட்டு, தாங்கியே பசுவின்வெண்ணெபலந்தானொன்று தயவாகவேப்பெண்ணெபடிக்கால்வாரு, பாங்கியேமெழுகுபதந்தனில்வடித்துபண்பாகமுழுகிவரசிலையேகுந், தூங்கியேதிரியாதேமேகமெல்லாந்துடித்துவிழுந்தேயோடுமெதிர்நில்லாதே. ௱௭௧

## பிரமேகத்துக்குஎண்ணெய்.

நில்லாதபிரமேகந் தீரவேண்டில் நிஷயமாய்த் தேங்காய்ப்பால் படிதானொன்று, வல்லானபொடு தலைச்சார்படி தானொன்று வளமான பிரமிசார்படிதானொன்று, நல்லாகஎரிந்திருந்தஎண்ணெவாங்கி நாயகனே மூன்றுநாளாறுவேளை, சொல்லாகக்குடித்தவுடன் பிரமியங்கள் சிறப்பாகத்திருமடாதிண்ணந்தானே. ௱எ௨

திண்ணமாய்ப்பத்தியந்தானாறுநாளுஞ் சிறப்பான ஆவின்பாலாகுமல்லால், வண்ணமாய்மற்றொன்றுமாகாதப்பா வளமாகஏழாநாள் தலையைமுழ்கு, உண்ணமாஞ் சிப்பிரமிரத்தப்பிரமியம்உத்தமனே திருமடா இந்தயெண்ணை, எண்ணமொன்றுமில்லையடா விசனம்போகும் என்னசொல்வேனெண்ணையுட வீரந்தானே. ௱எ௩

### சுகபேதிசூரணம்.

வீரந்தான்பேதியொன்றுசொல்லக்கேளுவிதமானசிவதைவேர் பசுவின்பாலில், சீரகந்தான்மிதக்கவிட்டுச் சுண்டக்காய்ச்சி இரமாக உலர்த்தியதைதூளாப்பண்ணி, வாரந்தான்சரியெடை சர்க்கரையுஞ் சேர்த்துவளமாகஏலமது அரைக்கால்சேர்த்து பாரந்தான் வெருகடிதான்வெருகடிதூள் வெந்நீரிற் கொள்ளபள்ள நற்சிதமுதற்கழிந்துபோமே. ௱எ௪

### பள்ளம் திசைக்கோல்குறிப்பு.

### விற்புருக்கு மருந்து.

போமேநீவிற்புருதி வந்தபேர்க்குப்பொங்கமுடன் சல்லிவேர்க் கிழங்குவாங்கு, நாமேநீகழுவியதைதோலைப்போக்கி தயவாகநாலுபலமொருவேளைக்கு, வாமேநீகம்புமாவரைப்படியும் போட்டுவளமாகக்களிக்கிண்டி அந்திசந்தி, ஆமேநீபசுவின் நெய் கருப்புக்கட்டி அடவாகமூன்றுநாள்கொண்டிடாயே. ௱எ௫

* சல்லிவேர் தண்ணீர்மிட்டான்.

கொண்டபின்புமறுபத்தியமூன்றுநாளும் குணமாக வெந்நீரும் அன்னமாகும், கண்டபின்ஏழாநாள்சலத்தைவாரு கருவானவிற்புருதிக்கரந்துபோச்சு, அண்டபின்புசின்னிபொடு தலையின்சாறு அப்பனேபத்தியந்தானிந்தபாகம், உண்டிடவே அரைப்புவிற்புருதிரும் உத்தமனேமேகசலக்கட்டிபோமே. ௱எ௬

### மருந்திட்டுக்கு முறிவுசத்தியாக.

போமேநீமருந்திடுவாந்தியாகப் பொங்கமுடன் கரிப்பான்சார் தன்னைவாங்கி, தாமேநீசிறுப்புடையப்படியிலப்பா தாழ்வாகக்காற்படிச்சார்படியில்தானும், வாமேநீஎலுமிச்சம் பழச்சார்நேரேவளமாகஅந்திசந்திப்படியில்விட்டு, ஆமேநீயுதையாதி தொடங்குமுன்னே அப்பனேஉள்ளுக்குக்கொடுத்திடாயே. ௱எஎ

கொடுத்திடவேவாந்தியதுகாணும்பாரு கொடிதானமருந்திடு எல்லாம்வீழும், அடுத்திடவேவாந்தியது அதிகங்கண்டால் அடவாகப் பச்சரிசிபருப்பினோடு, கடுத்திடவேகஞ்சியதுகொண்டபோது களங்கமறவாந்தியதுநிற்கும்பாரு, கொடுத்திடவேமருந்திடுதீர்ந்துபோச்சு கொஞ்சமதுவிலகிற்று தொழிலைப்பாரே. ௱எஅ

சாதிலிங்கக்கட்டு.

பாரேநீலிங்கமதுவிராகன்பத்து பாங்கானமுலைப்பாலிலொருநாள்போட்டு, சீரேநீவிராகமெவடைதங்கரேக்கு சிறப்பான லிங்கத்தின் மேலேசுற்றி, தேரேநீவெண்காரப்பொரித்துப்பூசிதிறமாகசெங்கொட்டைபடிநறுக்கிப்போட்டு, வீரேநீயிடித்தப்பா தேங்காய்பட்டம்விதமாகலிங்கத்தைப்பொதிந்துமூடே. ௱எகூ

லிங்கம்-சாதிலிங்கம்-மட்டம்-அளவு.

மூடியேசிறுசட்டிநடுவில்வைத்து மூர்க்கமுள்ளபசு வெண்ணைத் தேங்காய்விதம், நாடியேசெங்கொட்டையுநண்டைமேலே நலமாக வைத்தெரிக்கக்கனல்தான்மீறி, ஆடியேதீயெறிந்துசாம்பலாகும்அப்பனே ஆறவிட்டு எடுத்துப்பாரு, கூடியேலிங்கமதுவுருகிக்கட்டிகொற்றவனேபருக்கதுபோலிருக்கும்பாரே, உருக்கு-எஃகு. ௱அ௦

சூலை-யக்கு கிஷாயம்.

பாரடா சிவன்வேம்புசங்கம்வேருபாங்கான முக்கழுகுஞ்சித்திர மூலங், கூரடாவெள்ளருகுஅசுவகெந்திகொடிதானசங்குப்பி மூலத் தோடுவீரடாபிரம்மிஇனுட கிழங்குகூட விதமான பூவரசன் பட்டையோடு, சேரடாநஞ்சுண்ட பட்டையப்பா சிறப்பான வகைக்குவகை பலந்தான்ரண்டே. ௱அக

அசுவகெந்தி-வமுக்கரா- நஞ்சுபட்டை-நஞ்சுபாலப்பட்டை.

இரண்டானவாய்விளங்க மிளகுசுக்கு இரதயிலாகாட்டுச் சீரகமுமப்பா, பண்டானவகைக்குபலம்ரண்டதாகபசுமூலிச் சர்க்கரையுஞ்சேர்த்திடித்தெடுத்து, முண்டானபங்காச்சியொருபங்கப்பா முக்கியமாய்க்கிஷாயம்வைத்துபாரங்கிப்பட்டை, பண்பாகக்கால் பலந்தான்முடிநதுபோட்டு படிசலந்தான் விட்டெறித்தோன்றாய்வாங்கே.

பசிமூலி-பச்சைமூலி.

வாங்கியேபரங்கிபுடபட்டைதன்னை வளமாகக்கியாமூத்திலரைத்துமைபோல், தூங்கியேதிரியாமல் கலக்கிப்போட்டு துடிகொண்ட கட்டுலிங்கம்பணவிடையிலப்பா, தாங்கியேயுரைத்துவிடு இந்தபாகந் தயவாகஈராறுவேளைகொள்ள, பாங்கியேசூலைபதினெட்டுந்தீரும்பாங்காகபத்தியந்தானென்றுகாது. ௱அ௩

ஒன்றானவெந்நீரும் அன்னங்கொள்ளு ஒகோகேசு மறுபத்தியமறுநாட்காரு, கன்றாகஇப்படியேகார்த்தாயானால் காயகனேநோயே துசூலையேது, சென்றான வியாதியது அணுகுமோசொல் செம்மை

யாய் சடலமங்கேவலுத்துப்போகும், கன்றனபோகருடகடாட்சத் தாலே கருவாகப்புலிப்பாணிபாடினேனே. ௱அ௪

செங்கரந்தி தடிப்புக்கு.

பாடினேன்கொடிக்கள்ளிபயறுபோலே பாங்காகஒருதுலாம்பாண்டத்திட்டு, நாடினேன்ஒருகுடத்திற்சலத்தைவிட்டு நாயகனேயெட்டொன்றாய்க் குறுக்காய்ச்சி, கூடினேன்வடிகட்டுந்தரந்தானேழுகொற்றவனேபடியரைக்காலந்திசந்தி, நாடினேன்றிரியாதே கொண்டாயானல் நலமாகச்செங்கிரந்தி தடிப்புபோமே. ௱அ௫

போமேநீமூன்றுநாளாறுவேளைபொங்கமுடன் மறுபத்தியமூன்றுநாளாம், நாமேநீனாறுநாளீராறுவேளை நாயகனேஉப்பில்லாக் கஞ்சியாகும், ஆமேநீஏழுநாள்பத்தியத்தைதிரு அடவாகவிளக்கெண்ணைமுழுகிவாநீ, தேமேநீகிரந்திவகையெல்லாந்தீரும் திறமாகபோகருடகடாட்சந்தானே. ௱அ௬

தானென்றஓடுக்கானைப்பிடித்துவங்கு தயவாகசெஞ்சீலைமேலே சுற்றி, வானென்றசலாகையிலேகுத்திக்கொண்டு வளமாகவேப்பெண்ணைமேலேவாரு, கோனென்றதீபிடித்துவேகமாக கொற்றவனே சுடரெண்ணைமேலேவாரு, பானென்றஎண்ணையைநீயேழுதரம்ஈந்தால் பண்பானஎண்ணையதுதயிலமாச்சே. ௱அ௭

ஓடுக்கான்-ஆமை.

ஆச்சேநீதயிலமதுதட்டைதான்வீதம் அப்பனே உள்ளுக்குக்கொடுத்தபோது, வாச்சேநீமந்தாரசன்னியேதுவகையாகமூன்றுநாளாறுவேளை, வீச்சேநீயாருநாள்பத்தியமாய்காருவித்தகனே உப்பில்லாக்கஞ்சியாகும், பாச்சேநீமுன்தயிலந் துவளைபோடுபண்பாகஏழுநாள் நீரைவாரே. ௱அ௮

காதடைப்புக்குத்தயிலம்.

வாரேநீயின்னமொன்றுசொல்லக்கேளு வளமாகதுலாமுளகாய் நிறுத்துப்போடு, சேரேநீதூணிநீரெட்டொன்றாக்கி செப்பமுடன்மண்சட்டிதனிலிறுத்து, காரேநீஎள்ளெண்ணைநாழிவிட்டுக் கனிவாகமிளகுபலமரைத்துப்போடு, தீரேநீமெழுகுபதந்தனில்வடித்து தீர்க்கமாய்முழுகிவரப்பலனைக்கேளே. ௱அ௯

கேளோநீர்ச்செரிப்பதிமிருவாதங் கெணிதமாய்ச்சோகையொடுமண்டைகுத்து, வீளேநீமேல்வலிகள்சூலைநோயும் விதமானபடைசூலேமேகவாயும், பாளேநீ சொரிசிரங்குந் திரும்பாரு பண்பானகாதடைப்புக்காதுக்குத்து, சூளேநீயிவையெல்லாந்தீருந்தீருஞ் சுகமானபோகருடகடாட்சந்தானே. ௱௯௰

வயிற்றுப்புக்கடுப்புக்கு.

தானென்றசுக்குமொரு விராகனிரண்டு தயவாக மோருவிட்டுமைபோலாட்டு, கோனென்றஅரிசிலையில் வைத்துதைத்துக்குணமாகமோருவிட்டு வேகவைத்து மானென்றஏழுதர மிந்தபாகம்மைந்த

னேயிறுவடிகட்டிநேரே, வாமெனன்றதயிரில்வைத்து விழுங்கும்போ துவயிற்றிரைச்சல் கடுப்புமுதல் தீர்ந்துபோமே. ௱௯௧

## பேதிமாத்திரை.

போமேநீகேர்வாளஞ் சுத்திசெய்து பொங்கமுடனுமணக்கு கா சுகட்டி, ஆமேநீயோரிடையாய்நிறுத்துக்கொண்டு ஆவின்பால்விட்ட ரைத்துதுவரைப்போலே, தாமேநீகுளிகையொன்று வெந்நீற்கொள் ளதயவாகபேதிப்துயாகும்பாரு, வாமேநீபேதியது யதிகமானால் வள மானவசம்புகட்டி கஷாயங்கொள்ளே. ௱௯௨

## தலைவலி சன்னிப்புகை.

கொள்ளவே இன்னமொன்று சொல்லக்கேளுகொடிதானபெரு ங்காயவோமஞ்சுக்கு, தெள்ளவேசாம்பிராணி மிளகுசாரம்தெளிவா னசிற்றரத்தைக்கழல்பருப்பு, வெள்ளவேசீரகமும்லிங்கம் கூடமேன் மையாய்சமன்கொண்டு அறக்குப்பாலில், தள்ளவேதிரியாக்கிப் புகை தான்காட்டதலைவலியுஞ்சன்னிமுதலோடிப்போமே. ௱௯௩

அருக்கம்பால் எருக்கம்பால்.

## கற்பூரக்குளிகை.

போமேசாதிக்காய்சாதிபத்திரி பொங்கமுடன்தக்கோலம்ஏலங் கோஷ்டம், வாமேநீசந்தனம் வால்மிளகுங்கூடவகைவகைக்குவிராக னிடைநிறுத்துப்போடு, தாமே நீகிராம்பதுவும் விராகன்மூன்று தய வானகஸ்தூரிபச்சைப்பூரம், ஆமேநீகுங்குமப்பூவகைவகைக்கு அட வாகவிராகனெடையரையுமாமே. ௱௯௪

ஆமப்பாஇளநீரா லரைத்துமைபோல் அடவாகக் குன்றுமணி ப்பேரலுருட்டி, தாமப்பாநிழலுலர்த்திதாம்பூலத்தில் தயவாகத்தின் றுவரப்பலனைக்கேளு, வாமப்பாமுகவசியந்தேகங்காந்திவளமான பல் லினுள்ளவியாதிதீரும், வேமப்பா அக்கினியாமந்தத்தீரும் விதமானச ன்னிமுதல்மேகம்போமே. ௱௯௫

போமப்பாகொடிவேலிநிலைப்பனையின்மூலம் பொங்கமுடன் த ண்ணீர்விட்டான்கிழங்குகூட, நாமேநீ சீனிசர்க்கரையுங்கூட நாயக னேவகைக்குவகைபலந்தான்கேளு, தாமேநீபலந்தானே முப்பதாகு ந்தயவானசெங்கோட்டைநாற்பதாகும், வாமேநீதூளிடித்து சூரண மேசெய்துவளமானசர்க்கரையும்நேரேகூட்டே. ௱௯௬

கூட்டேநீயிதிற்பாதிதேனுஞ்சேர்த்து குணமாக இதுநேரே ஆ வினெய்யை, நாட்டப்ப நாற்பதுநாளந்திசந்திநாயகனே பத்தியந்தான் பாலுஞ்சோறும், வாட்டப்பாசர்க்கரையுஞ் சீனியாகும் வளமான வி ராகனெடையைந்தேகொள்ளும், ஆட்டப்பா இதினுடைய பலனைக் கேளு அப்பனேபதினெட்டு சூலைபோமே. ௱௯௭

போமடாகுஷ்டம்பதினெட்டுந்தீரும்பொலிவான வலிப்பைந்து முதிரமட்டீர், தாமடா அஷ்டகுன்மம்பாண்டு ஆறும்தயவானவிஷக்க டியமேகந்திரும் ஆமடாபலமுண்டுநரையுமாறு அடவானதேகமது அ

மூகேசாந்தி, நாமடாபோகருட கடாட்சத்தாலே நலமாகப்புலிப்பா ணிபாடினேனே. ௧௯௮

பல்லுக்குப்பொடி.

பாடியேஅரக்குடனேசீனிகாரம் பண்பானதுருசுடனே கடுக் காயப்பா, நாடியேமாசிக்காய்வகைவகைக்கு நலமானவிராகனெடை நிறுத்துக்கொண்டு, ஆடியேகடுக்காயுந்தான்றிக்காயுமரைப்பொடி யும்வகைக்குவகை விராகன்மூன்று, கூடியேஎலுமிச்சம்பழச்சார்வி ட்டுக் குணமாகஉலரவைத்துப் பொடியாய்ச்செய்யே. ௧௯௯

பொடியெடுத்துவிளக்கிவரப்பல்லிளக்கேளு புழுச்சாகுமேயிற்க ரையுந்திரும்பாரு, இடியெடுத்துப்பல்லசையும் பல்லுக்குத்தூளரிவா னவாய்புண்ணுநாற்றந்திரும், வடிவானபல்லொளியுவசியமுண்டு வள மானபல்லிலுள்ளவியாதிதீரும், துடியானபோகருடகடாட்சத்தாலே துவக்கமாய்ப் புலிப்பாணிபாடினேனே. ௨௱

எயிறுங்கரை-புல்வீறு

வாய்வு-விக்கல் சோகைக்குமருந்து.

பாடியேதிப்பிலிசுக்குமிளகுங்கூடப் பண்பாகவோசினையும்பரிங் துகேளு, நாடியேவகைவகைக்குப்பலந்தானொன்று நாயகனேகடுக்கா ய்த்தோல்பலந்தானாலு, கூடியேதூளிடித்துச்சூரணமேசெய்து கு ணமாகபனவெல்லம்பலந்தானாலு, ஆடியேகாலத்திலப்பாகாய்ச்சி அ ப்பனேநெய்தேனில் கிண்டிப்போடே. ௨௱௧

போடேநீகழற்சிக்காயளவுகொள்ள பொருமலுடன்வயிற்றுவ லிவிக்கல்சோகை, ஆடேநீமலக்கட்டுக்கிருமிதோஷம் அடவானதேக சலஞ்சூலைவாயு, நாடேநீர்ச்செருப்பு மேல்வலியும்போகும் நாயக னேவாயுவென்றசோகம்போகும், கூடேநீ போகருடகடாட்சத்தா லே குணமாகப்புலிப்பாணி பாடினேனே. ௨௱௨

கடுகெண்ணெய்.

பாடினேன்கடுகெண்ணெய்படிதானொன்று பண்பானபெருங்காயம்வ சம்புசுக்கு, நாடியேகருநாவிசாம்பிராணிநாயகனேவெள்ளுள்ளியோ மம்குப்பை, ஆடினேன்மாவிலங்கப்பட்டைகூட அடவாகவகைக்குவ கைவிராகன்மூன்று, கூடினேன்மேனிச்சார்விட்டெரித்துக் குணமா கக்கடுகுபதந்தனில்வடித்தே. ௨௱௩

குப்பைசதகுப்பை.

வடித்தஎண்ணெய்த்துவளையிடசன்னிபோகும் வளமாகவலிப் புடனேசயித்தியந்திரும், கடித்தவுடன்கால்குடைச்சல் மேல்வலியு ந்திரும் தயவானகாதிரைச்சல்மண்டைக்குத்து, கொடிதானயெண் ணெயடாவீரம்வீரங்கொற்றவனேபெண்ணையுடஅருமைமெத்த,கெ டியானபோகருடகடாட்சத்தாலே கெணிதமாய்ப்புலிப்பாணி பாடி னேனே. ௨௱௪

பஞ்சீகரணச்செந்தூரம்.

பாடியேதங்கமதுஒன்றேயாகும் பண்பானகாரீய மொன்றேகா லாம், ஆடியேசெம்பதுவுமொன்றேயாகும் அப்பனேஇரும்பதுவுமு

க்காலாகும், கூடியேநாகமதுஅரையுமாகும் குணமானரசமதுதான் விராகனொந்து, நாடியேகந்தானவிராகனொந்து நாயகனேஅரிதாரம்விரா கனென்றே. ௨௱௫

ஒன்றானஇவையெல்லாம் பொற்றலையின்சாற்றால்ஒளிவாகஇரு சாமமைபோலாட்டிப், பன்றாகப்பொடிசெய்துகுப்பிக்கேற்றிப் பண் பானமாக்கல்லுக்கொண்டுமூடி, வன்றாகக்குப்பிக்கிச்சீலையேழு வள மாகத்தான்செய்துவாயைவிட்டு, ஊன்றாகச்சட்டியிலேமணல்தானப் பா நலமாகநாலுவிரலுயரம்போடே. ௨௱௬

பொற்றலைபொற்றலைக்கையாந்தகரை மாக்கல்-பலப்பக்கல்.

போடேநீகுப்பிவாய்த்தெரியமூடி பொங்கமுடன்தானெரிப்பா ய்க்கமலம்போலே, ஆடேநீநாற்சாமமெரித்தபோதுஅப்பனேசிந்தூ ரமாகும்பாரு, கூடேநீஆவின்பால்வெண்ணை தன்னில்குணமாகப்பண வெடையில்பாதிகொள்ள, நாடேநீநாற்பதுநாள்கொண்டபோதுநாய கனேவியாதியெல்லாந்திருந்தானே. ௨௱௭

தானென்றதேகமதுவலுத்துப்போச்சு தயவானசிகமுங்காந்தி யுண்டாம், கோனென்றரசிதமதுயேழுகூட்டக் குணமானசெம்ப திலேமூன்றுஞ்சேர்த்து, வானென்றதங்கமதுஒன்றுகூட்டி வளமாக த்தானுருக்கிகுருவொன்றிய, தேனென்றகரிப்போல யிருக்கும்பாரு செம்மையாயோட்டில்வைத்துதிப்போடே. ௨௱அ

இரசிதம்-வெள்ளி.

போடேநீமாற்றைந்துயிருக்கும்பாரு பொங்கமுடனெடைக்கெ டைதான்தங்கஞ்சேர்த்து, ஆடேநீசிவனத்தைச்செய்துகொண்டு அ டவானசாஸ்திரத்தையறிந்துபாரு, கூரேநீபஞ்சிகரணச் செந்தூரந் தான்குணமாகுந்தேகமதுஇருக்கும்பாரு, தேடேநீபோகருடகடாட் சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. ௨௱௯

சோகைகாமாலைக்கு லேகியம்.

பாடியேசுக்குடனேமிளகுகூடப் பண்பானதிப்பிலிசீரகமுமோ மம், ஆடியேகாட்டுச்சீரகமுமிஞ்சி அப்பனேசாதிக்காய்கிராம்புசோ ம்புநாடியேசோகணியுமேலந்தானு நலமாககழல்பருப்பு அரத்தைசி றுதேக்கு, கூடியேவகைக்குவகைவிராகன்பூன்று கொற்றவனே து ளிடித்துச் சூரணமேசெய்யே. ௨௱ய

செய்யப்பாவெள்ளாட்டுப்புழுக்கைதானு செயமாகவடிகட்டிச ரக்கின்னேரே, வையப்பாகருப்பஞ்சார்படிதானென்று வளமாகப்ப ணவிடைகருப்புக்கட்டி, கையப்பாஏழுபலம்நிறுத்துகொண்டு நலமா கத்தேன்படியுமரைதான்வாரு, கையப்பா ஆவின்நெய்ப்படிதான்பாதிக ளிவாகலேக்யமாய்கிண்டிப்போடே. ௨௧௧

போடேநீநெல்லிக்கா யளவுகொள்ள பொல்லாத நீர்கோவை பாண்டுகோவை, ஆடேநீகாமாலை சோகைவாயு அப்பனெநெஞ்செ

ரிவுநீர்ச்செப்பு, கூடேநீ அக்கினியாமந்தந்தீருங்குணமானமந்தமுதல் குன்மந்திரும், நாடேநீபோகருட கடாட்சத்தாலே நலமாகப்புலிப் பாணிபாடினேனே. ௨௧௨

பஞ்சீகரணமாத்திரை.

பாடினேன் *தாரமொன்றதையுமாகும்பண்பானசைவீரம்ஒன் றேகாலும், நாடியேகெளரிய நஒன்றேயாகும்நலமானவெள்ளையதுமு க்கால்சேரு, ஆடியேலிங்கமதுஅரையும்பாருஅப்பனேபொடிசெய்து வுருக்கிவாரு, கூடியேதிரிகடுகுபொரியுந்தேனும் கொடுப்பாயேபண வெடைதான்நோய்கள்போமே. ௨௧௩

* தாரம்-அரிதாரம்.

போமேதான்வாயுவொடுகுன்மரோகம்பொல்லாதநெஞ்சடைப் புபிரமைமூர்ச்சை, தாமேநீசயரோகம்வாந்தியேப்பம் தயவில்லாசுர ங்களொடுதொண்டைக்கம்மல், ஆமேநீவிஷபாகங்கா மாலைசோகைஅ ப்பனே சன்னியொடுவலிப்புந்தீரும், நாமேதான்போகருடகடாட்ச த்தாலேநலமாகபுலிப்பாணிபாடினேனே. ௨௧௪

பஞ்சமுகச்செந்தூரம்.

பாடினேஞ்சாதிலிங்கம்ரசமுங்கெந்தம் பண்பானவீரமுடன் தாரங்கூட்டி, ஆடினேனிவையெல்லாஞ்சமனுய்க்கொண்டு அடவாக க்காட்டாமணக்கின்பாலாலாட்டி, நாடியேயில்லை தட்டியுலாவைத்து நலமானபுடமதுதான்கோழியாகும், கூடியேயாறவிட்டு உடுத்துப்பா ருகொற்றவனேசெந்தூரமாகுந்தானே. ௨௧௫

தானென்றசெந்தூரம் பணவெடைதான்கொள்ள தயவானதிரி கடுகுபொடியிலப்பா, பானென்றதேனுகும்வெண்ணெயாகும் பண்பா னபனையுடைய கருப்புக்கட்டி, வேனென்றவிதுகளிலே கொள்ளும் போதுவெடிசூலைகுஷ்டமுதல்கருப்புவெள்ளைக், கோனென்றமேகத் தாலெடுத்தரோகங் கொற்றவனேகுன்மமுதல்வாயுபோமே. ௨௧௬

* திரிகடுகுசுக்குமிளகு திப்பிலி.

இரசசெந்தூரம்.

போமேதான்ரசம்பத்துகெந்திபத்து பொங்கமுடனரிதாரம்ஒன் றுங்கூட்டி, ஆமேதான் அம்மியிலேபொடியாய்ப்பண்ணிஅப்பனேவ றுத்தெடுநீகைபாகமாக, தானேதான் அண்டத்துப்பொடித்துக்கொ ட்டிதயவாகஅதிற்பாதிபோட்டுமூடி, வாமேதான்மணலில்வைத்துப் புடத்தைப்போடு வளமானசிந்தூரமாகும்பாரே. ௨௧௭

* அண்டங்கோழிமுட்டைக்குக்குடம்கோழியளவுபுடம்.

பாரேதான் பணவெடைதான்பனவெல்லத்தில் பாங்காகக்கொ ண்டவுடன்பறங்கிச்சோலை, சேரேதான்கிரந்தியோடு குட்டரோகம் செயலானதாதுநஷ்டம்லிங்கபுற்று, தீரேதான்யரையாபபு விற்புருதி யோடுதிறமாக தேகமதுகாந்தியுண்டாம், வீரேதான்போகருடகடா ட்சத்தாலே விளம்புகிறேன்புலிப்பாணி விளங்கத்தானே. ௨௧௮

## நீரெறிவுக்கு.

தானென்றநீரெறிவுகண்டுதானால் தயவாகக்கட்டு கொடியிலையரைத்து, வானென்றநிம்மக்காயளவுதானும்வகையாகக் கால்படியாஞ் சலத்திற்சேர்த்து, கோனென்றசீரகமும்ஏலந்தானும் கொடிதாகவிராகனெடைபொடித்துப்போட்டு, ஆனென்ற சீனிசக்கரைதான்துட்டு அளவாகக்கலந்துமேவுண்டுபாரே. ௨௧௯

## புரையாகியரணங்களுக்குத் தயிலம்.

பாரேதான்நொச்சிவேர் அழிஞ்சிவேரும்பண்பானவிழுதிவேர்சமனுப்போட்டு, சீதேதான்குழித்தயிலமாகவாங்கிசிறப்பாகபுரைகளுக்குவிட்டபோது, கூரேதான்விற்புருதிகண்டமாலைகுறிப்பானஅரையாப்புக்கன்னபுற்று, நேரேதான்தொடைவாழை யோடுமப்பாநேரானயிளவையொடுதீரும்பாரே. ௨௨௰

## பறங்கிப்பட்டைபதங்கம்.

பாரேதான்பறங்கி யுடபட்டையப்பாபாங்காக பலமைந்துநிறுத்துக்கொண்டு, சேரேதான்பொடிப்பொடியாய்க் கண்டமாக்கிசிறப்பாகவேசரியின்லத்திசாற்றில், வீரேதான்பிசரியதை யுலர்த்திவைத்து விதமாகமேனிச்சார் பொடுதலைச்சார். கூரே தான்கையான்சார்குப்பிச்சாறும் குணமானபசுவின்பாலின்னங்கேளே. ௨௨௧

## கேசரி கழுதை.

கேளேனீவெவ்வேறே யுலர்த்திக்கொண்டு கெணிதமுடன்கெந்தகம்பலந்தானொன்று, வாளேனீரசமைந்து லிங்கமைந்துவகையாகபொடிபண்ணிமூன்றுபோடு, வீளேனீமறுசட்டி தமர்கள்போட்டுவிதமாகச்சட்டிவாய்தன்னில்மூடி, சூளேனீபட்டையைத்தான்மேலே வைத்து சுகமாகமறுசட்டிகொண்டுமூடே. ௨௨௨

மூடியேமண்சீலைவலுக்கச்செய்து முசியாமல்தானெரிப்பாய்சாமமொன்று, ஆடியேயாறவிட்டெடுத்துலர்த்தி அப்பனேசூரணமாய்ச் செய்துக்கொண்டு, நாடியேகழஞ்சியொன்றுகொண்டதானால் நலமாக மேகவகையிருபத்தொன்றும், ஓடியேபோகுமடாசூலையெல்லாம்வுத்தமனேகருங்கிரந்திதீருந்தானே. ௨௨௩

திருமேவகைக்கரும்பு வெள்ளைக்காரனும்திரமானபிடிப்புவகைரணங்கள்யாவும், ஆருமேரணங்கள்வகைசிரங்குகுஷ்டம் அப்பனே செந்தாழைத் தடிப்புந்தீரும், கூருமேவாய்நாற்றம்தந்தைச் சூலைகுணமாகமண்டலந்தான்தின்றால்தீரும், பாருமேபத்தியந்தானிதற்கோ இல்லை பண்பாகபோகருடகடாட்சந்தானே; ௨௨௪

## வல்லாதி தயிலம்.

தானானவல்லாதி தயிலமொன்று தயவாகசெங்கொட்டை அழிஞ்சிக்கொட்டை, மானானபூவந்திக்கொட்டையோடு மைந்தனேயெட்டியுடகொட்டைதானும், வானான்வேம்பின்புண்ணாக்குங்கூடவகையானசிவனதுவேம்புமேதான், இவையெல்லாஞ்சரியெடையாகத்தூக்கிகனிவானகன்னியுடச்சாற்றில்போடே. ௨௨௫

போடேநீயொருநாள்தா னூறவைத்துப்பொங்கமுடனிருநாள் தானெடுத்துலர்த்தி, ஆடேநீசூழித்தயிலமாகவாங்கிஅப்பனேயிசியை த்தான்கொண்டாயானால், நாடேநீபனவெல்லந் தன்னிற்கொள்ளுநா யகனேசூலைபதினெட்டுந்திரும், வாடேநீபோகாமல் மண்டலங்கால் கொள்ள மைந்தனேபத்தியந்தானென்றுகாதே. ௨௨௬

## இடிவல்லாதி.

ஒன்றானவல்லாதிசொல்லக்கேளு உத்தமனேசேங்கொட்டைப் பலந்தான்பத்து, நன்றாகமுக்குவெட்டிச் சாணிப்பாலில்நலமாகமூன் றுநாளூறவைத்து, அன்றானகல்லுரலிற்றானேபோட்டு அப்பனேயெ ள்ளதனையிடித்துப்போட்டு, கன்றானகொப்பரைத்தேங்காயிரண்டுக னிவாகத்தானிடித்து கனிவாய்ப்போடே. ௨௨௭

போடேநீபறத்தியுடப்பாட்டையப்பாபொங்கமுடன்முக்காசி த்ரமூலம், கூடேநீகஸ்தூரிமஞ்சளோடு குணமானகருஞ்சீரம்சிவனு முவையோடு, தேடேநீகுராசாணிவோமத்தோடு தெளிவானவெற்றி லையின்காம்புதானும், நாடேநீகடுக்காயுந்திப்பிலிதானும்நலமானகோ ஷ்டம் வகைவகைக்குக்கேளே. ௨௨௮

கேளேதான்வகைவகைக்கோர் பலமாய்த்தூக்கி கெணிதமுடன் சூரணமாய்ச்செய்துகொண்டு, வானேதான்கல்லுரலில் மயனம்போ லவகையாகயிடித்ததனைச்சொல்லக்கேளு, ஆளேதான் ரசகற்பூரமப் பா அடவாக விராகனேந்து பொடித்துப் போட்டு, சாடேதான் பன வெல்லம்பலந்தானேந்து சார்வாகப்போட்டிடிப்பாய்தாயாய்த்தானே.

தானென்றவல்லாதி அந்திசந்தி தயவாகஒருமண்டலமேகொ ள்ள, வானென்றகுன்மமெட்டுஞ்சுக்லவாயு குணமில்லாரணசங்கிரந் திதிரும், ஏனென்றபத்தியந்தானிச்சாபத்தியம் இதமான உப்புமுத ல் வறுத்துக்கூட்டே. ௨௩௰

கூட்டப்பாதயிர்மோர் செய்யுமாகுங் குணமானதுவரையுடபரு ப்புமாகும், நாட்டப்பாபாசியென்றபயறுமாகும் நலமான நல்லாரை ப்பொன்னாங்காணி, ஆட்டப்பாமச்சமென்ற பதார்த்தங்கள்ளு அட வாகமற்றெல்லா மாகும்பாரு, ஆட்டப்பா விளக்கெண்ணை தேய்த்து மூழ்கு அடவாகசுந்திரம்போல் தேகந்தானே. ௨௩௧

## நோயின்நட்சத்திரங்கட்கறிவு.

தானென்ற அசுபதிநாள் முதற்காலப்பா தயவாகஒன்பதுநாள் சுரமேதிரும், தேனென்றரெண்டாங்கால் கொல்லுமப்பா திரமானப த்தாநாள் மரணமாவான், கோனென்றமூன்றாங்கால் பதினைந்தாகும் குணமாகநாலாங்கால் மரணஞ்செய்யும், வானென்ற பரணிதனில் மு தற்கால்மூன்று வளமானரெண்டாங்காலேழாமென்னே. ௨௩௨

என்னவேமூன்றாங்கால்பதினைந்தாகும் எளிதில்லாநாலாங்கால் பதினைந்தாகும், நன்னவேகார்த்திகைக்கும் முதற்காலானால் நலமானஒன்பதாநாள்திரும்பாரு, பன்னவேரண்டாங்கால் பதமேயாகும் பண்பானமூன்றாங்கால் பதினைந்தாகும், அன்னவேநாலாங்கால் நாற்பத்தெட்டு அடவாகரோகணியும் முதற்கால்பத்தே. உ௩௩

பத்தானரண்டாங்கால் பதினெட்டாகும் பண்பானமூன்றாங்கால் எண்ணைங்கப்பா. பெத்தானநாலாங்கால் எண்பத்திரண்டும்பேதமில்லைதீர்ந்துவிடும்பின்னங்கேளு, முத்தானமாளலையின் முதற்பாலப்பா முப்பதுநாளானபின்பு திரும்பாரு, சித்தானரண்டாங்காலிருபத்தெட்டு திரமானமூன்றாங்கால் பதினைந்தாமே. உ௩௪

() மான்றலை-மிருகசீரிடம்.

ஆமேதான்நாலாங்கால் முப்பத்தைந்து அடவான ஆதிரைநாள்முதற்கா()லொன்பான், தாமேதான்ரண்டாங்கால் மரணமாகும்தயவாகமூன்றாங்கால் நாள்தான்பார்த்து, வாமேதான்நாலாங்கா லிருபத்தைந்து வளமானபுனர்பூசம் நாள்தானேழு, போமேதானிரண்டாங்கால் நாள்தான்பத்து பொங்கமுடன்மூன்றாங்கால் பதினெட்டாமே. உ௩௫

()ஒன்பான்-ஒன்பது.

ஆமப்பாநாலாங்கால் மரணஞ்செய்யும் அடவானபூசமப்பாமுதற்காலேழு, சேமப்பாரண்டாங்கால் சாலபனிரண்டாகும் சுகமானமூன்றாங்காலொன்பதாகும், காமப்பாநாலங்கா லிருபத்தேழு கனிவானவாயலில்முதற்கா லொன்பான், தாமப்பாரண்டாங்காலிருபதாகுந் தயவான மூன்றாங்கால்தொண்ணூறுதானே. உ௩௬

தானானநாலாங்கால் முப்பதெண்பான் தயவானமகமுற்கால்மரணஞ்செய்யும்; வானானரண்டாங்கால் முப்பதாகும்வளமானமூன்றாங்கால் எண்பத்தைந்து, கூனானநாலாங்கால் நாள்தானைந்துகுணம்பூரமுதற்கால்தான் சாவுமாகும், தேனானரண்டாங்காலிருபத்தைந்தில் திரமானமூன்றாங்கா லிருபத்தாரே. உ௩௭

() முப்பத்தொன்பான்முப்பத்தொன்பது

ஆறானநாலாங்காலெண்பத்தொன்றும் அடவானவுத்திரந்தான் முதற்காலெட்டு, வீறானரண்டாங்கால் முப்பதாகும் யிதமானமூன்றாங்காலன்பத்திரண்டாங், தீரானநாலாங்கால் மரணமாகும்திறமான அஸ்தமும்முதற்கால்தாமெட்டு, கூரானரண்டாங்கால் பதினைந்தாகும்குணமானமூன்றாங்காலிருபத்தெட்டே. உ௩௮

எட்டானநாலாங்கா லெண்பத்திரண்டு எளிதானசித்திரையுமுதற்காலொன்பான், நெட்டானரண்டாங்கால் பதினைந்தாகும்நேரானமூன்றாங்கால் பன்னிரண்டு, கிட்டானநாலாங்கால் நாற்பத்தொன்று கெதியானசோதிமுதற்காலீராறு, குட்டானரண்டாங்கால்மரணஞ்செய்யுங் குணமானமூன்றாங்கா லெண்பத்தெட்டே உ௩௯

எட்டானநாலாங்காற் பன்னிரண்டு எழிவானவிசாக முதற்கால் தானென்பான், தட்டானரண்டாங்கால் நாள்தான்மூன்றே தயவான மூன்றாங்கால்நாற்பதாகும், பட்டானநாலாங்கால் எண்பத்தொன்று பாங்கான அனுஷமுதற்கால்தான்சாவு, சிட்டானரண்டாங்காலிருப தப்பா செயலானமூன்றாங்கால் தொண்ணூறென்றே. ௨௪௰

என்னவேநாலாங்கால் நாற்பதாகும் எழிவான கேட்டைமுதற் கால்தான்சாவு, தன்னவேரண்டாங்கா லிருபதப்பா நாயகனே மூன் றாங்கால்முப்பத்தொன்று, வன்னவே நாலாங்கா லெண்பத்திரண்டு வளமான முதற்கால்தான்சாவு, அன்னவேரண்டாங்காலெண்பதாகு ம் அடவான மூன்றாங்கால்நாள்தான்பத்தே. ௨௪௧

பத்தானநாலாங்கால்பதினெட்டாகும் பண்பானபூராட முதற் காலொன்பான், சித்தானரண்டாங்கால்மரணஞ்செய்யுஞ் செயலான மூன்றாங்கால்நாள் தான்பத்து, வித்தானநாலாங்கா லண்பத்தினாலுவி தமான உத்திராடமுதற்காலே, நித்தானரண்டாங்காலிருபதாகும் நேரானமூன்றாங்காலன்பதாச்சே. ௨௪௨

ஆச்சப்பாநாலாங்கால்நாற்பதாகும் அடவான * ஓணமுதற்பதி னொன்றப்பா, பேசப்பாரண்டாங்கால்பத்துநாளாம் பேதமில்லைமூன் றாங்கால் நாள்தானெட்டு, வீச்சப்பாநாலாங்காமரணஞ்செய்யும் வித மான அவிட்டமுதல்காத்தா னென்பான், நீசப்பாரண்டாங்கால் பதி னைந்தாகும்நிசமானமூன்றாங்கால்முப்பத்திரண்டே. ௨௪௩

* ஓணம்-திருவோணம்.

இரண்டானநாலாங்கால் முப்பத்தொன்பான்நிசமானசதயமுத ற்கால்தானே, வண்டானரண்டாங்கால்பத்தாம்பாரு வளமானமூன்றா ங்கால்நாள்தானாலு, திண்டானநாலாங்கால் பதினாறுகுங்குணமானமூ ன்றாங்காலெண்பத்தொன்றே. ௨௪௪

ஒன்றானநாலாங்கால் நாற்பதொன்று ஒளிவுவரத்திட்டாதிமுத ற்காலேழு, நன்றானபனிரெண்டாகும் பதினெட்டாகும் நலமான மூ ன்றாங்காலேழாம்பாரு, குன்றானநாலாங்கா லிருபத்தெட்டும் குண மானரேவதியுமுதறகால்சாவு, அண்டானரண்டாங்கால் பதினொன்ற ப்பா அடவானமூன்றாங்கால் பதினெட்டாமே. ௨௪௫

மரணநாளறிய.

ஆமேநீநாலாங்காலிருபத்தாறு அடவான மரணமென்ன நாள் தான்சொல்வேன், வாமேநீ * அருக்கநாள்பணியாகாது வளமானதிங் கட்சித்திரையுமாகா, நாமேநீசெவ்வாய்க்குவுத்திராடந்தயவானபுத

னுக்குஅஸ்தமாகா, நாமேசீ * குருநாள்தான்கோட்டையாகா லமா
னபுகர்னுள்பூராடத்திமீதே. உசசு

* அருக்கநாள-நாயிரு * குருநாள்-வியாழம், புகர்நாள்-வெள்ளி.

தீதானசனிநாள்ரேவதியுமாகா தீங்குவருமின்னுளில் நோய்கள்
கண்டால், வாதானநமக்குமே அருதியாகும் வந்தநோய்தீராதுசொல்
லுந்தாளுணவயித்தியரேநூலைப்பார்த்து தயவாகவைத்தியங்கள் செ
ய்யவேணும், கோனுனபோகருடகடாட்சத்தாலே கொற்றவனேபுலி
ப்பாணிசொன்னேனென்பாரே. உசஎ

சகலமேகங்களுக்குரசகெந்திமெழுகு.

பாரேசீரசகெந்திரசகர்ப்பூரம் பண்பானஅரிதார மூசிகாந்தம்,
சீரேசீதுருசுதுத்தமிருதார்சிங்கி சிறப்பானசுக்குடனே ஓமமஞ்சள்,
பாரேசீதிப்பிலியுமரத்தைதகோஷ்டம் வளமானவாலுழுவை சோம்பு
ஏலம், கூரேசீசாதிக்காயமிளகுசீரகம் குணமானகார்போக மாசிக்கா
யே. உசஅ

சீரம்-சீரகம்.

காயானதோர்வரம்வாய்விளக்கம் களியசம்புலவங்கமுடன் பா
ங்கிப்பேட்டை, காயானசேங்கொட்டைகடுக்காய்தோலும் வானகரு
ஞ்சீரக்காட்டுச்சீரம், பாயானசிறுதேக்குந்தாளிசப்பத்திரி பண்பாக
முத்திரிகைபிரமமூலம், வாயானஎட்டிவிரைதேற்றான்வித்து வளமா
னநீர்ப்பூண்டுகள்ளுமாமே. உசகூ

* பிரம்மின்மூலம்-பிரப்பங்கிழங்கு.

ஆமேநற்கொள்ளுடனேதேங்காய்க்கூட அடவானசின்னிவேர்
சங்கம்வேரும், தாமேசீஅமுக்கரு கொல்லன்கோவை தயவானகொ
டுவேலிலத்தோடு, வாமேசீவகைவகைக்கு விராகனென்று வளமான
கோழிமுட்டைரண்டுவாரு, போமேசீஇவையெல்லாம் பொடியாய்ச்
செய்து பொங்குமுடன்கல்லுரலில்போட்டுகுத்தே. உருய

குத்தப்பா இதுவேரேபணவெல்லந்தான் குணமாககாம்சாமமிடி
த்துத்திரு, பெத்தப்பாவழித்தெடுத்து சிமிழில்வைத்து பேதமில்லை
சுண்டக்காய்வீதங்கொள்ள முத்தப்பாமோருஞ்சோருண்டுமுன்னே
முசியாமல்மருந்துண்ணமண்டலந்தான், சித்தப்பாமுழுகுநாள் மருந்
துண்ணுதே சிறப்பாகபத்தியந்தானில்லைதானே. உருக

தானென்றவெடிசூலைமேகசூலை தயவானஇடிசூலை புடைக்குஞ்சூ
லை,வானென்றதுடிவாதசூலையாகும் வளமானகால்குடைச்சல் கார்ணை
தீரும், மானென்றஆம்புலிப்புருதிமாலை மதியாதகுட்டமொடு விழங்

ர்தீரும், கோனென்ற()குரைநோயுஞ் சிரங்குந்தீரும் குணமானபுழு வெட்டித்தடிப்புபோமே. ௨௫௨

() குரைநோய்கள் கால்விரல்கள் கைவிரல்கள்குரைகிற பதினெட்டுக்குட்டத்தொன்று.

போமேநீயோ தன்னிலிங்கந்தன்னில்பொலிவாகஆமையடிசிலந் திமேகம், தாமேநீசெங்கிரந்திகருங்கிரந்தி தயவான அரிகிரந்திபொ ரிகிரந்தி, வாமேநீபருகிரந்திபிடிகிரந்தி வளமானபிடிவிழுந்து புரை மேற்புண்ணு, ஆமேநீ அரைக்கடியுந்தண்டிற்புண்ணுஅடவானக்குள் ளிமாதேதேவியாமே. ௨௫௩

ஆமேநீ தொடைவாழைமூட்டுவாழை அடவானகுழிவாழை முது குவாழை, சேமேநீபுழுகுவாழைபலாவில்வாழை செயலான()தமர்க் காய்ச்சிலந்தியோடு, ஓமேநீகுறிப்புற்று ஒளிவான இடிப்புற்றுகன்ன புற்று, தாமேநீபலச்சிலந்திக்கன்னத்தோசை சதை வளருங்கண்ணு சைபோகும்பாரே. ௨௫௪

() தமர்காயாச்சிலந்தி துளையாருச்சிலந்தி.

பாரடாபிளவையொடுபிளவைப்பூச்சி பண்பானராசனென்ற பி ளவையோடு, கூரடாநேத்திரம்மேல் பிளவையோடுகொடிதுதடிச்சி லந்திபுடச்சிலந்தியோ, கோடானபவுத்திரங்கள்மூளைமூலங்கள் கெ டியானபதமெட்டுச்சக்கிரத்தினோடு, வீரடா இவைகளெல்லாந்தீரும் தீரும்விதமர்கபோகருடகடாட்சந்தானே. ௨௫௫

தானே தானின்னமொன்றுசொல்லக்கேளுதனிக்கட்டுசிரகத்தி னிலையைவாங்கி, தானே தான்சகிக்கயதைதடவும்போதுவளமானவெ டிபில்லியெரிவுவீக்கம், சோனே தான்மேலெரிப்புதிரும்வில்விகுணமா கும்பார்வைமுதல்திட்டிதீரும், ஆமேதான்போகருட கடாட்சத்தா லேஅடவாகப்பாடுகிறேன்புலிப்பாணியாமே. ௨௫௬

குமட்டிக்காய்பதங்கம்.

ஆமேகேள்குமட்டிக்காய் பதங்கஞ்சொல்வேன் அப்பனேதழு தாழையுமாவின்பட்டை, தாமேநீகொடிவேலியமுக்கராவேர் தயவா கப்பாவட்டைமுடக்கற்றானும், வாமேநீவெள்ளைச்சாரணையுங் கூட வளமானசத்திச்சாரணையுமப்பா, நாமேநீவகையுடனேசல்லவேளை லமானதூதுவளைகடைச்சியாமே. ௨௫௭

ஆமப்பாகுப்பைமேனிகூடஅடவாக சிவன்வேம்புஅவரிக்கூட் டி, தாமப்பாவில்லவேர் மாவிலிங்கந்தயவாக பிரம்மினுடகிழக்கினே

டு, வாமப்பாவகைவகைக்கு பலந்தான்வேறு வளமாகத்தூக்கிசூரண மேசெய்து, கோமப்பாசரக்குவகைசொல்லக்கேளு குணமாகபோகரு டகடாட்சந்தானே. ௨௫௮

தானென்றசுக்குடனேகிராம்புவோமம் தயவாகதேசாவரஞ்சி றுநாகப்பூ, வானென்றமிளகுதாளிசையாம்பத்திரி மைந்தனேதிப்பி லிவால்மிளகுகூட்டு, கானென்றதிப்பிலியில்மூலமப்பாகருவானசதகு ப்பைபராங்கிப்பட்டை, கோனென்றஅரத்தையதிவ்டயம் கூட குண மானகருஞ்சீரகந்தான்கூட்டே. ௨௫௯

கூட்டப்பாவகைவகைக்குவிராகனேந்து குணமாகச்சூரணமாய் ச்செய்துக்கொண்டு, நாட்டப்பா இருதூளுங் கல்வத்திட்டுநலமானதி ருகுகள்ளிப்பால்தான்கேளு, மாட்டப்பாவிராகனிடையைந்து வாரு மைந்தனேவேலியென்றபரித்திச்சாறு, ஆட்டப்பா கொள்ளமட்டும் விட்டுஆட்டி அப்பனேமைபோலேயரைத்துலர்த்தே. ௨௬௰

உலந்தபின்புகுமட்டிக்காய் கொண்டுவந்து உத்தமனே விரைய தையும்போக்கிப்போடு, அலர்ந்தபின்புஅதிற்செலுத்திவாயைமூடிஅ ப்பனேபாண்டத்திலுள்ளேவைத்து, மலர்ந்தபின்மண்சட்டியில மண் சீலைசெய்துமைந்தனேகுழிவெட்டிபுதைத்துக்கேளுகலந்தபின்புவெ ள்ளாட்டுஎருவைகொண்டுகனமாகபாண்டத்தைபுதைத்துப்போடே.

போடப்பாலகுபுடமதாகப்போடுபொங்கமுடன்கருகாகவெடுத் துக்கொண்டு, நாடப்பாதூளையெல்லாம் வொன்றிற்கொட்டிநலமாகதி முலர்த்திவைத்துக்கொண்டு, கூடப்பாசாதிக்காய் விராகன்பத்துகு ணமானகுங்குமப்பூ விராகன்பத்து, ஆடாப்பாபொடியைச்சூரணமா ய்ச்செய்து அப்பனேவெருகடியாய்கொண்டிடாயே. ௨௬௨

கொண்டபின்புஎருமைமோர்சோறுமுண்ணு கொற்றவனேஉப் பதுதான்வறுத்துக்கூட்டு, கண்டபின்மற்றதொன்றுமாகாதப்பாகரு வானமூன்றுநாளாறுவேளை, உண்டபின்பு வயிறுளைந்தால்நிறுத்திப் போடு உத்தமனேயில்லா விட்டால்மருந்தையுண்ணு உண்டபின்பு போகருடகடாட்சத்தாலே விதமாகப்புலிப்பாணிவிளம்பினேனே.

விளம்புகிறேன்நோய்தீரும் விபரங்கேளு விதமானவாதமொடு வாதசூலை, களம்புகிறேன்காலுகைமுடங்கிலுந்தலவில்லா()பக்ஷமென் றவாதம்போகும், இளம்புகிறேன்சிரணமும்பொருமல்தீருங்கிருபை யுடன்வயிற்றுவலிகுன்மம்போகும், விளம்புகிறேன்போகருடகடாட் சத்தாலே அன்பாகபுலிப்பாணிஅருளினேனே. ௨௬௪

() பட்சவேலம் பருசவாயு.

## சூக்கச்செந்தூரம்

அருளாலேயின்னமொன்று சொல்லக்கேளு அடவானகெந்த
கந்தான் விராகனென்று, பொருளானரசமது தான் விராகனென்று
பொங்கமுடனிருசாக்குகலவத்திட்டு, மிருளாலேசிற்றாமணக்கெண்
ணெய்விட்டு மீறுமல்மெழுகதுபோலரைத்துருட்டி, திருளாலேநார்
பட்டமேலேசுற்றி திறமாகக்கொடிபோலப்பட்டைகேளே. ௨௬ரு

கேளேநீபட்டையைத்தான் தண்ணீர்விட்டுக் கிருபையுடன்அ
ரைத்தெடுத்துக்கவசங்கட்டி, நாளேநீபுகையினுள்ளேசிப்பித்தானே
நன்றாகத்தான்போட்டு மேலேவைத்து, சூளேநீமேலுமந்தப்பொடி
யைப்போடு தயவாகப்புடமிட்டுச் செந்தூரமாமே. ௨௬௬

() சில்லு புதியவோடு.

()சாணுமியில் சாண்வுயரமுள்ள உமியில்

ஆமப்பா நோய்களெல்லாமகன்றுபோகும் அடவாகதேகமது
சிவந்துமின்னும், போமப்பாபெரியோர்கள்கடாட்சஞ்செய்வார் பொ
ங்கமுடன்தேவதைகள் கிருபைகூறுந் தாமப்பா சிந்தூரமுண்டோர்
க்கெல்லாந் தாழ்வொன்றும்வாராது கர்மந்தீரும், நாமப்பாபோகரு
டகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே. ௨௬எ

## செந்தகரசாயனம்.

பாடினேன்செந்தகந்தான் வேணமட்டும் பாங்காகவாங்கிவந்து
சொல்லக்கேளு, ஆடியேசலமதில் பசுவின்பாலே அடவாகதானூற்றி
புதைத்துப்போடு, கூடியேசிறுகாலசந்தமர்கன்போட்டு குணமான
பார்கலசமேலேவைத்து, காடியேகந்தகத்தை யிதக்குள்ளிட்டு நா
யகனே சில்லிட்டு சீலேசெய்யே. ௨௬அ

செய்தபின்பு லகுபுடமாகப்போடு சிறப்பானகெந்தியது திறம
தாச்சு, செய்தபுன்பு அதையெடுத்துக் கழுவிப்போட்டு குமிழியம்
மிதனில்நீர்பூண்டின்சாற்றில், பெய்தபின்பு தனையரைப்பாய் சாம
மைந்துபாங்கான அதையெடுத்து வைத்துக்கொண்டு, செய்தபின்பு
விராகனெடைபாதிதானுந் தீவிரமாய்ப்பனவெல்லந் தன்னிற்கொள்
ளே. ௨௬௯

கொள்ளவே மண்டலத்தில் குட்டரோகம் குணமான வெள்ளை
யொடுகருப்புந்தீரும், கள்ளவேசொரிசிறங்குமேகரோகந் தடிப்புட
னேசெவ்வன்மைக்கடிரணங்கள், விள்ளவேபத்தியங்கா நிதற்கோயி
ல்லை விதமானநெய்பாலு தயிர்மோருண்ணு, அள்ளவேபோகருடக
டாட்சத்தாலே அடவாகப்புலிப்பாணி பாடினேனே. ௨எ௰

அருளாலேயின்னமொன்று சொல்லக்கேளு அடவாகஆலரசு
அத்திப்பட்டை, பொருளாலேவகைவகைக்குப் பலந்தான்பத்துபுக

ழ்ந்திடித்துப்பாண்டத்தில்போட்டுபின்பு, திருணாமமல்பூண்டுடனே சலத்தைவிடுத்திறயாகக்காச்சியதைமேலேவாரு, யிருளாதே யீராறு நாள்தான்வாரு இதமாகஅந்திசந்தி மருந்தையுண்ணே. உஎக

உண்ணப்பாசிவகாந்தி விஷ்ணுகரந்தை உத்தமனே அரைத்து முளர்க்காய்விதம், பண்ணப்பா கொன்மூலமுளைகளெல்லாம் பதறி யேயுதிகனிந்துவிடுங்கண்டுபாரு, நண்ணப்பாபத்தியங்க ளிதற்கோ யில்லைநாயகனேயீராறுநாளுக்குள்ளே, இண்ணப்பா நிறத்துவிடுங்க ண்டுபாரு திறமானபோகருட கடாட்சந்தானே. உஎஉ

பயித்தியந்தீர.

தானென்றசிறுகீரைவேரைத்தானுந் தானரைத்துஎலுமிச்சங் காய்தான்விதம், வானென்றமூன்றுநாளாறுவேளை வளமாகவெந்நீரி ற்கொடுத்துப்பாரு, கோனென்றஆறுநாளுப்பாகாதுகொற்றவனேஏ ழுநாளெல்லாமாகும், ஊனென்றபயித்தியந்தான் தீர்த்துப்போகும் உத்தமனேபோகருடகடாட்சந்தானே. உஎ௩

தானப்பாஇப்பாகம் நீர்க்கடம்புவேரை தான்கொடுப்பாய் பயி த்தியந்தான் தீரும்பாரு, வானப்பாதும்பைமினகு வலமாகபூண்டுநசி யமிட்டுஆறுவேளை, சீனப்பாமயக்கமுதல்கிறுகிறுப்பு சிறப்பானஅ ருநினைவுந்தீர்ந்துபோகும், ஆனப்பாபோகருடகடாட்சத்தாலே அ டைவாகப்புலிப்பாணிபாடினேனே. உஎச

சகுனம்.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு பணமில்லாதலைவிரி த்தல்மொட்டையப்பா, நாடினேன்சகுனிசெட்டிதட்டான்நலமான குயவன்முக்கரையன்செக்கான், கூடினேநாவிதனும் பிணிநோயாள ன்குணமில்லாகட்டையோடு விலங்குயாக்கை, சூடினேன்கயிறு* க சக்கிரியுமாகா சுணைகெட்ட * வழிகுண்டியாகாதென்றே. உஎரு

* சக்கெரிஎண்ணெய்வாணியன்.

* வழிக்குண்டிகட்டுச்சோறு.

ஆகாதுபுகையோடு புண்புதும்பல்அப்பனேஅழுகையொடு முச லுமாகா, வாகாதுநீர்ப்பானை யுடைத்தபோது வழியிலேயடித்துவி ழுக்காணப்போகா, பாகாதுமரம்வெட்டல் அடியுஞ்சண்டை பண்பா னகட்டிலொடுநாற்காலிமுக்காலி, சோகாதுஇவைமூன்று மலர்ந்துக ண்டால் சுருக்கப்பாமரணமென்று சொல்லப்போமே. உஎசு

போடேநீதேவதைகள் ராசயானை பொலிவான பூஷணமாய் பெண்கள்பிள்ளை, காடேநீபூரணமாம் கும்பத்தோடு நலமான தயிரோடுபாலும்பானை, சூடேநீகுதிரையோடு வேதியர்கூட்டஞ் சுகமானகுடைசுருட்டிசிவிகைகள்ளு, ஆடேநீவெண்சாமரை சுகந்தபுஷ்பம் அப்பனேவாத்தியங்கள் கேட்கநன்றே. ௨௭௭

சுரங்களுக்குக்கியாழம்.

நன்றாகயின்னமொன்றுசொல்லக்கேளு நலமானதூதுவளைகண்டங்கத்திரி, பன்றாகநிலவேம்பு முத்தக்காசு பாங்கான ஆடாதோடைவிஷ்ணுகாந்தி, குன்றாதபற்படகம் சீந்தித்தண்டு குணமானசிற்றாமுட்டிவேரினோடு, அன்றாகசெந்தொட்டி மூலமப்பா அடவானவேம்புடையபட்டைதானே. ௨௭௮

பட்டையப்பா * முசுக்கைமா துளையின்வேரும் பாங்கானதும்பைப்பேய்புடலுங்கூட்டி, நிட்டியமாய்நாய்துளசிவேருமையாநிசமாகவகைவகைக்கு விராகன்பத்து, கட்டையாம் உரல்தனிலேபிடிக்கும்போது தனியாகசரக்குவகை சொல்லக்கேளு, நட்டமாம்தேக்குதாளிசமாம்பத்திரி நலமானசுக்குடன் சிற்றரத்தையாமே. ௨௭௯

* முசுக்கை முசுமுசுக்கை.

ஆமேதான்தேசுவாந்தித் திப்பிலியப்பா அடவாகவகைவகைக்கு விராகன்மூன்று, தாமேதானிவையெல்லாமிடித்துத்தோண்டிதயவாக ஆறுபங்குவைத்துப்பின்னே, வாமேதான்பாண்டத்திலெடுத்துப்போடு வளமாகரெண்டுபடிசலத்தையிட்டு, போமேதானெட்டொன்றாய்க்குறுக்கியப்பா பொங்கமுடன்மூன்றுநாள் கொடுத்திடாயே.

கொடுத்திடுமூன்றுநாளாறுவேளை குணமாகும்புளிபுகையுமோருந்தள்ளு, அடுத்திடவேகொடுத்திடுவர்யிந்தபாகம் அப்பனேசுரமேகமெல்லாந்தீரும், கடுத்திடுநீயிதுமிஞ்சி சுரமேவந்தால் கற்பமொன்றுசொல்லுகிறேன்கனிந்துகேளு, வடுத்திடுந் திப்பிலிசுக்கு சிற்றரத்தைவளமானதேசாவரங் கோஷ்டமாமே. ௨௮௧

ஆமேதான்தேக்குஅதி மதுரங்கிராம்பு அப்பனேகருஞ்சீரகம் வாய்விளங்கம், போமேதான்தாளிசபத்திரியமாஞ்சில் பொங்கமுடன்மிளகுடனே அக்கிராகாரம், அதிவிடயமதிமதுரமாகக்கூட்டிதயவாகவகைவகைக்கு விராகன்வாங்கி, வாமேதான்பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு வளமாகப்பொடிபண்ணி வைத்துக்கொள்ளே. ௨௮௨

கொள்ளேநீயிஞ்சியைத்தான் சுரசஞ்செய்து குணமாகவெருக டிதான்பொடியைப்போட்டு, அள்ளேநீமூன்றுநாளாறுவேளை அப்ப னேகொடுத்தவுடன் றிரும்பாரு, தள்ளேநீயிஞ்சியங்கமானால் தய வானதோசசன்னி அடுத்துதானால், சள்ளேநீசின்னியுடன் மரவிலி ங்கஞ் சுகமாக னொச்சியுடன் முருங்கையாமே. உஅரு

() பூராகம் நாக்கு பூச்சி.

வாரேதான்முலைப்பாலு () முள்ளிப்பாலும் வணமாகமுசுறுமுட் டைப்பாலுஞ்சேறு, கூரேதான்வெள்ளுள்ளிதயிலங்கொஞ்சம் குண மானபாலுடைய யீண்டுகொஞ்சம், நேரேதான்கோழியுட முட்டை கொஞ்சம் நிச்சயமாய்க்கஸ்தூரிரோசனையுங்கூட்டி, சாரேதான்கொ டுத்திடுவாயாறுவேளை சாந்தமாய்ப்போகுமடாகண்டுபாரே. உஅரு

() உள்ளி வெள்ளைப் பூண்டு.

() முசுறுமுட்டை ஒருவிதஎரும்புமுட்டை.

பாரேநீவலிப்புடையசன்னிதோஷம் பறக்குமடா இச்சுரங்க ண்டபோதே, தேரேநீவிதியிருந்தால் பிசக்குபாரு திறமாக()சாத்திய ()மசாத்தியமுங்காணும், வீரேநீசத்தியந்தா னிருந்தால்செய்நீ விதமாய்சாத்தியமென்றால் சொல்லொண்ணாது, கூரேநீபோகருடகடா ட்சத்தாலே கொற்றவனேபுலிப்பாணி பாடினேனே. உஅசு

() சாத்தியம்சவுக்கியம் () அசாத்தியம்நிலையின்மை.

தளம்கண்ட அவிழ்தம்.

பாடினேன் தளமொன்றுசொல்லக்கேளு பங்காகப்பொன்வெள் ளிபவழஞ்சிங்கி, நாடினே நாமமென்றம்வாடுமப்பா நலமானவில் வோடுவிளாவிஞேடு, கூடினேன்கிராம்புஅதிமதுரஞ்சுக்கு குணமாக தேசாவரந்திப்பிலியரத்தை, ஆடினேஉத்திராச மிவையெல்லாந்தா ன் அடவாகமுலைப்பாலி லுரைத்திடாயே. உஅஎ

உரைத்தெடுத்து () மயிற்பீலிசுட்டச்சாம்பல் உடன்சத்திகாவு தனில்தளமாய்ப்போட்டு, கரைத்தெடுத்துகாவதனில்கலந்தானாருங் கணவில்லாதோஷமதுதணியும்பாரு, மறைத்தெடுத்த பேய்குமட்டி வேரத்தட்டி மைந்தனேகொடுத்துவிடு அடக்கிக்கொள்ள, துரைத் தெடுத்ததேகத்தில்வந்ததோஷந் துன்பமதுதான்விலகும் கண்டு பாரே. உஅஅ

() மயிற்பீலி-மயிலிறகு.

## தாகத்துக்குக்கியாழம்.

பாரேதான்விளாவிலையு மாடாதோடை பாங்கான அரசினுடன் கொழுந்துமப்பா, சேரேதான்வகைவகைக்குப்படி தானென்றுசிறப் பானமணலும்அரைபடிதான்போட்டு, கூரேதான்முந்திரிக்காய்மது ரந்தானுங் குணமாகவகைவகைக்கு விராகனென்று, வீரேதான்இ வையெல்லாங்கருகுமட்டும் விதமாகத்தான்வளர்த்துதண்ணீர்வாரே, வார்த்தப்பா தானெரித்துக் குறுக்கக்காய்ச்சி வடிகட்டிதான் கொடுப்பாய்தாகந்தீரும், கோர்த்தப்பாயிந்தவிதமூன்று நாளுங்கொ டுத்திடவேதாகமென்றதெல்லாந்தீரும், பார்த்தப்பாசுரதாக முஷ்ண தாகம் பருவானஅந்திரதாகம்பறவைதாகம், போர்த்தப்பாகுடிநீரை குடித்தபோது பொங்கமுடன்தீருமடா திண்ணந்தானே. ௨௯௰

## வாய்வுகளுக்கு.

திண்ணமதாய்ச்சங்கம்வேர் முக்கொழுஞ்சி திரமானகொடிவே லிபரங்கிப்பட்டை, வண்ணமாய்ச்சுக்குடனேவால்விளங்கம் வளமா னசிறுதேக்குகொத்தமல்லி, எண்ணமாய்வகைவகைக்குவிராகன்ரண் டு இடித்தெடுத்துபாண்டத்திலிதமாய்ப்போட்டு, நண்ணயமாய்ச்ச லமதுதான்கொஞ்சம்விட்டு நாயகனேஎட்டொன்றாய் குருக்கிவாங் கே. ௨௯௧

வாங்கியேமிளகதுவும்விரா னென்றுவளமாகப்பொடிபண்ணிபி தனிதமேபோட்டு, தாங்கியேவிளக்கெண்ணை அட்டெடைதான் விட்டு தான்கொடுப்பாய்மூன்றுநாளி தமேவனே, யேங்கியேபுளிபுகையுந்தள் ளுதள்ளு யிதமானவாயுடனேமேகவாயு, வோங்கியேமேகப்புபுளி த்தயேப்பம் வோடிவிடும்வாயுவெல்லாந்தீருந்தானே. ௨௯௨

## சூட்டுக்கு குடிநீர்.

திருமேயின்னவென்று சொல்லக்கேளு திறமானஇளநீருபடி தான்மூன்று, ஆருமேஎலுமிச்சம்பழச்சாறுநாழி அப்பனேசுண்ண நீர்த்தெளிவுதானும், ஏருமேபடியறைதானளந்துவாரு யிசையான குமரிச்சார்பலந்தானாறு, வீறுமேசீரகமும் பலந்தானென்றுவிதமா னஏலமரைப்பலந்தான்போடே. ௨௯௩

போடேநீஏலமதைப் பொடித்துப்போடு பொங்கமுடன்புதுச் சட்டிதன்னிற்சேர்த்து, நாடேநீமணலிட்டெரிஞ்செய்துநாயகனேயி துமேலேசட்டிவைத்து, கூடேநீஈரச்சீலையதனுல்மூடிகுணமாகவை த்திருநீ பகற்காலந்தான், சாடேநீராக்காலம்பனியில்வைத்துசார்வா கமண்டலமுங்கால்தான்கொள்ளே. ௨௯௪

கொள்ளவேகால்படி தானந்திசந்தி குணமாகக்குமரிச்சார்பலமு
ங்காலு, உள்ளேநீகொண்டுவரயிந்தப்பாகம் உத்தமனேநீரெரிவுரத்
தவெள்ளை, தள்ளேநீயுள்ளெரிவுங்கடுப்புந்தீருந் தயவில்லாசங்கைய
துதணியும்பாரு, அள்ளேநீபோகருடகடாட்சத்தாலே அடைவாக
ப்புலிப்பாணிபாடினேனே. உசுரு

வண்டுகடிதடிப்புக்குசவ்வீரக்களிம்பு.

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு பண்பானவீரமதுவி
ராகனென்று, ஆடினேன்வெண்ணெயிலே போட்டரைத்துஅடைவா
கமேல்பூசவகைகையக்கேளு, கூடினேன் மேல்தனிலே மேகத்தாலே
கொற்றவனேசொரிசொரியாய்ப் புள்ளிகாணும், நாடினேன்கையும்
வண்டுகடிதானென்று நாட்டிலேசொல்லுவார்களறிந்துபாரே. உசுசு

பூசக்களிம்பு.

பாரே நீபுள்ளியின்மேல்மூன்றுநாள்தான் பண்பாகத்தான்பூச
ரணமுமாகும், சேரேநீரசமெனறபூரமப்பா செயலாக விராகனிடை
வாங்கிவந்து, தீரேநீபசுவெண்ணெவிராகனெந்தில் திறமாகத்தான்போ
ட்டு அரைத்துமைபோல், வீசுரநீபூசிடவும்ரணங்களாறும்விதமான
போகருடகடாட்சந்தானே. உசுஎ

உஷ்ணகாங்கைக்குடிநீர்.

தானே தானின்னமொன்றுசொல்லக்கேளுதயவான அறுகம்வே
ர்நெரிஞ்சில்வேரும், மானேதான்முருங்கையுடனர்க்குமப்பா மைந்த
னேவகைவகைக்குப்படிதானென்று, வனேதான்பொடிப்பொடியா
ய்நறுக்கிப்போன்போல் வறுகையிலேசீரகமிளகும்போட்டு, ஆனே
தான்கசகசாவிராகன்ரண்டுஅப்பனே தான்போட்டுச்சலத்தைவாரே
வாரேநீபடிசலந்தானெட்டொன்றாகி வளமாகப்பூசிவெண்ணெக்
கழுஞ்சிப்போட்டு, சேரேநீகொடுத்தவுடன் வுஷ்ணகாந்தல்சேர்ந்து
வந்தவயிரவலி கடுப்புந்தீரும், கூர்ரேநீயிந்தவிதி மூன்றுநாள் தான்
கொடுத்திடவே வுஷ்ணத்தால்காங்கைதீருந், தீரேநீபோகருடகடா
ட்சத்தாலே திறமாகப்புலிப்பாணிசொன்னேன்தானே. உசுஅ

குடைச்சலுக்குதயிலம்.

தானையாமயிற்பீலிபலந்தான்ரண்டு தான்போட்டுசட்டியிலேக
ருக்கிக்கொண்டு, வானையாமஞ்ஜேசில்லதான்விராகன்பத்து வளமாகத்
தான்போட்டுஉருகும்போது, சேனையாவேப்பெண்ணெபடிதான்விட்
டுசெயலாகத்தானெரித்துவெடுத்துக்கொண்டு, மானையாபூசியல்லோ
பிடிக்கும்போது மைந்தனேகுடைச்சல்முதல் குத்தும்போமே.

போமேமீயிலைக்கள்ளிக்கொண்டுவந்து பொடிபொடியாய்க்கண் டமதாய்நறுக்கிப்போட்டு, ஏாமேசலம நதான்பதக்குவிட்டு நலமா னஎட்டொன்றாய்குறுக்கிக்கொண்டு, தாயேனீமறுசட்டிதனிலிருந் துதயவாகவெள்ளாட்டுஅமுரிதானும், வாமேபடிரண்டுகூடவிட்டுவ ளமாகப்பாங்குபோல் காய்ச்சிடாயே. ௫௱௧

காய்ச்சியேமேலெங்கும்பூசச்சொல்லி கனிவாகஆட்டுத்தோல் *கலைத்தோல்தன்னில், ஆய்ச்சியேபடுத்திருக்கச்சொல்வாய்நீயும் அ ப்பனேசாயரட்சைதன்னியகேளு, வாச்சியேநொச்சிலைமுடக்கற்று னும் வளமாகத்தழுதாழைமாவிலிங்கம், காச்சியேமேனியுடன் தும் பைகொண்டு தயவாகபூவரசன்பட்டையாமே. ௫௱௨

* கலைதந்தால்மான்தோல்.

ஆமேனீவெட்டியப்பாவட்டையாக அடவாகஎருக்கம்பூ கடம் பின்பட்டை, தாமேநாட்டெலுமிச்சைஇலையினோடு தயவாகஉத் தாமணிதிருகுகள்ளி, வாமேதானிலுப்பையுடபட்டைதானும் வள மானநெல்லுமியுமிவைகளெல்லாம், போமேதான் சலம்விட்டு வேக வைத்துப் பொங்கமுடன்மூன்றுநாள்போதவாரே. ௫௱௩

வாரேதான் அந்திசந்திவார்த்தபோது வளமில்லாசூலையொடு பி டிப்புதானும், யீரேதான்கைகால்குடைச்சல்திரு மிகுந்தநொருமே ல்கடுப்புக்குத்துதிரும், பாரேதான்சருவாங்கவாதம்போகும் பண்பா னபுடைசூலைகரணைபாதந், நீரேதான்பே கருடகடாட்சத்தாலே தி றமாகப்புலிப்பாணிபாடினேனே. ௫௱௪

மாந்தத்தோஷத்துக்குளிகை.

தாமப்பாஇன்னமொன்றுசொல்லக்கேளு தயவானவில்வமப்பா விளாவும்வேளை, வாமப்பாநாய்வேளைகஞ்சாங்கோரை மைந்தனேசி ன்னியொடுகாட்டுமொச்சை, தேமப்பா திருநற்றுப்பச்சைதும்பைதெ ளிவானசிறுதும்பைகண்டங்கத்திரி, வாமப்பாஅமுக்கரா சங்குத்தா ங்கி வளமானநுணாவேலிப்பருத்தியாமே. ௫௱௫

தாங்கி மலைதாங்கி.

ஆமேதான்முடக்கற்றான்வெண்காவேளை அடவானசாணையு முட்டைநாறி, தாமேதான்கொஞ்சிவேர்புண்ணாக்குப்பூடு தயவான பிரமியொடுசித்திரமூலம், வாயேதான்கொவ்வையடமணத்தக்காளி வகையானவகைக்குகழஞ்சுதூக்கே. ௫௱௬

() வெண்காவேளைவெள்ளைகொள்காய்வேளை.

() முட்டைநாறி எறிமுட்டைபீநாறி.

() கொழுஞ்சி கொஞ்சி தாய்வேளை.

தூக்கப்பாவசம்புடனேவோமஞ்சுக்கு துன்பமில்லாசதகுப்பை திரிகடுகுங்கூட, வாக்கப்பாதேசாவரமரத்தைகோட்டமவனமானசா திக்காய்வெள்ளைப்பூண்டு, ஆக்கப்பாதுருசுசீரகமுங்காயம் அடர்கோ ரோசனைகருஞ்சீரகமுமப்பா, தக்கப்பாவகைவகைக்குகழஞ்சிபொன் றுதான்தூக்கிகல்வத்திலரைத்திடாயே. ௩௱எ

அரையப்பா அப்பச்சார்நாய்வேளைச்சார் அடவான அகத்திச்சா றிண்டம்பாலும், துரையப்பாசாமமதுமயனம்போலேதுருசாகரஞ்டு பங்குஆக்கியப்பா, விரையப்பா துவரைப்போலு ருட்டிப்போடுவிதமா கநிழலுலர்த்தியெடுத்துக்கொண்டு, நேரப்பாகுழந்தைகள்தன் பிணுக ட்கெல்லாம் நிச்சயமாய்தான்கொடுக்கத்திரும்பாரே. ௩௱அ

பாரப்பாவகைவகைக்கு கழஞ்சிதூக்கிப்பாங்காக முன்மருந்தை யிதிலேசேர்த்து, பாரப்பா அகத்திசார்நிலவகைச்சார் வளமாகவிட் டரைப்பாய்சாமமூன்று, வீரப்பாவகைபோலுருட்டிச்சேர்த்து வித மாகநிழலுலர்த்தியெடுத்துக்கொண்டு, நேரப்பாகுழந்தைகள் தம்பி ணுகட்கெல்லாம் நிச்சயமாய்தான்கொடுக்கத்திரும்பாரே. ௩௱சூ

பாரேதான் அப்பைசார்நாய்வேளைச்சார் பண்பானதுளசிச்சார் சிதும்பைசார், வீரேதான்பெருமுட்டை லாறிச்சாறு விதமானகாட் டுமொச்சை யிலைச்சாரப்பா, கூரேதான்வயிறுகட்டிபிணிநோய்க்கண் டால்கொடுப்பாயேநேர்வாளமுஞ்சேர்த்தப்பா, தேரேதான்வயிரெடு த்துபிணிநோயுண்டால் செலுத்திடுவாகுளிகைச்சா றெதிலுந்திருந் தானே. ௩௱ய

திருமேமாந்தத்தின்வகைகள் யாவுந்திறமானதோஷமொடுவலி ப்புகாய்ச்சல், ஆறுமேஅக்கினிபின்மாந்தமப்பா அப்பில்லாஅனேக விதநோயும்போகும், கூறுமேசிசுவருத்தந்தீர்ந்தோர்க்கெல்லாங்குற் றமொன்றுவருகாதுவறுமைநீங்கும், வீறுமேபோகருடகடாட்சந்தா னேவிதமாகப்புலிப்பாணிபாடினேனே. ௩௱கக

## தாளகபற்பம்.

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு பாங்கானஅரிஅரிதக க்கட்டியப்பா, கூடிநீகடுக்காய்த்தோல்நீராலாட்டிக்குணமாகமேல்கா சம்வலுக்கச்செய்து, நாடினேன்குகையிலிட்டுசில்லுப்போட்டுநலமா மண்சீலைவலுக்கச்செய்து, ஆடினேன்ரண்டெருவில்புடத்தைப்போர அடவாகபற்பத்தைவெடுத்துக்கொள்ளே. ௩௱கஉ

ஆமப்பாபொடிப்பண்ணி வைத்துக் கொண்டுகுணமாகதேனதி லேவிருகன்சால்தான், அள்ளிநீகொடுத்தவுடன்சுரங்கள்யாவும் அப் பனேஅகன்றோடிப்போகும்பாரு, தள்ளவேநீபிருமலொடு பாண்டு சோகை தயவில்லாமெலிக்கடியுந்திரும்பாரு, கள்ளேநீபித்தமொடும யக்கந்திருங் கனமானபோகருடகடாட்சந்தானே. ௩௧௩

தானப்பாபுகையோடு புளியுந்தள்ளுதயவானயேழுநாள் நீரை வாரு, வானப்பாநீவிவேர்கியா மூங்கேளுவளமாகமற்றுகாளெல்லாங்கூ ட்டுகோனப்பாருடிலங்களொன்றுமில்லை குணமாகுஞ்சயமுதல்சுரங் கள்போகும், தேனப்பாபோகருடகடாட்சத்தாலே தெளிவாகப்புலி ப்பாணிசொன்னேன்பாரே. ௩௧௪

## குன்மவாந்தியேப்பம்-வாய்நீருக்கு-லேகியம்.

பாரேநீயேலமொடுநெல்லிவற்றல் பாங்காகப்பசுபயறு மிளகுகூ டசேரேநீநெற்பொரியும்வில்வவேரும்சிறப்பாகவகைக்குவகைசொல் லக்கேளு, நிரேநீரண்டரைதான்பலமதாக நிறமாகத்தூளாக்கிவைத் துக்கொண்டு, கூரேநீரண்டுபங்குகுணமாய்செய்து கொற்றவனேயிள நீரும்நேரம்ரெண்டே. ௩௧௫

இரண்டான இளநீரின்கலத்திலப்பா அனுவளவுபிசகாமல்மை போலாட்டி, கொண்டானபாண்டத்திலெட்டொன்றுக்கி கொடுப்பா யேபிராறுவேளைதன்னில், கண்டானகுன்மவகைவாந்தியேப்பங்கனி வில்லாவாய்நீரும்பொருமம்திரும்,பண்டான அன்னமதுசெரிக்கும்பா ருபாங்கானவசிரசியமும்வலுப்பும்போமே. ௩௧௬

போமப்பாபத்தியந்தான்சொல்லக்கேளு பொங்கமுடனுப்பிட் டபருப்புமாகும், ஆமப்பாபசுவின்மோர்வெண்னீராகும் ஆடவானதூ துவளைபொன்னாங்காணி, காமப்பாகொடிவிளங்காய்நெல்லிக்காயுந்தய வானபசுவினெய்தேனுமாகும், வாமப்பாஏழுநாள் சலத்தைவாருவள மாகவெட்டாநாள்புளியைச்சேரே. ௩௧௭

## வயிற்றிரைச்சல்பேதிக்கு.

சேரேநீயின்னமொன்று சொல்லக்கேளுசெயலானமிளகுபலமி ரண்டுவாங்கி, நேரேநீவேலியுடபருத்திச்சாறு நிறையவிட்டுவூரவை த்துவுலரப்போட்டு, கூரேநீவறுத்துநகப்பொடியாய்ச்செய்து கொற் றவனேவெருகடியாய்த்தேனிற்கொள்ள, வீரேநீவயிற்றிரைச்சல்பே திநிற்கும்விதமானபொருமலுடவாயுபோமே. ௩௧௮

### வயிற்றிரைச்சல் இரத்தக் கடுப்புக்கு.

போமேநீயின்னமொன்று சொல்லக்கேளு பெலிவாகநீர்ப்பூண்டு பலந்தான்ரண்டு, ஆவேநீபெழுந்தாணியிலையைத்தானும் அடவாகரண்டுபலமெடுத்துக்கொண்டு, காமேநீநெய்தனிலேவதக்கிமைந்தா தயவாகஏலமதுவிராகனொன்று, வாரேநீசீனிபலமொன்றுங்கூட்டி வகையாகத்தானரைத்துஎடுத்துக்கொள்ளே. ௧௧௯

கொள்ளப்பாமுள்ளிக்காய் வீதமாக கொற்றவனே மூன்றுநாளாறுவேளை, தெள்ளப்பாவயிற்றிறைச்சல் கடுப்பிரத்தந் தெளிவில்லாமூலத்திருநிந்திருக், தள்ளப்பாபத்தியந்தானிதற்கோயில்லை ஐயனே தயிர்பாலும்நெய்யுங்கூட்டு, விள்ளப்பாபோகருடகடாட்சத்தாலேவிதமாகப்புலிப்பாணிபாடினேனே. ௧௨௰

### முளைமூலத்துக்குகட்டு.

பாடினேனின்ன மொன்றுசொல்லக்கேளு பண்பாணகோவையுடஇலையைக்கட்டி, நாடினேன்கம்பஞ்சோறுக்கிப்பின்னைநலமாகத்தானுருட்டி நீரைவாறு, கூடுகிறேநெட்டுநாள் கடந்தசோறு கொற்றவனேமுன்னிலையுமெடையாய்ச்செய்து, ஆடுமேநாலுநாள் கட்டும்போது அடிபோடேமுளைமூலமகன்றுபோமே. ௧௨௧

### இருமபாணத்துக்குகுளிகை.

போமேநீயின்னமொன்றுசொல்லக்கேளு பொலிவானவெள்ளையுடன்தாளிக்கல்லு, ஆமேநீசரிபெடையாய்நிறுத்துக்கொண்டு அப்பனேவெற்றிலையின் சாற்றாலாட்டி, தாமேநீநாழிகை யேழரையுமாகுல்தயவாகமிளகதுபோலுண்டைசெய்துவாமேநீசுக்குடையகியாழந்தன்னில் வளவாகமூன்றுநாள்கொடுத்திடாயே. ௧௨௨

* வெள்ளை-வெள்ளைப்பாஷாணம்.

கொடுத்தவுடன் சுரங்களெல்லாமோடிப்போகும் கொற்றவனேஏழுநாள்நீரைவாரு, அடுத்துடன்சிறுகீரைமிளகுநீவி அப்பனேவியாழம்வைத்துக்கொடுப்பாநீயும், கொடுத்தவுடனேழுநாள்பளியைக்கூட்டுகழிவில்லாசுரவையதுகாணுதப்பா, கொடுத்தவுடன் சுரக்குளிகைராமபாணந்துளபமணிமார்பருடசரமுமாமே. ௧௨௩

* சுரவைவீக்கம்.

### கெந்தகரசாயனம்.

ஆமேதான்கெந்தகத்தின் ரசாயனந்தன்னை அடவாகச்சொல்லுகிறே னன்றுய்க்கேளு, தாமேதான்திரிகடுகு கிரும்புயேலந் தனிலவங்கப்பட்டை யுடன்லவுங்கப்பத்திரி, வாமேதான் சாதிக்காய் தா

ளிசபத்திரி வளமானசிறுநாகப்பூவினோடு, போமேதான்விலாமிச்சன் வேரும்வாமம் பெருஞ்சீரகமுங்கோரோசாணியாமே. ௯௨௪

ஆமடாசிற்றரத்தைசித்திரமூலம் அடவானதிப்பிலிதன் மூலத்தோடு, நாமேபூலாக்கிழங்குயானைத்திப்பிலி நலமானகருஞ்சீரகங்கைகீரும் தாமேசீமுந்திரிக்கைசந்தனக்கோலந் தயவானஅதிமதுரம் முத்தங்காசும், வாமடாசடாமாஞ்சில்கொத்தமல்லி வளமானபேரீச்சம்பழமுமாமே. ௯௨௫

ஆமேசீதிரிபாலைசாதிபத்திரி அடவானவெட்டிவேர்குங்குமப்பூ தாமேசீநிலப்பனைவே ரசுவகெந்தி தயவானநெரிஞ்சிமுள்ளி நீர்முள்ளிவித்து, வாமேசீபூனையென்றகாலிவித்து வளமாக வகைவகைக்கு விராகனுவு, போமேசீநிறுத்தெடுத்துப் பொடியாய்செய்து பொங்கமுடன்சுத்திகெந்திபலமும்காலே. ௯௨௬

நாலானபரங்கிப்பட்டைபாவில்சுத்தி நாயகனேதானுபல மிருபதாகப், பாலானசர்க்கரைதானப்பாகேளு பாங்காகப்பலமதுதானிருபதாக, கோலானசீனிசர்க்கரைதானப்பா கொற்றவனேபலமதுதான் பத்ததாகும் மேலாநீர்மிட்டான்கிழங்குஞ்சாறு விதமாகப்படிசாறு பாண்டத்திட்டு, மேலானபசுவின்நெய்படிதானொன்று சிவப்பானநண்படிதானொன்றுய்க்கூட்டே. ௯௨௭

() கூட்டப்பாபாகதுபோல்பதத்தைப்பார்த்து கொற்றவனேஇறக்கிவைத்துப்பொடியைப்போட்டு ஆட்டப்பாகளறியதை யெடுத்துக்கொண்டு அப்பனேகுயக்கலசந் தன்னில்வைத்து, நாட்டப்பாநெற்புடமும்பத்துநாள்தான் நலமாகத்தான்வைத்து எடுத்துக்கொண்டு, ஊட்டப்பாகழற்சிக்காய்வீதங்கொள்ளு உத்தமனேதிருநோய்விபரங்கேளே. ௯௨௮

## திரும்வியாதிகள்.

கேளேசீவாதமதுஎண்பத்துக்குங் கொடியானபித்தமது நாற்பத்துக்கும், சூளேநீசுச்சினங்களாறுக்குந்தான் சுகமில்லாக்கெந்தபதினெட்டுச்சூலை, நாளேசீகுன்மமொடு பாண்டு சோகை நயமில்லாசயரோகம்மேகமெல்லாம், வாளேசீஅக்கினியின்மந்தந்தீரும் வளமான பரிதிகண்ட இருள்போல்போமே. ௯௨௯

போமடாபத்துநாள் கொண்டபின்பு பொலிவான பத்தியந்தான்சொல்லக்கேளு, ஆமடாபசும்பயறு துவரையாகும் அப்பனேதூதுவளைமணத்தக்காளி, தாமடாகத்திரிக்காய் முருங்கைப்பிஞ்சு தயவானகொத்தமல்லிக்கீரையாகும், வாமடாபுளியுப்பு பசுவின்நெய்யும் வளமானமோர்தயிரும்பாலுமாமே. ௯௩௰

வலிகளுக்குசாதிலிங்கக்கட்டு.

ஆமேதானின்னமொன்றுசொல்லக்கேளு அடவாக ()அஞ்சண் டம்வெண்கருவைவாங்கிப், போமேசீவீரமது (பச்சைப்பூரம்பொலி வானவெடியுப்புகண்ணத்தோடு, வாமேசீவகைவகைக்கு விராகனொ ன்று வளமாகப்பொடிபண்ணி வெண்கருவில்போட்டு, ஓமேசீமஞ்ச ளூடகருவைப்போக்கி உத்தமனேவெண்கருவையடைத்துவைய.

()அஞ்சண்டம்-அஞ்சுகோழிமுட்டை.

()பச்சைபூரம் பச்சைக்கற்பூரம்.

வையப்பாஆறுநாள்கடந்தபின்பு வகையாகலிங்கமது விராகன் பத்து, கையப்பாவெண்கருவில்தோய்த்து கனிவாகரவிதனிலே கண க்காய்பத்து, வையப்பா()கருமத்தின்தழைமேல்சுற்றிப் பாருமணற் புடந்தான்முப்பத்திரண்டு, செய்யப்பாயிந்தவிதந் தோய்த்துச்சுற்றி செயலாகவொன்றொருமுப்பத்திரண்டே. ருருஉ

() கருமத்தின்தழை-கருப்புஊமத்தின்தழை.

இரண்டானபுடந்தனுக்கு ()உபரியென்று ரோகிப்பாய்புடம்ப த்துஎற்றுக்கொள்ளு, கண்டானலிங்கமதுஉருகிக்கட்டுங் கனிவாகத் தானதையேஎடுத்துக்கொண்டு, பண்டான இஞ்சிரசந் தன்னிற்கொ ள்ள பணிவிடைதான்கணக்காக வுரைத்துப்போடு, தெண்டானமூ ன்றுளாறுவேளை இண்ணமாய்த்தான்கொடுக்கத்திரும்பாரே. ருருரு

() உபரிமேல்-திண்ணம்பலம்.

திரும்வியாதிகள்.

பாரேசீமுசலகண்டன்குமரகண்டன் பரிவானமுசல்வலியன்கு திரைக்குட்டி, சேரேசீகாக்கைவலிபிறவிச்சோடு இசப்பானஉள்வீச் சுசன்னிதோஷம், கூரேசீவாலேயென்ற ()சிறுக்கையோடு குணமான நெஞ்சுமுதல்வாயுவுக்குத்து, விரேசீஇவைகளெல்லாந் திரும்பாரு விதமானஇருள்கண்டசுடர்போல்போமே. ருருச

() சிறுக்கை பயித்தியம்

பரங்கிப்பட்டை ரசாயனம்

போமப்பா இன்னமொன்றுசொல்லக்கேளுபொலிவானசங்கம் பூவர்சங்கங்குப்பி, யாமப்பாகொடிவேலிவேரினோடு அடவானநிலப்ப னைவேரசுவகெந்தி, தாமப்பாஇருகுமிழிநெருஞ்சில்வேரு தயவானபூ வரசம்பட்டையாகும், வாமப்பாசெஞ்சத்தாரிபட்டையோடேவகை வகைக்குத்தூள்செய்திபலந்தானொன்றே. ருருரு

()இருகுமிழி குமிழியம் நீர்க்குமிழம்.

ஒன்றானதிரிகடுகு வோமம்கோஷ்டம் உத்தமமேகேசரமுமரத்தையிஞ்சி, நன்றாகசிறுலவங்கப்பட்டையோடு நாயகனேவலங்கமென்றபத்திரிகூட, பன்றானவகைவகைக்கு அரைப்பலந்தான் பாங்கானபரங்கிபட்டைபலந்தானைந்து, நன்றானசர்க்கரைதான் பலமேபத்து கனிவானநெய்தேனும்நாழிவாரே. ௩௩௬

வார்த்தேநீபிசைந்தநன்றாய்க்கலசந்தன்னில் வளமாகதானடைத்துவைத்துக்கொண்டு, பார்த்தேநீநல்லநாள் தன்னிற்கொள்ளமுள்ளிக்காய்விதமாகச், சேர்த்தே நீயந்திசந்திநாற்பதுநாளப்பா செயலாகக்கொண்டிடவேதீரும்நோய்கேள், கார்த்தேநீபத்தியமோ மிளகுகடுகுமாகா கனிவானவாழைபிலைகரப்பன்தள்ளே. ௩௩௭

தள்ளையிலேவேகமெல்லாம் பலக்கும்பாரு தயவில்லாசூலையோடுவிரணரோகம், அள்ளையிலேகிரந்திவகைவாயின்ரோகம் அடவானகுஷ்டமொடுபிரமியங்கள், தெள்ளையிலே குன்மமொடுவாயுமூர்ச்சைதெளிவில்லாவாய் நாற்றமக்கினிமந்தம், விள்ளையிலே பரங்கிப்பட்டைரசாயணந்தான் விண்ணவர்கள்மருந்துண்ணக்கொள்ளலாகும்.

சீரகச்சூரணம்.

கொள்ளவேயின்னமொன்றுசொல்லக்கேளுகுணமான சீரகமேபலந்தானைந்து, தெள்ளவேவாங்கிவந்துபீங்கா தன்னில் தெளிவாகத்தான்போட்டுபழச்சார்வாரு, அள்ளவேமிதக்கவிட்டு ஊறவைத்து அடவாகநிழல்தனிலேபுலரப்போட்டு, விள்ளவேதாமெடுத்து இந்தபாகம் விதமாகத்தான்போட்டுவிபாம்பாரே. ௩௩௯

பாவேநீகரப்பஞ்சார் முருமுருக்கை பாங்காக நெல்லிக்காய்ச்சாருங்கூட, சேரேநீதூதுவளைச்சாற்றினோடுசெயலாகவேம்பின்பட்டைச்சாருமாகும், திரேநீதும்பையிலைச்சாரும்விட்டு திறமாகவெவ்வேறுயுலரப்போட்டு, சீரேநீதூளிடித்து வடிதான்கட்டி சீனியது கால்பங்குகலந்துகொள்ளே. ௩௪௰

கொள்ளப்பா அந்திசந்தி நாற்பதுநாள்கொள்ள குணமாகவெருகடித்தான்விதம்பாரு, தெள்ளப்பாபித்தமெல்லாமகன்றுபோகும்தெளிவில்லாகிறுகிறுப்புவாந்திதீரும், உள்ளப்பாஅக்கினியா மந்தந்திரும் ஊஷ்ணமாங்காங்கை யெல்லாமகனும்பாரு, விள்ளப்பாபோகருடகடாட்சத்தாலேவிதமாகப்புலிப்பாணிபாடினேனே. ௩௪௧

அரிதாரபற்பம்.

பாடினேனரிதாரப்பற்பந்தன்னைப் பண்பாகச் சொல்லுகிறேன் பணிந்துகேளு, நாடினேனரிதாரக்கட்டிதன்னை நலமானகற்சுண்ண

ந்தன்னில்சீற்றி, தேடினேன்மேனியிலேகல்லுச்சுண்ணம்சேர்த்தரை ப்பாய்சமன்கொண்டுமைபோலாட்டி, சூடினேன் சட்டியின்மேல்கவ சங்கட்டி சுகமாகமண்சிலைவனுக்கச்செய்யே. ௩௪௨

செய்யப்பா * குக்குடத்தில்சீரிப்போகுஞ்செயமானபற்பத்தை எடுத்துக்கொண்டு, வையப்பாசயங்கள விஷபாகம்ரெண்டு வளமான சுரங்களோடுபித்தசோகம், கையப்பானவிக்கடியும் பயித்தியந்திருங் கருதானபற்பமிது அறிந்துகொள்ளு, மீயப்பாபோகருட கடாட்சத் தாலே நிச்சயமாய்வைத்தியத்தைச்செய்துபாரே. ௩௪௩

* குக்குடம்-கோழியளவு புடம்

சகலரோகத்துக்குஞ்சூட்சகுளிகை.

பாரடாரசமுங் * திரிபாலைகெந்திபண்பாணயிளகு னேகடுகுஞ் சேர்த்து, நேரடாபொடியாக்கிபனையின்வெல்லம் நேர்சேத்துச்சுண் டக்காய்போலேயுண்டை, வீரடாஒருவுண்டைவுதயந்தன்னில் விழு ங்கிவிட்டுகடிகைநேரஞ்சென்று, சீரடா ஆவின்பால் படியுங்கால் தா ன் சிரப்பாகத்தானடிப்பாய் திண்ணந்தானே. ௩௪௪

* திரிபலைகடுக்காய்தான்றிக்காய்நெல்லிக்காய்.

தானேதானிந்தவிதம் சற்பத்தெட்டு தயவா நாட்கொள்ளத்தி ரும்கோய்கள், மானேதான் குஷ்டமொடுகுன்மஞ்சூலை மைந்தனே பெருவயிறும்பிரமைபித்தம், கோனேதான்குலைநோவு சொரிகள்மா றுங் கொடிதானபத்தியந்தானில்லைபாரு, கானேதான் போகருட க டாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே. ௩௪௫

பித்தபயித்தியத்துக்கு பற்பம்.

பாடினேன் நாய்மண்டைமாட்டுமண்டை பாங்கானமனுஷருட மண்டையோடு, நாடியேசரியெடையாய்க்கல்வத்திட்டு நலமானகழு தைப்பால்தன்னாலாட்டி, ஆடியேமைபோலவழித்தெடுத்து அடவா கபில்லைதட்டியுலரப்போட்டு, தேடியேகுக்குடத்திற் புடத்தைப்போ டு தெளிவாகப்பற்பமது தவளமாச்சே. ௩௪௬

ஆச்சப்பாகழுதைப்பால் துட்டெடைதான்ரெண்டு அடவான இஞ்சிச்சார்துட்டெடைதான்விட்டு, வாச்சப்பாசர்க்கரை துட்டெ டைதான்போட்டு வளமானபற்பமது கழிச்சிற்கூட்டு, யேச்சப்பா கொடுத்துவிடுசுருவேளை பெழுந்தபித்தபயித்தியமும் பிரமையேவல் போச்சப்பாதேவதைகளுக்கோவிடு புதையில்லிவைப்புமுதல்திருந் தானே. ௩௪௭

8362

### பில்லிபயித்தியத்துக்கு.

தாமென்ற கழுதையுடஇடபாகத்தில்தான் வளர்ந்தசடையு டனேபாம்புச்சட்டை, மாமென்றவேப்பெண்ணை செஞ்சீலைநறுக மைந்தனேசுடரென்றதயிலம்வாங்கி, கோமென்றவுள்ளுக்குக்கரண் டிவீதங்கொடுத்திடுவாய்மூன்றுநாளாறுவேளை, தேமென்றமேலுக் குப்பூசுபூசுதெளிவாகும்பில்லிபயித்தியந்தானுளாமே. ௩௪௮

### சகலரோகத்துக்குச் சித்திரமூலஎண்ணெய்.

ஆராதருட்டுக்கு எண்ணெய்சொல்வேன் அளவாகஎள்ளெண் ணையாவினெய்யும், கூராதவகைவகைக்குப்படி தான்பாதி கொடிதா ணசித்தருடமூலப்பட்டை, நேராகப்பலமொன்று நீர்விட்டாட்டிநே ராகஎண்ணையிலேகலக்கிப்போட்டு, மீறுதமெழுகுபதந்தனி லிறக்கி மிஞ்சாமல்துட்டெடைதான்கொண்டுபாரே. ௩௪௯

### மூலிப்பட்டைசித்திரமூலப்பட்டை.

பாரேநீ காற்பதுநாள்கொண்டபோது பாங்கானகுட்டெங்கேமே கமெங்கே, வீரேநீவிப்புருதிகண்டமாலை விதமானபுண்புறைகள்சிர ங்குந்திருந், தீரேநீவாயுவோடுசூலைக்குந்து திரமானசெங்கிரந்தித்த டிப்புமாறுஞ், சேரேநீபத்தியந்தானிதற்கோயில்லைசெயலானபோக ருடகடாட்சந்தானே. ௩௫௰

### ஆக்கிராணம்.

தானுனயாக்கிரானஞ்சொல்வேன் கேளுதயவானகண்டவேர்சி த்திரமூலம், வானுனஅஞ்சுதேர்கண்டங்கத்திரிபளமான தூதுவளை முளகரணைவேளை, மானுனயாடுதொடைகுப்பை மேனிவளமானவெ ள்ளைச் சாரணையும்வேலி, பானுனவகைக்குவகைவிராகனென்று ப ண்பானஎருக்கிலையுஞ்சுணையின்பாரே. ௩௫௧

பாரேநீமூத்திரப் பழமுஞ்சுக்கு பாங்கானஅக்கிராகாரம் ஓமஞ் சேரேநீயதிவிடையம்()அரத்தைகாயஞ் செயலானதிப்பி லியுந்திப்பி லிமூலம், வீரேநீதேசாவரகஸ்தூரிமஞ்சள் வீறுனவால்மிளகு கட ல்நுரையுங்கடுகு, தீரேநீகுராசானியோமம்()ரோகணி திறமானகரு ஞ்சீரகம்பேராத்தைதானே. ௩௫௨

* அரத்தை-சிற்றரத்தை.

* ரோகணி-கடுகுரோகணி.

காணேநீவம்புவேப் பரிசியோடு கனிவானசாம்பிராணி வகைவ கைக்கு, தானேநீவிராகனிடைநிறுத்துக்கொண்டு தயவாகச்சரக்கெ ல்லாமொன்றாய்க்கூட்டி, பாணேநீயத்தியின் பால்வெள்ளாட்டுநீரும் பாங்காகபிசறிவைத்துலர்த்திக்கொண்டு, மானேநீபொடித்துபேய்ச் சுரைக்குடுக்கை மைந்தனேநூளடைத்துவைத்துக்கொள்ளே. ௩௫௩

கொள்ளவேபணவிடைதா னசிக்கேற்றகொற்றவனே சன்னிய துவிலதும்பாரு, அள்ளவேகாகிதந்தில்வைத்துச்சுற்றி அடவாகநிம் பளண்ணெய்தன்னில்வைத்து, மெள்ளவேபொருந்தியதை யாற்றிப் போட்டு மேன்மையாபுகையதனைநாசிக்கேற்று, தள்ளவேசிரசிலுள் ளவியாதிதிருந் தலைவலியுமொருதலையுமிடிப்புபோமே ௨௫௪

போமேனிநீர்பாய்ச்சல்சயமும்பித்தம் பொல்லாதகபாலத்தின் சூலைவாயு, ஆமேநீபீனிசமுஞ்சலதோஷம் அடைவானமண்டைகுத் துகெர்ப்பநோயும், தாமேநீசிரசிலுள்ள வியாதியெல்லாந் தாக்கடா இப்புகையைச்சண்ணுஞ்சண்ணும், வாமேநீயின்னமொரு சூட்சஞ் சொல்வேன் மாறுதரணங்களுக்குவழுத்துரேனே. ௨௫௫

இரணங்களுக்குப்புகை.

வழுத்துகிறேன்கண்டத்தின்மேலேயுள்ள வாய்முதல்கண்செவி யிநோயுந்திரும், பழுத்துகிறேன்பற்கிட்டுசன்னிதோஷம் பாங்கான மூணிக்குபொதிவானுலுங், கொழுத்துகிறேன்பணவிடை ஆக்கிராண த்தோட குணமானநவாச்சாரநேரேசேர்த்து, சுழித்துகிறேன்கற் சுண்ணங்கொஞ்சங்கூட்டி சுருக்காகமத்தித்து நாசிக்கேற்றே. ௨௫௬

ஏற்றேநீஆக்கிராணங்கழஞ்சியொன்று இதமான அரிதாரம்லி ங்கம்திரம், பார்த்தேநீகொடிக்கள்ளிபட்டைதூளும் பாங்கான கழு தைதலத்திப்பொடியுமப்பா, போற்றேநீவகைவகைக்கு கழஞ்சிஒன்று பொங்கமுடன்திருகுகள்ளிப்பாலாலாட்டி, சேர்த்தேநீயுலரவைத்து எடுத்துக்கொண்டு செயமானபங்குபுள்ளிதன்னிற்கேளே. ௨௫௭

கேளேநான்தணலிலேபொடியேபோட்டு கெடியான புண்களி லேபுகைதான்சார, சூளேதான்வெடிசூலைமேகவெட்டை சுடுக்கிரந் தியரையாப்புபௌத்திரங்கள், கோளேதான்இப்புகையில்தீரும்பாரு கொற்றவனேபொடியெடுத்து அலறிப்பாலில், நாளேதான்மத்தித்து ரணத்தில்போட நாயகனேஇரணங்களெல்லாந்திருந்தானே. ௨௫௮

சூட்டுக்குமுழுகதாமரைதயிலம்.

தானானஎள்ளெண்ணெய்படிதானொன்று தகைமைகுளிர்ந் தா மரைச்சார்படிதானொன்று, பானானபதந்தனிலேகாய்ச்சியப்பா பக் குவமாய்கீழிறக்கித்தானேவைத்து, மானானபூலாக்கிழங்கு பச்சிலையு மப்பா வகைவகைக்குவிராகனிடைநிறுத்துக்கொண்டு, தேனாகப்பொ டிப்பண்ணிதூவிப்போடு தெளிவாகவடித்திருத்து முழுகுவாயே. ()

முழுகையிலே சூடெல்லாந்தணிந்து போகுமுன்னிலே பாகண் ணெரிவுகுளிர்ச்சியாகும், பழுகாது திரேகமது பொன்போல்மின்னும் பண்பானநீர்க்கடுப்புவினையுந்தீரும், அழகாதுவிந்துக்கேதிருக்கும்பா ருஅடவாகமூலத்திற்சூடும்போகும், நழுகாதுசூலையுடகருணைவாங்கு நலமானபோகருடகடாட்சத்தாலே. ௩௬௰

## வைத்தியமுப்பு.

தானானவைத்தியமுப்பூமார்க்கம்தயவாகச்சொல்லுகிறேன்தரு மமாக, கோனானபங்குனிசித்திரையில்பூநீர்க்கொற்றவனே மண்டப டாருதடித்துவந்த, மானானநாலுபடிபாணத்திட்டு மைந்தனேகடலு ப்புபடி தான்ரெண்டு, வானானகற்சுண்ணம்படி தான்ரெண்டுவளமான அமுரிபுதுபடி தானெட்டே. ௩௬௧

எட்டதுதான்வார்த்தபின்பு எள்ளெண்ணயப்பா இதமாகபடிய ரைதான ளந்துவாரு, தொட்டதுதான்கலக்கியதை தெளிவிறுத்து தோணவேவுப்பாகுமட்டுங்காய்ச்சி, விட்ட துதான்குழப்பதுபோலா கும்பாரு பாங்கானஎருச்சாம்பல் சொல்லக்கேளே. ௩௬௨

கேளேதாஎருச்சாம்பல்பரப்பிமைந்தா கெணிதமுடன் சல்லா வைவிரித்துப்போட்டு, நானேதா இதில்வாருஇருக்கும்போதுநலமாக உண்டையாயுருட்டிப்போடே சூளேதான்ரவியில்வைத்து எடுத்துக் கொண்டு சுகமாகநெற்பிசரிஒருபாண்டத்தில், வாளேதாவரைப்பா ண்டமதனில்விட்டு வளமாகஅதின்மேல்மல்லிகையினிலையே. ௩௬௩

மல்லிகையினிலைபரப்பினிந்த வண்ணமைமைந்தனேமேல்வைத்து இலையால்மூடி, அல்லியேயதின்மேலே நெல்லிட்டப்பா அடவாகக்க ட்டிக்கொண்டுமூடிநெரிய, வல்லியேநெல்லுவந்த பின்னெடுத்துவை த்துவளமாகப்பிஞூரிரச்சியோக்க, கல்லிலேதுவாரமிட்டுச் சொல்லக் கேளுகருத்தாத()நிரபச்சைபூரந்தானே. ௩௬௪

()பச்சைபூரம் பச்சைகற்பூரம்.

தானானபூரமுடன்பூரமப்பா தயவாகவகைக்குவகைவிராகன்மூ ன்று, கோனானஇவைநாலும்பொடியாய்ச் செய்துகொற்றவனேசிப்பி யதுவாரந்தன்னில், மானானசிப்பிதொரு கொஞ்சம்போடுமைந்தனே சட்டியின்மேல்பரப்பிவைத்து, பானானசெயநீரும்இறங்கும்பாருபா ங்காகஇதையெடுத்து பதனம்பண்ணே. ௩௬௫

பண்ணப்பாகாதவிந்நாரண்டு காணும்பண்பான இளநீரும்சமனு ய்ச்சேர்ந்து, நண்ணப்பாவெண்காரமுஞ்சூதம் நலமாககருநாதபச் சைபூரம், உண்ணப்பா ஆறுபுள்ளிதண்டின்முட்டை உத்தமனேசின முடன்சாரமப்பா, வண்ணப்பாவகைவகைக்கு பணவிடைதான்வீ தம்வகையாகப்பொடிபண்ணி இளநீரிற்போடே. ருசுசு

சாரம் நவாச்சாரம்.

போடேதான்தெளிவிருத்துஉண்டைபண்ணிபொங்கமுடன்இ ளநீரால்சாமமாட்டி, யாடேதான்வில்லைதட்டி ரவியில்போட்டு அட வாககாய்ந்தபின்பு சொல்லக்கேளு, நாடேதான்பேரண்டம் பொடி யதாக்கிநலமானவெட்டின் மேல்பரப்பிவைத்து, கூடேதான் அதன் மேலேவில்லைவைத்து குணமாக அதன்மேலேபொடியப்போடே.

போடப்பாமேல்மூலிச்சீலைசெய்துபுனிதமுடன்பத்தெருவிப்பு டத்தைப்போடு, சாடப்பா இம்முறையாயைந்துபோடுசகடறவேசுண் ணமாயிருக்கும்பாரு, பாறப்பாபேரஞ்சிறண்டத்தோடுபாங்கானசிற் பியுநண்டோடத்தைமாடப்பா இதையெல்லாம் வெவ்வேறாகமைந்த னேசிற்றண்டக்கருவலாட்டே. ருசுஅ

பேரண்டம்-தலைவோடு() சற்றண்டம்கோழிமுட்டை.

அட்டியேஉலரவைத்து உலையிலூத அப்பனே அஞ்சுதரஞ்சு ண்ணமாகும், காட்டியே அஞ்சுண்ணஞ்சமனாய்க்கூட்டி நலமாக மு ன்விட்டசெயநீர்விட்டு, கூட்டியேதானரைத்துக்கு கைபிடித்துக்கு ணமாகசில்லுசெய்துமுன்சுண்ணத்தை, வாட்டியேசெயநீரால் மை போலாட்டி வளமாகத்தான் றவியிலூறப்போடே. ருசுகூ

போடேநீஅஞ்சுண்ணகுகையில்வைத்துபோதகமாயஞ்சுண்ண ம்சில்லுப்போட்டு, யாடேநீசுண்ணும்புச்சீலைசெய்து அடவாகப்புட ம்போட்டு எடுத்துக்கொண்டு, யாடேநீஅஞ்சுதரமிந்தபாக நலமாக ப்புடம்போட்டு எடுத்துக்கொண்டு, மாடநீநாதாக்கள்சாபந்திர மை ந்தனேயாத்தாளை பூசைபண்ணே. ருஎய

பண்ணவேசுண்ணத்தா சுண்ணமாகும் பாங்கான செந்தூரம் மெழுகுமாகும், கண்ணவேகட்டினமுறுக்கினமுமாகும் நலமானசர க்கெல்லாம்பஸ்பமாகும், உண்ணவேலேகியங்கள் கிருதஎண்ணெய்உ த்தமனேயவிஸ்தமென வகைகட்கெல்லாம், எண்ணவே பணவிடை தான் கூட்டவேண்டுமில்லாவிட்டாலவிழ்ந்தமதுவீறில்லாதே. ருஎக

இல்லாதரோகங்கள்தான்கடத்திமேவும் ஏதென்றால் பஞ்சபாத கத்தால்காணும், பொல்லாதகர்மவினைதீரவேண்டி பூட்டுகிறேஞ்சாங்

தியொன்றுசொல்லக்கேளு, வல்லாவுஓடுநீர்கலசந்தன்னில் வளமாக
க்கொண்டுவந்துதர்ப்பைபோட்டு, சொல்லானகவசத்தை மேலேவை
த்து செயலான () அக்குமணிசேர்த்துக்கட்டே. ௲எ௨

() அக்குமணி பலகரைமணி.

கட்டப்பாமாவிலையை மேலேவைத்து கனமானமஞ்சளோதான
ரைத்துவப்பி, பட்டானமுக்கோணகலசத்துள்ளே பாங்காகதானிட்
டுசிகரம்நாட்டி, மட்டானநோயாளித்தன்னைத்தானு மன்னவனே மு
ன்னேவைப்பாய்மதியந்தன்னில், வட்டிப்பாதீபமொடுதீபங்கட்டிவள
மானவில்வமது நூற்றெட்டாமே. ௲எ௩

ஆமப்பாஓமென்று அர்ச்சனையுஞ்செய்து அடவாககலசநீர் சிர
சில்வார்த்து, தாமப்பாஒருசிரங்கை யுள்ளுக்கீந்து தயவாகவில்வமது
மூன்றுநாள்கொண்டால், ஓமப்பா அருக்கன் முதல்சனிநாள் மட்டு
மொடுக்கமாயிப்படியேசெய்தாயானால், போமப்பாஅருக்கன் முதல்
சனிநாள்மட்டு மொடுக்கமாயிப்படியேசெய்தாயானும், போமப்பாப
ஞ்சபாதங்களியாவும் பொல்லாதபிரமைபிணி யேவல்போமே. ௲எ௪

* அருக்கன்-ஞாயிற்றுக்கிழமை.

நோய்க்குபேதிக்கும்ஓமசாந்தி.

போமேதான்வோமத்தின்சாந்திகேளுபொங்கமுடனேந்துபடிய
ரிசிக்கொட்டி, ஆமேதான்பச்சரிசிமேலேகேளு அரிவானதிரிகோண
ம்வித்துப்போட்டு,தானே தான் றீங்காரமுன்னேபோட்டுதயவாகரும்
பமைந்தில்தனி நூல்சுற்றிவாமேதான்சலமதுதானிறைய விட்டுவள
மானசொர்ணமென்றுகூடப்போடே. ௲எரு

போடப்பா இருபத்தைந்தரையுமாறி பொங்கமுடன் மாவிலையு
ந்தேங்காய்வைத்து ஆடப்பாசந்தனத்தைக்கரைத்துசாந்தி () அட்ச
தையுஞ்சுகந்தபரிமளங்கள்பூசி, நாடப்பாபட்டு வஸ்திரங்கள் சாத்தி
நலமானபுட்பயர்ச்சனையேசெய்து, ஈடப்பாபழந்தேங்காய்த் தாம்பூ
லங்கள் இதமானபலகார மிளநீரில்பாலே. ௲எசு

() அட்சதை மஞ்சளரிசி.

பாலுடனேபாணக்கம்வஸ்துவோடு பரமானம்அவலுடனேசத்
தியண்டம், ஏவலுடனேபொரிகடலைச்சர்க்கரைமாவிளக்கு இதமான
வெண்ணைபொங்கல்பசும்பருப்பு, சேவலுடனேபித்தனையு மிலைதான்
போட்டு செப்பமுடன்பரிமாரிதூபம்போடு, மாலுடனேவோமகுண்
டஞ்சமித்தைகேளு மைந்தனேமாவிலிங்க விவர்த்தியாமே. ௲எஎ

() சுத்திமாங்கிஷபொரியல்()சமித்தை கள்ளிவிறகு.

ஆமேநீவில்வமொடு எட்டுமொச்சி அடவானமாவொடு ஓமம்நெய்யாய், தாமேநீ அக்கினிநமாவென்றேதான் தயவாகமித்துக்காயுரத்தெட்டோதி, போமேநீயெள்ளுழுந்து கடலைமொச்சைப்பொலிவான துவரைபசும்பாற்றிறேடு,காமேநீகாராமணியும்()அரிசிகோதுமை வளமாகவென்பதையும்ஓமம்பண்ணே. ௱எஅ

அரி-அரிசி.

பண்ணப்பாதேன்பாலுவண துசுத்திப்பாங்கானபழந்தேங்காய்பலகாரங்கள், கண்ணப்பா இளநீர்க்கரைபாணக்கம் நலமானதயிர்சோறுநெற்பொறியுங்கூட, வண்ணப்பா அக்கினிக்காகுதியேபண்ண வஞ்சனைமுறைப்பாடுந் தேவர்குற்றம், ஒண்ணப்பா அசுத்தசுத்தகணமும் பூதம் உத்தமனேபஞ்சபாதகமும்போமே. ௱எகூ

போமடாபில்லிவஞ்சனையும்ஏவல்பிரமையொடுவியாதி முதல்பிசாசுபேயும், ஆமடாமுனிகளுப்புலாடன்காட்டேரி அடவானபேய்ச்சிகந்துருவர்மூர்த்தி, தாமடாசாத்தனொடுஇருளனையன் தயவில்லாசப்பாணிஇருதலையின்கொள்ளி, ஓமடாஇன்னம்வெகுபிசாசாளுலும்ஓமத்தில்கண்டுவிடுங்கண்டுபாரே. ௱அய

கண்டு () கும்மைந்துதிபதூபங் கனிவாகத்தான்கொடுத்துசோடசமுஞ்செய்து, பண்டுமுன்னேநோயாளி தனக்குமப்பாபாங்காகக் கலசநீர் சிரசில்வார்த்துக், கொண்டுவல்லோ அவிழ்தங்கள்கொடுக்கச்செய்நீ குற்றமெலாந்தான்தீர்ந்து வியாதிபோகும், தொண்டசெய்வாரனைவோருஞ் சமர்த்தனென்று தொல்லுலகில்ச்செல்வமதாய்வாழ்வார்தானே. ௱அக

() கும்பம்-கலசம்.

கழிப்புச்செய்யும்விதம்,

தானென்றகழிப்புக்குச் சொல்லக்கேளுதயவாகபச்சைமாப்பாவைசெய்து, வானென்றபுதுமுறத்துக்குள்ளேவைத்து வளமாக ஆபரணந்தன்னைப்போட்டு, தானென்றமுப்பத்திரண்டுதீபங்குரையாமல் நவரத்தினஞ்சொர்னம்வெத்து, வானென்றவஸ்திரங்கள் பரிமளங்கள்சாத்தி மைந்தனேசுகந்தபுஷ்பம்வாடைதூவே. ௱அஉ

இரத்தசாமுண்டிசக்கரம்.

தூவடாரத்தசாமுண்டிசக்கரந் துலங்கவேபாவைமுன்னேஎண்கோணம்போட்டு, வாமடாதானெடுத்துரேகைபோட்டுமைந்தனேஎட்டையில்கரியேதூவுநாவடாகாயிரைலனுட்கோணத்தில்நலமானதி

ருச்சுரணந்தன்னைதூவ, வாமடாஉச்சரதும்மஞ்சள்தூவவளமானமுக்கோணம்பச்சையாமே. ௩௮௩

ஆமேதான்முக்கோணம் ஸ்ரீங்காரம்போட்டு அடவானநாலரையில்அம்ஒம்துமென்று, தாமேதான்நாலரையின் ஓங்காரம்கட்டிதலைசுழித்துசூலமிடுதயவதாக, வாமேதான்கருப்புவண்ண அடைகளெட்டுவளமாக அ ஆ இ ஈ எ ஏ என்ன, போமேதான்எட்டுமுனைசூலம்போடுபொங்கமுடன்முதல்சுகந்தஞ்சாத்தே. ௩௮௪

சாத்தப்பாஎட்டுமுனைச்சக்கரத்தில் மூன்றுசார்வானபழந்தேங்காய்தாம்பூலங்கள், மாத்தப்பாபலகாரவகையுமன்னன்வஸ்துசுத்திகடலைபொரியண்டத்தோடு, போத்தப்பாஇளநீர்தேன் பாணக்கம்பால்பொங்கமுடன்மஞ்சள்நீர்கரிதண்ணீரு, ஏத்தப்பாகடலைமொச்சைப்பயறுசுண்டல் இதமாகவெண்ணெயுஞ்சர்க்கரையும்வையே. ௩௮௫

வையப்பாபச்சை மாவிளக்கினோடு வளமாகஇத்தனையும் முன்னேவைத்து, கையப்பாபுதுபானைவாயை கட்டிகனிவான சுண்ணாம்பைமேலேபூசி, வையப்பாகரிபோட்டுமேலேகுத்திபாங்காகபுழுங்கரசிசோற்றைப்போட்டு, மையப்பாஉழுந்தென்றபருப்புங்கூடமைந்தனேகத்தரிக்காய் கருவாடாமே. ௩௮௬

ஆமேநீமுருங்கைக்காய்மொச்சைசாறு அடவானபுண்ணாக்குக்கீரையோடு, வாமேநீவஸ்துவுடன்சுத்திகூடவளமானபஞ்சவண்ணச்சோறும்வைத்து, காமேநீபழந்தேங்காய்தாம்பூலஞ்சுத்தி தயவாகஒட்டிவிட்டுபாவைமுன்னு, போமேநீயெட்டமாவிலிங்கம்ரண்டுபொங்கமுட()நிம்பஎண்ணெமுளகாயாமே. ௩௮௭

()நிம்பஎண்ணெ-வேப்பெண்ணெய்.

ஆமப்பாசொர்ணபுஷ்பவேர்க்குவைத்து அடவாகதிபமொடுதூபங்காட்டி, தாமப்பாசோடசோபாரஞ்செய்து தயவான நைவேத்தியமானபின்பு, வாமப்பாவையத்தான்தலையைச்சுற்றிவளமாகஒட்டையுந்தான்தலையைச்சுற்றி, போமப்பா காடுதன்னில் மயானந்தன்னில் பொங்கமுடன்முப்பலியுங்கொடுத்துவையே. ௩௮௮

வைத்தவுடன்பில்லிசூனியங்கள்யேவல்வலுவான பேய்பூதங்கறுப்புமாடன், இரத்தமுடன்முனிவீரன்இருங்காட்டேரிஇதமானமலுக்குடனேசின்னபீரும், பத்தவுடன்பிரமராட்சதையும் பேசும்பாங்கானசாத்தனொடுமொட்டான்பின்னும், கத்தவுடனிருதலையின்கொள்ளியோடுகருமுறையுந்தேவதைகளோடிப்போமே. ௩௮௯

சிதம்பரமெழுதிக்கட்ட.

போமேசிதம்பரத்தை யெழுதிக்கட்டப் போகுமடாநோய்பி ணியும்பஞ்சபாவம், ஆமேபிராமணற்குஅன்னம்போடு அபிசேகம் சங்கரர்க்குதீபம்யேற்று, தாமேமயேஸ்வரற்குபூசைசெய்நீ தயவு டனேநந்திக்குஜலத்தைவாரு, வாமேஆரசுடனேவேம்புசுற்றி வை ரவர்க்குவடமாலைச்சார்த்தனன்றே. ௩சுய

பில்லிவஞ்சனையு நோயுந்தீர்ப்பதற்கு கிரியை.

நன்றானபில்லிவஞ்சனையும்நோயும் நாயகனேதீர்ப்பதற்குசொ ல்லக்கேளு, குன்றுதமாவிலிங்கங்குப்பைமேனி குணமாகமுடக்கற் றான் இதுதான்மூன்று, பண்டானவகைவகைக்குப்பலம்பத்தாகபாண் டத்தில்தனைவிட்டுதூணிநீரில், துண்டாகவேகவைத்து விரல்பொறு க்கதும்பைமலர்மேலிடவே பிணிகள்போமே. ௩சுக

வேறுதண்ணீர்.

போமேபூவரசுஆவின்பட்டை பொங்கமுடன் கடப்பன்பட் டைமூன்றுமாக, ஆமேவகைவகைக்குப்பத்து அடவாகதூணிநீர் தண்ணீர்காச்சி தாமேமேலிடவேபிணிநோய்திருந் தயவானபில்லி வஞ்சனையுந்தீரும், போமேஅறுக்கம்புல்சம்புகோரை புகழ்பெற வேமுன்போலே பிணிகள்போமே. ௩சுஉ

ஏவல்தீர்க்க.

போமடாகண்டங்கத்திரியின்மூலம் பொங்கமுடன்காட்டுச்சிர கத்தின்மூலம், வாமடாபிரமராட்சதையின்மூலம் வகைவகைக்குப் பலம்நூறுநிறுத்துக்கொண்டு, தாமடாவெவ்வேறுபாண்டத்திட்டு த யவானதூணிநீர்தன்னைவார்த்து, நாமடாவெந்திறக்கிதினமொன்றாக நலமாகத்தான்வார்க்க ஏவல்போமே. ௩சு௩

இரத்தசாமுண்டிமந்திரம்.

போமப்பாரத்தசாமுண்டிமந்திரம் பொங்கமுடன்முன்னாக சொல்லவில்லை, ஆமப்பாஓம்ரீயும்ரத்தசாமுண்டி துருதுருமடிமடி சி த்திகுருளவாகாவென்று அடவாகசக்கரத்திலாயிரந்தானேறு நாமப் பாபில்லிவஞ்சனையும்நோயும் நலமானதேவரொடுகணங்கள்பூதம், வா மப்பாபஞ்சபாதங்கள்யாவும் வலுவானராட்சதையும்விலகுந்தானே,

ஆடாதபேய்ஆட.

தானென்றபேய்மிரட்சியிலையின்தூளுந்தலைப்பிள்ளைக்கொடிதூ ளுஞ்சமனுய்ச்சேர்த்து, பானென்றயிவையுடன்சாம்ருணிசேர்த்து

பாங்காகபுகைபோடபசாசுஆடும், கோனென்ற ஒவாவென்று வோத கொற்றவனே பூதமெல்லாமாடும்பாரு, தேனென்றபோகருடகடாட் சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. ௩கூரு

பில்லிவஞ்சனை போகதீபம்.

பாடினேன்மேனிடுவார்()முட்டைபோடு பாங்கானகழுதையுட தண்டுங்கூட்டி, நாடினேன்கரிச்சீலைதனில்சுருட்டி நற்கழுதைநெய் யாதல்வேப்பெண்ணெயாதல், கூடினேன்சிரசோடுகிளிஞ்சியாதல் குணமாகதீபவட்டு பார்க்கும்போது, ஒடினேனென்றுசொல்லிக் கணங்கள்யாவும் உத்தமனேபில்லிவஞ்சனையும்போமே. ௩கூசு

()முட்டைஎருமுட்டைபீநாரி.

பயித்தியத்திற்கு.

போமடாகோசலமும் பசுவின்பாலும் பொங்கமுடன் கரிப்பான்சார்முசுமுசுக்கை, தாமடாவகைவகைக்குபடிதானென்று தயவானஎள்ளெண்ணெபடிதானென்று, ஆமடாகடுகுபதந்தன்னிற்காய்ச்சி அடவாகமூழ்கிவரபிரமைபித்தம், சாமடாபயித்தியஞ்செய்வினையுந் திருஞ் சற்குருவாம்போகருடகடாட்சந்தானே. ௩கூஎ

சகலபேய்க்குங்குளிசம்.

தானப்பாபிரமைராட்சதையின்பூத தயவாகவள்ளியினாலகாப்பு கட்டி, வாளப்பாபஞ்சவர்ணநூலினாலே வளமாகத்தான்கட்டிசோகலத்தைவாரு, மாளப்பாஎட்டுநாளந்திசந்தி மைந்தனேவார்க்கையிலே தியானமோது, ஆளப்பாஅரிபிரம ராட்சதைநீயென்று ஆனந்தவல்லியென்று நூற்றெட்டோதே. ௩கூஅ

ஓதடாமுப்பல்லியும்பொங்கலிட்டு உத்தமனே நடுச்சாமந்தன்னில்தானும், வாதடாநிருவாணரூபங்கொண்டு வண்மையுடன்ஆணிவேரறுமலநீயும், ஆதடாயெடுத்துவந்துகுளிச்சங்கட்ட அடவானபிராமரட்சதையுமேவல்,காதடாமுனிகருப்புபேயும்பூதம் நலமானதேவேனோடு ஓடிபோமே. ௩கூகூ

பேய்பூதம் ஓடிப்போகமை.

போமடா இன்னமொருமையைக்கேளு பொங்கமுடன்பன்றியுடமூஞ்சியொன்று, அமடாநாய்ப்பலுபுலிபுண்ணுக்கு அடர்கழுதைமண்டைகரும்பூனையீரல்,வாமாடாமனுஷர்மலந்தட்டுச்சீலை வளமாக நெருக்கியப்பாபாண்டத்திட்டு, தாமடாகுழித்தயில மாவரைகாஷ்டத்தானெடுத்துக் குப்பியில் அடைத்துக்கொள்ளே. சா

() காஷ்டம்விறகு.

கொள்ளப்பாமயானத்தில்பாழ்விடாதல் கோரிவிடுகுட்டிச்சுவர் தன்னிலாதல், வள்ளப்பாவஸ்துடனே நெற்பொரியும்வைத்து வஞ்சமில்லாஎருக்கம்பூ அரும்பினாலே, மெள்ளப்பா நூற்றெட்டு உருதானே து மேன்மையாய்அக்களாதியானித்துன்னி, அள்ளப்பாதூம்தூம்தூ சிதூசிசிசிசிபோவென்று அடவாகதயிலத்தினருமைபாரே. சாக

பாரேநீதிலர்தமிடப்பில்லிவஞ்சனைப் பரக்குமடாதேவரொடுகணங்கள்பூதம், கேரேநீமுனிகருப்பபேய்பிசாசு நேரில்லாசெய்வினையும்பயித்தியந்திரும், சீரேநீசெரிகண்டால்மேலே செயலாகப்பொட்டிடசொற்பனங்கள்கோடி, வேறேநீவெடியுடுக்கில்தடவினக்கால் வீரானகுறிமுகந்தான்செல்லகன்றே. சாஉ

சொல்லானவெடிப்பிருந்த பெட்டினாலே சொற்பெரிய சொற்பனங்கள்தீரவேண்டில், அல்லானபொட்டைமிகச்சுரண்டியப்பா அடவாகமுறந்தனிலேசிந்தாமல்தான், வல்லாறைசாணியிட்டுமெழுகென்றுய்வளமாகபசுவின்பால்கொண்டுதேய்நீ, சொல்லானவல்லாங்காய்படர்நிலத்தில சூரையாய்கொட்டிவிடுசொற்பனங்கள்போமே. சாங

அக்கினிபிளாஸ்திரி.

போமென்றுஅக்கினிபளாஸ்திரியைக்கேளு பொங்கமுடன்மெழுகதுவும்விராகன்பத்து, ஆமென்றுபாண்டத்திலிட்டுமைந்தா அடவாகவீரமைந்து பொடித்துப்போட்டு, தாமென்று உருகையிலேவிளக்கெண்ணெவிட்டு தானுருக்கிவடிகட்டிசலத்தில்வாரு, வாமென்றுதனையெடுத்துசிமிழில்வைத்துவடமாகச்சல்லாமேல்தடவிவையேசாச

தடவியேகைகால்குத்தெடுக்குந்தேகந் தயவாகஎலுமிச்சம்பழச்சார்பூசி, அடவியேசாரத்தைப்பொடித்துத்தூவி அடவானபிளாஸ்திரியை அளவாய்போட்டு, மடவியேகட்டிடவே பொறுக்கொண்ணு துமயக்கமுஞ்சோபங்கண்டால் விழித்துப்போட்டு, தடவியேகொப்பளித்துசலமதாகுங் கத்திரித்துவிட்டுவிடுநீறுபோமே. சாரு

இரணமாறுகிறபிளாஸ்திரி.

போமேநீவலிக்குத்து நீந்துபோகும் பொங்கமுடன் ரணமாரப்பிளாஸ்திரிசொல்வேன், ஆமேநீவெள்ளையென்ற குங்கிலியந்தன்னை அடவானமெழுகுடனே சமனாய்சேர்த்து, வாமேநீபாண்டத்திலுருகும்போது வளமானதேங்காயின்நெய்யைவார்த்து, நாமேநீயுருக்கிவடிகட்டிநீரில் நலமாகத்தான்வார்த்து எடுத்துக்கொள்ளே. சாசு

கொள்ளப்பாசிமிழ்வைத்துப் பதனமாகக்கொற்றவனே சல்லா வஸ்திரத்தில்பூசி; அள்ளப்பா அனல்தனிலே கட்டிகட்ட அடவில்லா ரணங்களெல்லாமாறிப்போகு, மௌ்ளப்பாசிரங்குபுண்ணில் பிளாஸ் திரிப்போட மேன்மையாயொடுங்கியதுஉதிர்ந்துபோகும், தெள்ளப் போகருடகடாட்சத்தாலே தெளிவாகபுலிப்பாணி பாடினேனே. ()

பிளாஸ்திரி.

பாடுகிறேனின்னமொருபிளாஸ்திரிகேளு பாங்கானவிளாம்பிசு ஞங்கருக்குங்கிலியம், நாடுகிறேன்சமன்கொண்டுஉருகும்போது நல மானவிளக்கெண்ணே கூடவிட்டு, ஆடுகிறேன்வடிகட்டிச் சல்லாதன் னில் அடவாகத்தானடைத்துத்துணியில்பூசி, சூடுகிறேன்ரணங்கள் மேல்போடஆறும் சுகமாகஅனல்காட்டிப் போட்டிடாயே. சா௱அ

போட்டிடவேயின்னமொரு பிளாஸ்திரிசொல்வேன் புகழ்பெ ரிய மாத்துவெள்ளைப்பலந்தானேந்து, கூட்டிடுவாய்பூரம்பிடைவிராக னைந்து கூட்டியேதானரைத்துப் பொடியாகச்செய்து, மாட்டிடுவா ய்தென்னங்காயெண்ணையாலே மைந்தனேதானரைத்து தண்ணீர்வி ட்டு, ஆட்டுவாய்த்தவளம்போலாகுமட்டும் அப்பனே புண்மேலே போடப்போமே. சா௱கூ

() மாத்துவெள்ளை வெள்ளைக்குங்கிலியம்.

தவளம் வெள்ளை,

மேகராஜாங்கத்தெண்ணெய்.

போமென்றமேகராஜாங்கத்தெண்ணே பூட்டுகிறேனன்றுக புக லக்கேளு, ஏமென்ற () ஏரண்டத்தெண்ணேபடிநாலுவிதமாக () ஈரு ள்ளிச்சாறுபடிரண்டு, ஆமென்றகழுதைலத்தைச்சாறுபடிரண்டு அ டவாகவரிக்குமட்டிச்சாறுபடிரண்டு, வாமென்றபுளியாரைசங்குவல் லாரைபிரமியோடுதலைசெருப்படியே. சா௱ய

ஏரண்டத்தெண்ணெய் ஆமணக்கெண்ணே.

ஈருள்ளி வெங்காயம்.

படியானக்கருநொச்சிப் பொன்னாங்காணி பாளிநுணா ஆதொ ண்டை () கிரந்திபூண்டு, கெடியானவெள்ளறுகுசிவனார்வேம்பு செய லானவகைக்குவகைபடிதான்ரண்டு, கெடியானசாறெல்லாமெட்டோ

ன்ருகக்கெணிதமாய்வேருவகைசொல்லக்கேளு, பிடியானகொடிவேலி பூவரசன்வேரும்பொங்கு நிலவாகை () சுடுதுரத்தம்வேரே. சுகக

() கிரந்திபூண்டு-கிரந்திநாயகம்.

() கடுத்தம்-சித்திரவேலை.

வேரான () கிளிமூக்கின்கிழங்கிஞேடு விதமான அப்பைவிடகி ணங்குப்பி, சீரானவகைவகைக்குப்பலமதாகச் சேர்த்திடித்துக்குறு ணிநீரெட்டொன்ருக்கி, காரானகண்ணேயிலேவிட்டுமைந்தா கடைச ரக்கு இதிற்போடகருத்தாய்க்கேளு, பேரானசாதிக்காய் கிராம்பு ஏலம் பேமில்லாசிறுலவங்கப்பட்டைமிளகே. சுகஉ

() கிளிமூக்குக்கிழங்கு கற்ருழைக்கிழங்கு.

மிளகுடனே அதிமதுரங்கோஷ்டந்திப்பிலி மிதமானதிப்பிலி யினமுதத்தோடு, அளகானவெண்காரம் குருசாணியோமம் அடவா னதான்றிக்காகடுக்காய்காயும், வளமானகரியசீரகங்நார்போகங் கஸ் தூரிஅரத்தைக்கு அதிவிடயமக்கிராகாரம், பளகாமகடுகுரோகணி யுமாஞ்சில் பொங்குமுடன்தாளிசபத்திரியுமாமே. சுகங

ஆமென்றகசகசா ஓமங்கஞ்சா அடவானவலம்புரிக்காய் பரங் கிப்பட்டை, வாமென்றசெனுமரப்பட்டையோடு வளமானவாலுளு வைசிறுநாகப்பூ, ஊமென்றதக்கோலம்வசம்புசுக்கு உத்தமனேயபி னிவசுவாகிசீரம், போமென்றயானைதிப்பிலி குங்குமப்பூ பொங்குமு டன்வாளஞ்சேங்கொட்டைத்தானே. சுகச

சேனுமரப்பட்டை-அழிஞ்சிப்பட்டை.

தானென்றளவச்சாரஞ்சத்திசாரங் தடவானநவாச்சாரஞ் சாஸ் திரபேதி ஆனென்றவகைவகைக்கு விராகன்ஞலு அடவாகப்பொடி த்துநீ எண்ணெதனிற்போட்டு, வானென்றமெழுகுபதங் தன்னிலிற க்கி வண்மைபெறகணபதியைப்பூசைசெய்து, தேனென்றகுருபதத் தைமனதிலுன்னி தென்புபெறஒருகரண்டி உள்ளேகொள்ளே. ()

கொள்ளப்பா அந்திசந்திகொண்டபோது கொடிதானபத்தியந் தானெதுவுமாகா, தெள்ளப்பாமுன்ருநாளாறுவேளைதெளிவாக ஏழா ளுள்நீரைவாரு, வெள்ளப்பாவறுத்தவுப்புமாகும் மேனகையாம் மற் ருேள்புளியைக்கூட்டு, தள்ளப்பாகிரந்தியரையாப்புச்சூலை சும்மில் லாவிப்புருதிகண்டமாலைபோமே. சுகஎ

போமேநீயிருபத்தோர் மேகமுந்தானும் பொங்குகின்றகுஷ்ட மொடுசோகைபாண்டு, தாமேதானகல்வாதம் அண்டவாதங் தயவு

ல்லா நால்வாதம்பச்சைசவாதம், ஆமேதான்பவுத்திரமூலப்பற்று அடவானமண்டையுடசூலைவாயு, நீருமேரணங்களோடு சூலைதீருந் திறமானபோகருடைய டாட்சந்தானே. ௪௧௭

ஐந்தெண்ணைத்தயிலம்.

தானானஎள்ளெண்ணை யேரண்டத்தெண்ணை தயவான இலுப்பெண்ணைவேப்பெண்ணைதான், மானானபுங்கெண்ணை யைந்துதானுமைந்தனேவகைவகைக்குப்படி தானொன்று, தானானபாண்டத்திலளந்துவிட்டு தயவாகக்கியாழவகை சொல்லக்கேளு, தோனான ஆதொண்டைமூலம்பத்ரி கொற்றவனேசெம்புடையமூலங்கேளே. ௪௧௮

கேளேநீதழுதாழைகாட்டாமணக்கு கெணிதமாய்த் திருகுகள்ளிசிவனார்மேனி, நாளேநீமாவலிங்கம் ஆவிகொச்சி நலமானவேம்புபுங்குவெள்ளைநொச்சி, சூளேதான்கொடிவேலிகாரமுருங்கைச்சங்குசுகமாகஊர்முருங்கைதூதுவேளை, வாளேநீமரம்பட்டைமூலிகைதான் மூலம்வகைவகைக்குப்பலமைந்துநிறுத்துக்கொள்ளே. ௪௧௯

கொள்ளப்பா இவையெல்லாமிடித்துப்போட்டு குணமாகத்தூணிநீரெட்டொன்றாக்கி, தெள்ளப்பாஎண்ணையிலே யிருத்துவாருதெளிவாகசரக்குவகைசொல்லக்கேளு, மெள்ளப்பா அரத்தைசுக்குவோமந்திப்பிலிமேன்மையாய்த்திப்பிலியின் மூலத்தோடு, அள்ளப்பா ஆனைத்திப்பிலியுங்காயம் அடவாககருஞ்சீரகஞ்சதகுப்பைதானே. ()

தானென்றதேசாவரங்குராசாணி * யுள்ளிதயவாக * வெளிச்சியென்றபிசினியோடு, வானென்றவசம்புடனேதேக்குஇஞ்சி மைந்தனேசடாமாஞ்சில்கிராம்பு * குக்கின்தேனென்ற வகைவகைக்குப்பலங்காலாதெளிவாகயரைத்திட்டு எண்ணையிலேபோட்டு, தானென்றமெழுகுபதந்தன்னில்காச்சி கணபதிக்கு பூசைசெய்தெடுத்துக்கொள்ளே. ௪௨௧

* உள்ளி-வெள்ளைப்பூண்டு * வெளிச்சி-வெளாம்பிசினி * குக்கில் மைசாட்சி.

கொள்ளப்பாதயிலங் காசிடைதானுண்டு குணமாக மேலெங்கும்பூசினாக்கால், கள்ளப்பாசன்னியைங்கேதோஷமெங்கே கடிதானவிப்பேழும்அண்டவாதம், சுள்ளப்பாவாதமென்ன வகைகளெல்லாஞ்சுழன்றெழுந்து ஓடிவிடுமெதிர்நில்லாது, மெள்ளப்பாமூன்றுநாளாறுவேளைமேன்மையாயேழுநாளுநீரைவாரே. ௪௨௨

வாரேதான்விஷமூண்டிதயிலமொன்று வளமாகச்சொல்லுகிறேன்நன்றாய்க்கேளு, சேரேதான்யேழிஞ்சியெட்டிச்சங்கு செயலானவன்னிபுங்குசெண்பகப்பூ, சாரேதான்சங்கங்குப்பிகடம்புசின்னிசார்வானவெள்ளறுகு ஆவிப்பட்டை, திரேதான்மருக்காரை இரண்டுக்கொத்தான் கிரஞ்சொன்னயுரிவிகாஞ்சோரியாமே. ௪௨௩

ஆமேதான்குன்றுமணிகருகருத்தகண்ணி ஆவாரைசிவன்வேம்புகழுதைமுள்ளி, காமேதான்ஐவன்னிபுரசிகருங்காலி தயவானபுடர்

ந்தியொடுகிளுவைவாகை, போமேதான் புனலினடுகருவூமத்தைப் பொங்கமுடன்கொடுவேலிமுத்தக்காசு, வாமேதான் அமுக்கறுவிட த்தேறும்பூவரசுடனேசின்னப்பாபாலாக்குமரித்தானே. ௪௨௪

* சின்னபாலா குட்டிபாலா, குமரி சோற்றுக்கற்றாழை.

தானுளமிளகாணைக்கொன்றையாத்தி தயவானகழல்கொடிபுஞ் செங்கத்தாரி, வானுனபெருவரமும்அவரிகட்டு வளமாக சமனாக்கி யுணர்த்திக்கொண்டு, பானுனகுழித்தயிலமாகவாங்கி பக்குவமாய்த் தானெடுத்துப்பதனம்பண்ணு, மானுனசீறிசெந்துவகையைச் சொல்வேன் மைந்தனேமூஞ்சுறுங்காகமாமே. ௪௨௫

* பெருமம் தலைசுருளி-கட்டுக்கொடி.

ஆமேதான் யழுக்கோடுகழுகு ஆமையாந்த அடார்பச்சை ஒணா ன்கூகைதேவாங்கு, தாமேதான்பசுந்தவளைப்பெருவிரியன் தயவான மனுசமண்டைகழுதைமண்டை, போமேதானெருமைக்கொம்புரிக் குளம்பினோடு பொலியானைலத்தமுதல் புழுக்கைதானும், வாமேதா னொட்டகத்தின்லத்திக்கூட வன்பன்றிக்கழுதையுடலத்திதானே. ()

* கூகை-கோட்டான் பரிக்கொம்பு-குதிரைகுளம்பு.

தானப்பாவெள்ளாட்டுப் புழுக்கையோடு தயவாகசமன்கொண் டு இடித்துலர்த்தி, தானப்பாகுழித்தயிலமாகவாங்கி பாங்கான இரு தயிலமாகவாங்கி பாங்கானஇருதயிலஞ்சமனாய்ச்சேர்த்து, போனப் பாகொட்டைதயிலமரைப்படி கொற்றவனே தயிலத்தின் கூடவாரு, வானப்பாகருப்புடையகுங்கிலியம்வளர்த்திகையின்* பூட்டைய பூச் சித்தானே. ௪௨௭

* பூட்டு சூக்ஷம்.

தானடாகருஞ்சீரகம்கஸ்தூரிமஞ்சள் தனித்தேதான்மாசக்கா யிரசகற்பூரம், மானடாசேனுமரப்பட்டையோடு மைந்தனேவகைவ க்குப்பலந்தானென்று, வானடாபரங்கிப்பட்டைபிறப்பன் கிழங்குவ ளமாகப்பலம்ரண்டு நிறுத்துப்போட்டு, பானடாவலம்புரிக்காய் கடுக் காயோடுபாங்காகப்பலமொன்றுநிறுத்துக்கொள்ளே. ௪௨அ

கொள்ளேதான்ஒதியம்பட்டைசித்திரமூலஞ்சாறுகுணமாகச்ச ரக்கெல்லாமறைத்துப்போட்டு, அள்ளேதான மயிலெண்ணே வேப் பெண்ணேயிரண்டும் அடவான தயிலத்தில்நேரோசேர்த்து, துள்ளேநீ துளாமிகப்பதத்தில்காய்ச்சி சுகமான கணபதிக்குப் பூசைபண்ணு, கொள்ளேதான்துவலேயிடுதேகமெங்கும் தெளிவாக நோய்தீரும் வி பரம்பாரே ௪௨௯

பாரேதான்கால்முடங்கைமுடமுந்தீரும் பாங்கானசூலேயொடு குஷ்டநோயும், சாரேதான்புடையன்செவ்வட்டைமாவட்டைசெய் யான்வண்டுகடிபில்லிவஞ்சனையும், தீரேதான்பூதமுதல்பசாசுவேதா ளந்திரமானபிரமராட்சசையுங்கூட,வீரேதான்மற்றுநாள்தேதுதண் ணீர் வீரானசொரியநிந்நுதண்ணீர்வாரே. ௪௩0

வாரடாகுகைப்போடு புளிபுதையுந்தள்ளுவளமானஉப்பை நன் றாய்வறுத்துக்கூட்டு, பாரடாபசிப்பயர்கொடிக்காலின்பிஞ்சு பாங்கா

கமுருங்கைபிஞ்சுமாகும், கூறடா ஆவின்பால் நெய்யுமாகுங் குணமானதுவரையுட பருப்புமாகும், சீரடாவியாதியுங் குறியுங்கண்டு சிறப்பாகபத்தியத்தை சீராய்க்கூட்டே. சஙக

## விஷங்களுக்குமெழுகு.

கூட்டப்ப வரிகுமுட்டி பழச்சார்வாங்கி குணமாகப் பாண்டத்தில் மைபோல்கிண்டி, மாட்டப்பாசிமிழ்தனிலே யடைத்துக்கொண்டு மைந்தனேபசும்பயறு ளவாய்ந்தானும், பீட்டப்ப நாவுதனில் தடவிப்போடு, மிருந்ததொருவிஷங்களெல்லா மிறங்கிப்போகும், ஆட்டப்பா போகருடகடாட்சத்தாலே அடவாகப் புலிப்பாணி பாடினேனே. சஙஉ

## அக்கினிமாந்தத்திற்கு லேகியம்.

தானேதான்றிரிகடுகு ஓமவாய்விளங்கந் தயவாகவகைவகைக்கு விராகனெந்து, போமென்றபொடிபண்ணி சர்க்கரைநேர்ச்சேர்த்து பொங்கியதேன்படிக்கால்வார்த்து, கோமென்று பிசைந்ததிலே வைத்துக்கொண்டு குணமாகநெல்லிக்காயளவுகொள்ள, வாமென்றவாயு அக்கினியின்மந்தம் வாங்கடாபோகருட கடாட்சந்தானே. சஙங

## சத்தல்வாதிஎண்ணெய்.

தானப்பாசத்தி வல்லாதிஎண்ணெ தயவாகசித்தாமுட்டி மூலத்தோடு, ஆனப்பாபலமருமுப்பந்திரண்டு அடவாகத்தானிடித்துஇருதூணிநீரில், பானப்பாகாவிலொன்று காய்ச்சிவாங்கி பாங்காகஐந்தெண்ணெ ஒருபடிதான்வாரு, வானப்பாகெந்தியது மதுரங்கோஷ்டம் வளமாகசாதிக்காய் சாதிபத்திரியே சஙச

பத்தானஏலமுடலவங்கப்பட்டை பாங்கானஅரத்தைசுக்கு அக்ராகாரம், முத்தானமாஞ்சைதாளிசையாம்கத்திரி மூடுக்கானவாய்விளங்கம் யானைத்திப்பிலி, சித்தானதிப்பிலி கடுகுரோகணியுந் திருக்கைநீர் வாய்விளங்கம யானைத்திப்பிலி, சித்தானதிப்பிலி கடுகுரோகணியுந் திருக்கைநீர்வாலின்மிளகுஓமம், வித்தானகுங்குமப்பூ கடுகுசீரகம் விதமானகடுக்காயுந் தான்றிக்காயே. சஙரு

காயாதசெண்பகப்பூ கொத்தமல்லி கருவானவாலுழுவை சிறுநாகப்பூ, மாயானசெவியமது கழஞ்சுசிராலு மைந்தனேபொடிபண்ணி எண்ணெயிலேபோட்டு, தாயானபழச்சாறுபசுவின்பாலு தயவாக வகைவகைக்குப் படிதான்வாறு, சேயானமெழுகுபதந் தனில்வடித்து செயமானபுழுகுடனே கஸ்தூரிப்போடே. சஙசு

போடேதான்வகைவகைக்கு கழஞ்சித்தானும் பொங்கமுடன் கணபதிக்குப் பூசைபண்ணு, நாடேதான்மண்டைவாதம் கடிதானபித்தமொடு நீலகாசம், சூடேதான்பீநிசமும் வாயுசூலை சுகமில்லாச்சொரிமுதலாய்த் திரும்பாரே. சஙஎ

பாரேநீமூன்றுநாளாறுவேளை பாங்காகக்கொள்ளையிலே பத்தியத்தைக்கேளு, சேரேதான்சீயக்காய் வெந்நீருவாரு சிறப்பானபசும்பயறு உப்புங்கூட்டு, நீரேதான் நாலாநாளெல்லாங்கூட்டு தீர்க்கமா

யிப்படிமூன்று கெடுவேகொள்ளு, வீரேதான் சொன்னபிணி தீரும் பாரு விதமான போகருட கடாட்சந்தானே. ௩௩௮

* ஈளகாசம் பெருமூத்திரத்திரச்சிநீர்குடப்புக்கிரிச்சனம்.

பெரும்பாண்டுக்குலேகியம்.

தாளுனவரிக்குமட்டிவேர் பலமும்பத்து தயவான கடுக்காய்வேர் நெல்லிவேரும், கோளுனவெட்டிவேர் வில்வவேரும் குணமான விலாமிச்சை தூதுவளை நன்னாரி, வாளுனமாதளைமலைவாங்கி சிறுகாஞ்சோரி வளமானநெய்தலோடு செங்கழுநீர்க்கிழங்கே ௩௩௯

கிழங்குகாசமல்லி நிலப்பனையும்நிலவாகை கிருபையுடன் கண்டங்கத்திரியின்மூலம், புளக்கமப்பாவகைவகைக்குப் பலந்தானொன்று போட்டிடித்துதூணிநீரெட்டொன்றாக்கி, விளக்கப்பா பசுவின்பால் படியுளுவிட்டு விதமானசரக்குவகை சொல்லக்கேளு, முளங்கப்பாசாதிக்காய் சாதிபத்திரிமுதலானகிராம்பேலம்வாலுளுவையமிளகே. ௩௪௦

மிளகானசிறுலவங்கம் மந்திட்டிகோட்ட மிகுந்தநல்ல சந்தனமும் கரியசீரகம், அளவானசதகுப்பை வாய்விளங்கம் அடவான சாஸ்திரமாம் பேதியோடு, புளதானதாளிசபத்திரிவேதாரம் புனிதநீரகமிளகு சிறுநாகப்பூ, இளகானஅதிமதுரம் * காஞ்சினியும் ஈயவாலுழுவைதேக்கு * சிங்கியாமே. ௪௪௧

* காஞ்சினி-மஞ்சள் * சிங்கிகடுக்காய்ப்பூ.

ஆமேதான்கஸ்தூரிமஞ்சளோடு அடவானதிப்பிலியுந் திப்பிலியின்மூலம், போமேதான்ரோகணியும் நெருஞ்சில்முள்ளு பொங்கமுடன் குரோசானிமுத்தக்காசு, தாமேதான்கடுக்காயும் நெல்லிக்காயும் தயவானகுங்குமப்பூ மாதளையின்பிஞ்சு, வாமேதான் வகைவகைக்கு கழஞ்சிநாலு வளமாகப்பசுவின்பால் தன்னிலாட்டே. ௪௪௨

ஆட்டியேகியாழமது தன்னிற்போட்டு அடவாகஆவின்பால்நெய்படிதான்விட்டு, ஞடியேசெவ்விளநீர் பழச்சாறுதானும் நலமானவல்லாரைச்சாறுகூட, மூட்டியேவகைவகைக்குப்படிதான்ரண்டு முசியாதசீனியதுபலந்தான்ரண்டு, கூட்டிநல்லவெல்லம் பலந்தானுலு கூடவிட்டு மெழுகுபதந் தன்னிற்காச்சே. ௪௪௩

காய்ச்சியேவடிகட்டிக் கலசத்திட்டு கணபதிக்குப் பூசைசெய்து நெற்புடன்தான்திங்கள், ஆச்சியேயெடுத்துநீ வைத்துக்கொண்டு அடவாகமுக்கழஞ்சி அந்திசந்தி, காச்சியேகொண்டிடவே ஈளைகாசந் தயவில்லாநடுக்கம் பித்தமேகம், ஆச்சியேவலிப்போடுகல்லடைப்பு அளவில்லாமூத்திரத்தின் கிரிச்சியோடு, பேக்கியேபெரும்பாடு மேலெரிவுகாந்தல் பேதமில்லாநீர்சிறுப்புவாயுபோமே. ௪௪௪

போமடாமலடிக்கு பிள்ளையுண்டாம் பொங்கியகைப்புளிதயிருமாகா, வாமடாநெய்விட்டாலல்லாமாகும்வளமானதேகமதுகாந்தியுண்டாம்போமடாபவளபற்பநெய்யிற்கூட்டிபாங்காகத்தொண்டிடவே

நோய்களெல்லாம், தாமடாகைகறுப்புமாறிப்போகும் தயவானபோ கருடகடாட்சந்தானே. சசரு

பீனிசத்துக்குளண்ணெ.

தானப்பாபீனிசத்துக் கெண்ணெகேளு தயவாகஎள்ளெண்ணெப டிதான்ரண்டு, வானப்பாகரிசாலைபொன்னாங்காணி வளமானவெற்றி லையவுரிமுசுமுசுக்கை, மானப்பாமுக்குரட்டை அத்திப்பட்டைமைந் தனேவகைவகைக்குபடிசார்விட்டு,கேளப்பாதொண்டையிலைச்சாரு தானுங்கொற்றவனேபடியிரண்டளந்துவாரே. சசசு

வாரப்பாபீனிசமாம் பூண்டுமூலம் வகையுடனேஇடிசார் படி தானொன்று, வீரப்பாபசுவின்பால்படிதானொன்று வித்தகனேயடுப் பேற்றிவேகும்போது, சீரப்பாமிளகுடனேகஸ்தூரிமஞ்சள் சிறுகடுக் காய்நெல்லிவித்துநிம்பவித்துங், காரப்பாகருஞ்செம்மைப்பூவுந்தானு ங் கனமானவகைவகைக்குப்பலந்தான்வாங்கே. சசஎ

வாங்கியேபொடித்திட்டுமுன்னெய்யிற்றாவி வகையுடனேமெழு குபதமானபோது,தூங்கியேபோகாதேயிறக்கிக்கொண்டுதுய்யமிகுக ணபதியைப்பூசைசெய்து, திங்கில்லாதைலமதைதினமுநான்கில் தீவ ரமாய்முழ்கிவரதிரும்ரோகம், ஏங்கியேதிரியாதேபுளிப்புகைக்குளள் ளெண்ணெமாங்கிஷமுமீனுகாதே. சசஅ

ஆகாதுபெண்போகமாகாதப்பா அப்பனேவறுத்தவுப்புதுவரை யாகும், வேகாதபண்டங்களொன்றுமாகா வெந்நீருமுருங்கைக் காய வரைப்பிஞ்சும், நோகாதவழுதவங்காய்வற்றலாகும்நோயாளிகண்ட றிந்துபத்தியஞ்செய்தார், போகாதபீநிசங்கள்பரந்துபோகும் போக ருடகடாட்சத்தார்பாடினேனே. சசகூ

மேகரணங்களுக்குத் திப்புகை.

பாடுவேன்மேகமென்றரோகந்தீரப் பாரிலுள்ளபண்டிதரேபகர க்கேளு, ஈடுவேன்பூரமதுவீரகமொன்று ஈலமானசூரசெந்தூரமொ ன்று, கூடுவேன்தேன்மெழுகுபலமேகானு குறியாககரண்டியிலேஉ ருக்கிக்கொண்டுஆடுவேன்முன்சரக்கைப்பொடித்துத்தூவி அப்பனே இரக்கியைந்துதிரியிலூட்டே. சருய

சூதசெந்தூரம் ரசசெந்தூரம்.

ஊட்டியேரோகிதனை அறையில்வைத்து உத்தமனேதிரியொன் றைதீபமேற்றி, நாடியேகண்கொட்டாங்கச்சிஎதிரில்வைத்துகலம்பெ றவேமேருவின்மேல்பார்வையிட்டு, காட்டிகமாய்திரியெரித்து அனே யுமட்டுந்தானிருந்துவேர்வையெல்லாந்துடைத்துப்போட்டு, ஆடியே ஆவின்பால்உழக்குள்தந்து அப்பனேபாலனமும்பின்னுற்கொள்ளே.

கொள்ளவே உப்பாகாமுன்றுநாளும்குணமாகப்பாலன்னங்கொ ள்ளவேண்டுங், தள்ளவேமற்றொன்றுமாகாதப்பா தன்மையுடநான்கா னுள்வெந்நீரோடு, மெள்ளமேநீருமுள்ளிசலமுங்கொண்டு மிதக்கி

ட்டுகாச்சிபின்னூறவிட்டு, அள்ளியேஓமமிட்டு நீரைவார்த்து அப்ப னேசெம்மறியாடுமிளகுநீரே. சருஉ

நீரிலேமிளகாகும்உப்புமாகும் நிச்சயமாயன்றுதொட்டுக்காரசா ர,மாறியேநெய்யோடுபாலுமாகும் மைந்தனேஆட்டிறைச்சிமச்சமா கும், பாரினிலேபெண்ணுகாபுளியுமாகாபாலகனேவாய்நீரைஆற்றலா கா,வீரியமாயிருபதாளோமங்தேய்த்து விருப்பமுடன்விளக்கெண் ணைமுப்பதிலேமுழுகே. சருங

முப்பதுடன்பத்தாளாகு முன்னேமுக்கியமாய் திருகின்றவி யாதிகேளு, தப்பத்துடன்பீநிசங்களேமூந்திருந் தலைபிளவைஉச்சிப் புற்றுகண்டமாலை, கப்பதுடன்கன்னபுற்றுலிங்கபுற்றுகனமானஅண் டபுற்றுயோனிப்புற்று, இப்பதுடன்பல்லாணசந்தபுற்றுஇயலானமா ர்பிளவைகொருக்கைபோமே. சருச

போகுமேஅரையாப்புஆசனத்தின்புற்றும்பொல்லாதபவுத்திர ங்கள்மேகவெடிசூலை, சாருமேகுஷ்டவெடிதுடையில்வாழை சலக்க ண்ணி அழுக்கண்ணிசதைவளர்த்தல், ஏகுமேதவளைசொறி ஆனை சொறிபீலி இயலில்லாரணங்களெல்லா மெளிதில்போகும், ஆகுமே போகருடகடாட்சத்தாலே அவனிதனிற்புலிப்பாணிபாடினேனே.

அண்டமெழுகு.

ஆடியேசித்தண்டமெழுகிதப்பா அப்பனேசொல்லுகிறேன் வில் லவேறு, தேடியேவீசைபத்து கொண்டுவந்துசேர்த்ததனைநறுக்கிய பின் நிழலுலர்த்தி, வாடியேபோகாதபாண்டத்திட்டு வாய்மூடிசீலை செய்து குழித்தயிலம்வாங்கி, நாடியேதலைஅண்டம் பீங்கானிலிட்டு நிலவரமாய்த் தைலமதை நிறையவாரே. சருசு

வார்த்தபின்புநாற்பதுநாள் ரவியில்வைத்து வற்றவற்ற தைலம தைவார்த்துவந்தால், பார்த்திருந்தபண்டிதர்கள்மாயமாக பசுமையு ள்ளமெழுகாகும்பகரக்கேளு, தூர்த்துவந்தவாதமெல்லாந் துலைந்து போகுஞ், சுண்டக்காயளவெடுத்து தேனிலீந்தால், ஆர்த்திருந்த சூ லையெல்லாமார்ந்துபோகு மளவாகபுலிப்பாணி அரைந்திட்டேனே.

இலவணச்செந்தூரம்.

அரையுரேன்லவணத்தின்செந்தூரங்கேள்அப்பனேகல்லுப்புப லந்தானு, கழறுவேன்சூதமதுபலந்தானென்றுகல்வத்தில் தானிட் டுவில்வத்தின்சாற்றால், மறையவேதானரைத்துரெண்டுசாம மார்க்க மாய்குகையில்வைத்து சொல்லக்கேளு, விரையுரேன்போகருடகடா ட்சத்தாலே விபரமுடன்புலிப்பாணிவிளம்பக்கேளே. சருஅ

கேளேதான்உலையில்வைத்துபழுக்கஊதகிருபையுடனுருகியது மணிபோலாகும், கேளேதான்வாறுமல்ஆறவிட்டுகொற்றவனேகல்வ மிட்டுபொடியாய்ச்செய்து, நாளேதான் அந்தரத்தாமரையின்சாறு நால்சாமந்தானரைத்துபில்லைதட்டி,பாளேதான்போகாமல்காயவை த்துபக்குவமாய்ச்சில்லிட்டுபுடமுமாமே. சருகூ

ஆமேனீமுன்போலஐந்துபுடம்போட்டால்அப்பனேசெந்தூரமா கும்பாரு, தாமேனீயெடுத்ததனைசிமிழில்வைத்து தயவாகபணவிடை தான்தேனிற்கொள்ள, போமேனீகுன்மமென்றகெட்டுந்தீரும் பொல் லாதநெஞ்செரிவு சூலைரோகம், வாமேனீசூதத்தின்வாயுதீரும் வல்ல மையால்புலிப்பாணிவகுத்திட்டேனே. சகூ0

நவரசமெழுகு.

வகுத்திடவே நவரசமெழுகுதன்னைவளமாகச்சொல்லுகிறேன் மைந்தாகேளு, தொகுத்திடுவேன் லிங்கமொடுதாளகமுஞ்சிங்கிசொற் பெரியமனோசிலைகௌரிவெள்ளை, பகுத்திடுவேன் சூதங்கெந்திவீரம் பூரம் பாங்கானதுரிசியுடன்வகைக்குத்தானும், மகத்திடுவாவிருகனி டையொன்றேதானும் மாசற்றவாளமதுபதினொன்றாமே. சகூக

ஆமேதான் சரக்கெல்லாங்கல்வத்திட்டு அப்பனே அன்னக்கொ டியினாலாட்டி, தாமேதான்நாற்சாமமானபின்புதயவாகமுழச்சிலை அ தில்பரப்பி, மோமேதான் திரித்ததனைகாயவைத்து பொங்கமுடன் ஆ விநெய்பலமெட்டாகும், தீமேதானில்லையடாசுடர்தயிலமாகத் தீவிர மாய்மூன்றுமுறைமடக்கிச்செய்யே. சகூ௨

செய்தபின்புதயிலமதையெடுத்துக்கொண்டு செப்பரியபனவெ ல்லம்பலமேமூன்றுகொய்தசுக்குடனுமுன் தயிலங்கூடகொற்றவனே விராகநெடைசேர்த்துவைத்து, கைதவமாஞ்சுண்டக்காய் அளவுகொ ள்ளகடத்திலுள்ளவாதமெல்லாங்கதிகெட்டோடும் பைதமுடன்மாத மொன்றுக்கைந்துநாள்தான் பக்குவமாய்படிமூன்றுமுறையுந்தானே.

தானாகத்தீருகின்றஙியாதிகேளு தகைமையில்லாகுன்மமெட்டு ஞ்சூதகத்துவாயு, மாளாகதிமிர்வாதங்குடலின்வாதம் மன்னவனேப க்கமென்ற வாதம்போகும், வாளாகடந்தியந்தான் சொல்லக்கேளு வ ண்மையுள்ளபசும்பாலும் நெய்யுமாகும், தேனாகபசும்பயறு வறுத்த வுப்பாகுந் தெளிவுடன்பத்தாநாள் விளக்கெண்ணைமூழ்கே. சகூ௩

() பக்கவாதம்-பாரிசவாயு.

மூழ்கியபின் மதுபானம் பெண்ணுகாது முக்கியமாய் தொண் ணூறுநாளாகுமட்டு, மாழ்கிநீபோகாதேமனம்விடாதே மதிகெட்டுநி ல்லாதேமருந்தேருந்து, காழதபண்டந்தின்றுதேகாலைமாலை காலாறநீ நடந்து திரும்பநன்று, வாழ்துவார்போகருடகடாட்சத்தாலே வகை யாகப் புலிப்பாணி வசனித்தேனே. சகூரு

ஆனைக்கால்திராலேகியம்.

வசனித்தேன் () கருங்குருவைமாப்படிகால்தான் வகையாகதி ருகுகள்ளிபாலரைக்கால், நசனித்தபசும்பால்தானரைக்காலாகும்நறு ந்தேனும் படியரைக்கால் நவிலக்கேளு, அசனித்தமதனிலே கலந்து க்கொண்டு தயவாக அடுப்பேற்றி லேகியமாய்கிண்டி, அசனித்து ஆ றவிட்டு கல்விலாட்டி அப்பனேகலசமதில் பதனம்பண்ணே. சகூசா

() கருங்குருவை-கருப்பரிசி.

பண்ணப்பாகமூற்சிக்காயளவாகக்கொள்ளு பக்குவமாயைந்து தினமிருப்பரந்தான், நண்ணப்பா இம்முறையாய்மூன்றுமாதம் நன்மையுடன்கொள்வதற்குப்பத்தியங்கேள், உண்ணப்பாநெய்பால் பசும்பயருகும்உத்தமனேவறுத்தஉப்புமிகவுமாகும், கண்ணப்பாமறுபத்தியமிருந்து விளக்கெண்ணெயால்முழுகுகருணையுள்ளபோகருடகடாட்சந்தானே. சசுஎ

## அர்த்தனுதி சுரமாத்திரை.

தாமெனன்ன () அர்த்தனுதிமாத்திரையைச்சொல்வேன் தனிவெள்ளைப்பாஷாணம்மிருகமென்று கோமெனன்றகோரோசனைமிருகனென்று கொற்றவனேமுலைப்பாலால்சாமமாட்டி, பாமெனன்றபசும்பயர்போலுண்டைசெய்துபக்குவமாய்முலைப்பால்தன்னிலீய, வாமெனன்றபோகருடகடாட்சத்தாலே வண்மையுள்ளசுரம்நீங்கி () அர்த்தமாமே

() அர்த்தம்-பாதி-ஆகையிலுவமானம்-பொன்.

அர்த்தமென்ற இடமுலைப்பால் தன்னில்ஈந்தால்அப்பனேஇடபுரத்துசுரம்நீங்கி யொருபுறமாய்நிற்கும், வர்த்தமென்ற இருமுலைப்பால்தந்தால் வகைக்கெட்டுசுரமதுதானுடனேநிற்கும், கர்த்தனென்றுஉலகத்துதித்துலோகமெங்கும் காலில்விழுந்துகும்பிடுவார்கதிதாவென்று, விர்த்தனென்றபோகருடகடாட்சத்தாலே விபரமுடன்புலிப்பாணிபாடினேனே. சசுகூ

## அமிர்தசஞ்சீவிமாத்திரை.

ஆமென்ற அமிர்தசஞ்சீவிமாத்திரை அடவாகசொல்லுகிறேனப்பாகேளு, தாமென்றசாஸ்திரபேதி ஏலந்தனிகோட்டங் கிராம்புடனேசாதிபத்திரி, காமென்றசந்தனமுங் கறிகுரோகணி இலுப்பைப்பூவன்னுறி விலாமிச்சம்வேர், வாமென்ற () இருவேலிகடுக்காய்தான்றி வற்றல்நெல்லிதிப்பிலியுமதுரமாமே. சஎய

() இருவேலி-வெட்டிவேர்.

மதுரமென்றரொட்சமொடு முத்தக்காசு மைந்தனேபேரீச்சங்காய்வகைக்கு, சதுரமென்றவிராகனிடை நிறுத்துக்கொண்டு சலியாமல்கல்வமிட்டு பழச்சாற்றுலேட, அதிரப்போலரைத்திடுவாய் சாமம்னாலு அப்பனே கடலைபோலுண்டைசெய்து, நதிவரண்டுமிஞ்சிபதனமானு நன்முலைப்பால் வெந்நீரிலீயநன்றே. சஎக

நன்றாகுஞ் சன்னிமுதல் தோஷமெல்லாம் நன்மையாம் கிள்ளைபிணி நலியுந்திரும், பன்றாகும்ஜுவரட்சி பாக்கும்பாரு பரிதிகண்டபனிபோலாம் தசவுள்ளோற்கு, கன்றாகபத்தியமாய்க் காருகாரு கதிட்டால் வியாதியது கதித்துக்கொல்லும், குன்றாகும்போகருட கடாட்சத்தாலே குணமாகபுலிப்பாணிகூறினேனே. சஎஉ

## அக்கரசஞ்சீவிமாத்திரை.

கூறுவேன் அக்கரசஞ் சீவிமாத்திரை குணம்பெறவேசொல்லு கிறேன்குறிப்பாய்க்கேளும், கோறுகிறேன்அதிமதுரங்கோஷ்டஞ்சுக்குகுணமுள்ளசாதிக்காய் () கடுக்காய்சீரகம், ஊறுகிறலவங்கப்பட்டைதிப்பிலிமூலம் உத்தமனேகடுக்காயும் அசமதாகம், தேறுவேன் கொத்தமல்லிகஸ்தூரிமஞ்சள் திறமுள்ளபழம்புளியுஞ் சீனிகாணே.

() அசமதாகம் ஓமம் கொடுக்காய் கொடுக்காப்புளி.

காணவே() அரத்தைரண்டு இந்துப்பூகருஞ்சீரகம் வகைவகைக்குவிராகனென்று, தோணவேமுலைப்பாலிலிரண்டுசாமந் தொகுத்திடவேதானரைத்துதுவரைபோல, மாணவேவுண்டைசெய்து நிழலுலர்த்திமைந்தனே குப்பிலே அடைத்துக்கொண்டு, காணவேநாவரட்சைசங்கைதோஷம் நலமில்லாசன்னிமுதல் சுரங்கள்போமே.()

() அரைத்தரண்டுபேராரத்தை சிற்றரத்தைகுப்பிசீசபுட்டி.

போருமேமுலைப்பாலில் கொடுக்கநன்று புனிதமுள்ளஅனுபானந்தன்னில்ஈவாய்ஆகுமேபிள்ளைப்பிணி அனந்தம்போகுஅப்பனே பத்தியமாயிருக்கச்செய்து, பாகமாயேழுநாள்கொண்டபின்னர் பாலகலைவாரமதாய்நீரைவாரு, தோகமாய்வியாதிகண்டு மருந்தைஈவாய் சொற்பெரியபோகருடகடாட்சந்தானே. சஎரு

## பிள்ளைகட்கு பேதிமாத்திரை.

தானென்றபிள்ளைகட்கு ()விரோசனந்தான் தயவாகச்சொல்லுகிறேன்லவங்கவேலம், மானென்ன சன்னபட்டை மதுரங்கோட்டம் மைந்தனே சண்பகத்தின் மொட்டுத்தானும், வாவென்ற விராகநிடைநிறுத்துக்கொண்டுவாளமதுசுத்திசெய்து விராகனென்றுதேனென்றபழச்சாற்றால் மூன்றுசாமந் தெளிவாகதானரைத்து செப்பக்கேளே. சஎசு

()விரோசனம்-பேதி-மொட்டு-மொக்கு.

கேளப்பாமிளகதுபோல் குளிகைசெய்து கெடியாகநிழலுலர்த்திசிமிழில்வைத்து, கேளப்பாஇல்லையடா சர்க்கரையாதல்கொற்றவனேநல்லவெல்லங் கதலிதன்னில், காளப்பாபிள்ளைபலமறிந்துநீரும் நன்மணியிலொன்றிரண்டு நல்கியப்பின், ஆளப்பாங்ளகுநீர் சாதமீவாய்அந்தியிலேசுக்குசீரகமுமாமே. சஎஎ

() குளிகைமாத்திரை கதலி வாழைப்பழமும்

## கட்டுவாதிமாத்திரை.

ஆமேதான்கியாழமிட்டு கொடுப்பாயப்பா அரையுரேன் கட்டுவாதிதன்னைக்கேளுதாமேதான் சாதிக்காய்சாதிபத்திரிதகமையுள்ளமாசிக்காய்பூவும், காமேதான்சீரகமும்விடையங்கிராம்புநலமுள்ளவெந்தயமும்பினிதானுங், கோமேதான்கசகசாவுங்கோரோசினையுங்கொற்றவனேவிராகனிடைநிறுத்துவாங்கே. சஎஅ

() விடையம் அதிவிடையம்.

வாங்கியேமுலைப்பாலில்அரைத்துநீயும் வண்மையுள்ளமிகதும் போலுண்டைசெய்து, தாங்கியேநிழலுலர்த்தி பதனம்பண்ணுதாள ரணியில்கிராணிவகையெல்லாம்போக, ஓங்கியேதேனதிலுவெண்ணை யிலுங்கொள்ள ஒடிவிடும்பேதிமுதல் ரத்தகிராணி, தீங்கில்லாபோ கருடகடாட்சத்தாலே திறமாகப்புலிப்பாணி திறஞ்சொன்னேனே.

சொன்னதொருபச்சைகற்பூரமாத்திரை சொல்லுகிறேன் பச் சையென்றகற்பூரந்தான், மன்னென்றவீரமுடன் பூரம்லிங்கம்மைந் தனேசூதமுடன் ரசசெந்தூரம், வின்னமில்லாசுத்திசெய்து வகைவ கைக்குவிராகனெடைதானெடுத்து கல்வத்திட்டு, அன்னநடைமின் னூர்கள்()காமப்பாலால் அப்பனேநற்சாமம் அரைத்துவாங்கே. சஅய

() காமப்பால் முலைப்பால்.

வாங்கியேகுன்று மணிபோலுருட்டி வண்மையுடநிழலுலர்த்தி வரிசைகேளு, தீங்குற்றசூலைகரிகிரந்திதோஷம் தின்றிடவேவழுநா ளில்தீர்ந்துபோகும், ஓங்கியேவந்திற்றசன்னிஓடும் ஒருகொடியில்கூ டெழுந்துஓங்கிநிற்கும், பாங்குற்றபத்தியங்களிச்சாபத்தியம் பண் பானபோகருடகடாட்சந்தானே. சஅக

சிறுபிள்ளைகட்கு கட்டுவாதிமாத்திரை.

தானென்றசாதிக்காய் தனைகுடைந்து தன்மையுள்ள அபினிப ணவெடைதானிட்டு கோனென்ற*குளவிந்தை மறைத்துக்காய்மேல் கொற்றவனேகவசமிட்டு குணமதாக மானென்ற வேதுபுடமாகவிட் டுமைந்தனேகவசமதைமாற்றிப்பின்பு, தேனென்றமுலைப்பாலால்அ ரைத்துமைபோல் தெளிவாகஉழுந்ததுபோலுண்டைசெய்யே.சஅஉ

() குளவிந்தம்-மஞ்சள்.

செய்தவுண்டைதனையெடுத்து முலைப்பால்தேனில்செயம்பெற வேகொடுத்துவரதீரும் நோய்கள், நொய்யவந்த ரத்தகொட்டல்ரத் தபேதிநொடிக்குமுன்னேஓடிவிடும்நோய்தீரும்பார், பய்யவந்தபேதி முதல்கட்டுங்கட்டும் பக்குவமாய்பத்தியங்கள்பாகஞ்செய்வாய், ஐய ரெனும் போகருடகடாட்சத்தாலே அன்பாகப்புலிப்பாணி அருளி னேனே. சஅ௩

இரத்தகொட்டலுக்கும்சீதபேதிக்கும்சூரணம்.

அருளுவேன்கற்கடக சிங்கியப்பா அடவானகிராம்புடனே()க ருவாப்பட்டை, உருளவேபிரட்டி சிறுவறுப்பதாக்கி உத்தமனேவ கைவகைக்குவிராகனென்று, மருளவேசூரணித்து மப்பாகேளு ம யக்கமில்லை ஆறுபங்காய்செய்துகொண்டு குருவாகபோகரைநீ தொ துயேந்தி கொடுத்துவிடுவெண்ணையிலேகுலைந்துபோமே. சஅச

()கர்க்கடகசிங்கி கடுக்காய்ப்பூ.

()கருவாப்பட்டை-லவங்கப்பட்டை.

குழந்தைகள்சுரதோஷங்களுக்குஅமிர்தசஞ்சீவிகுளிகை.

போறேதான் அமிர்தமென்றகுளிகைசொல்வேன் புகழுங்கோரோசனையும்ஏலந்தானும், தாமேதான்வகைவகைக்குவிராகனென்று நலம்பெறவேகல்வத்திநன்றாயாட்டி, நாமேதான்வகைவகைக்குவிராகனென்று நலம்பெறவேகல்வத்திலநன்றாயாட்டி, ஆமேதான்வெட்டிவேர்விலாமிச்சையேலம் அடவாகக்கியாழமிட்டுஅரைத்திடாயே.

அரைத்திடுவாயிருசாமமானபின்பு அப்பனேகுன்றியைப்போலுண்டைசெய்து, நிரைத்தனமாய் நிழலுலர்த்திநினைவாய்கேளு நீ மகனேமுலைப்பாலில்நுணிக்கிவைக்கில், உரைத்துவந்தமாந்தமெட்டு நீர்ப்படுமென்றான் உத்தமனே அஸ்திசுரம்வெப்புந்தீரும், மறைபுகழும்போகருடகடாட்சந்தானே மகிழ்வாகப்புலிப்பாணிமனம் விட்டேனே. ௨ ௪௮௬

சிறுபிள்ளைகட்குகாதில் சீழ்வடிகிறதற்குரவிதயிலம்.

விட்டதோர்கால்ரண்டு விராகன்பத்து வெள்ளுள்ளி குளவிந்தம்விராகனைந்து, திட்டமுறவெள்ளைக்காக்கணஞ்சாற்றாலே திறமாகத்தானரைத்து தேங்காநெய்யில், சட்டமுடன் தான்பிசைந்து ரவியில்வைத்து சாதகமாய்மூன்றுநாளானபின்பு, இட்டமுடன் வடிகட்டி எடுத்துக்கொண்டுஎன்மகனேசெவியிலிடசீழ்தான்போமே.

சிறுபிள்ளைகள் பெருக்க நெய்.

தானென்று தேறுதப்பிள்ளைகட்கு தயவாகச்சொல்லுகிறேன் தண்ணீர்பிட்டான், மானென்றசாறும்வெள்ளாட்டின் பாலும்மைந்தனேஆவின்பால் தேங்காய்பாலும், தேனென்ற ஆவிநெய்திறமாய் வாங்கிதேசிகனேவகைவகைக்குபடிகாலப்பா, கோனென்ற சீனியது கற்கண்டோடு கொற்றவனேபலமைந்துகொண்டுசேரே. ௪௮௮

சேர்ந்தபின்பு அடுப்பேற்றிதீபமூட்டு சிறுகளிமெழுகு பதஞ்சிவக்கும்போது, கோர்த்தெடுத்துக்கொண்டுவடிகட்டி தானும்கொற்றவனேகரண்டிவீதங் கொடுத்தாயானால், கார்த்திருந்தகணம்நீங்கி கரும்புபோலாம் கட்டழகுபிள்ளைகட்கு அழகுமுண்டாம், பூத்தமலைபோகருடகடாட்சத்தாலே புலிப்பாணிபுவிதனிலேபூட்டினேனே. ௪௮௯

குழந்தைகட்குவாந்திகண்டால்.

பூட்டுகிறேன்குழந்தைகட்குவாந்திகண்டால் பூவென்றகிராம்புமதிவிடையந்திப்பிலி, காட்டுகிறேன்மயிலிறகுசுட்டசாம்பல் நன்றாகப்பொடிசெய்து தேனில்சேர்த்து, ஊட்டவேவாந்தியது ஒழிந்துபோகும் உண்மையிதுதவறாதுஉறுதிமெத்த, ஆட்சிமிகுபோகருகடாட்சத்தாலே அனபாகபுலிப்பாணி அறைந்திட்டேனே. ௪௯௰

### குழந்தைகள்சிரங்குக்கு.

அறைகிறேனின்னமொருயெண்ணெயப்பா அனல்மீறிகுழந்தைகட்குஅங்கமெல்லாம், நிறையவேசொரிசிரங்கு நின்றதானால் நிலவரிமாயாமணக்கெண்ணெயோடு, மறைவானமேனியுடன் மணித்தக்காளி மைந்தனேமுடக்கற்றான் வகைப்படிக்கால், குறையாமல்மூக்குரட்டையரைத்தசாந்து கூட்டிவொய்எலுமிச்சம்பழத்தில்வாரே.

வாருகக்காச்சிவடித் தெடுத்துக்கொண்டு வகையாகக் கரண்டிமுறைகொடுப்பாயப்பா, கோரகபத்தியந்தா னிச்சாபத்தியம் நிச்சயமாயைந்து நாளேழுநாளாம், சீராகத்தலைமுழுகிவருவாகில் சிறுசிரங்கும்பெருசிரங்கும் நில்லாதோடும், பேருகபோகருட கடாட்சத்தாலேபேசினேன்புலிப்பாணிபேசினேனே. ௪௯௨

### சிரங்குக்குமேல்பூசுந்தயிலம்.

பேசுகின்றமேல்பூசுந் தயிலமொன்று பெரியாம் பல்கிழங்குடனேசெங்கத்தாரி, மாசறவேனிடைக்கிடை தானெடுத்துக் கொண்டு மைந்தனே அயுரிச்சார்தன்னாலாட்டி, நாகமென்றநிதம்பஎண்ணெ தன்னில்கூட்டிநான்குநாள்பூசிவரசிரங்குபோகும், தேசிகனார் போகருடகடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. ௪௯௩

பெரியாம்பல் அல்லி செங்கந்தாரி சுருள்பட்டை.

### பிள்ளைபெறமாட்டாதவற்கு.

பாடியேபிள்ளைவெளி காணாதபேர்க்குபண்பான கீழ்க்காய்நெல்லிமூலம், வாடியேபோகாமல்வளையமாட்டி வசமான இடக்கால்பெருவிரலில்போடே, நீலியேபிள்ளைவெளிகாணுமப்பா நினைவாகஇன்னமொருவேரைக்கேளு, சூடியேமுன்னைவேர்தனையெடுத்து சுரபியெனும்பசுவின்பால்தனிலரைத்தே. ௪௯௪

அரைத்தெடுத்து உள்ளுக்குக் கொடுத்தால்பிள்ளை அப்பனே கீழ்விழுந்து அழுகும்பாரு, மறைந்தபொருளென்று நீமயங்கவேண்டாம்மகாகோடிபுண்ணியங்க ளுனக்குண்டாகும், துரைத்தனமாய் நீயலைந்துதிரியவேண்டாம் துய்யமெனும்நூல்களெல்லாந் துணிந்துபாரு, உரைத்தகுருபோகருடகடாட்சந்தாலே உரைத்திட்டேன்புலிப்பாணியுலகில்தானே. ௪௯௫

உலகினிலே மானிடர்க்குகற்றாழைநாற்றம் ஓடிவிடசாந்தொன்றுஉரைக்கக்கேளு, கல்நாரிகரந்தையுட வேருங்கூட நன்னாரிவேருடனேமுத்தக்காசு, குலமிலகுங்கஸ்தூரி மஞ்சள்தானுங் கூட்டியேவகைவகைக்குவிராகனெந்து, கலகமிலையரைத்ததனைமுகட்டில் பூசக்கண்டோடுங்கற்றாழைநாற்றமென்னே. ௪௯௬

### கல்நாரி-சிவக்கரந்தை.

## தலைப்பேனுக்கு மரணம்.

எண்ணவேதலையிலுள்ள பேன்கள்சாக எடுத்துரைப்பேன் சூத மொருகழஞ்சிவாங்கி, நண்ணவேமேனிசார் விட்டுஆட்டி நன்றாவி ல்தான்மிரட்டிநவிலக்கேளு, திண்ணவேசிகையில்சிக்கமபோல் சொருகசிரசிலுள்ளபேன்க ளெல்லாஞ் செத்துப் போகும், கண்ணவே போகருடகடாட்சத்தாலே கலையறிந்துபுலிப்பாணி காட்டினேனே.

## சூதம்-இரசம்.

காட்டினேன்முப்புவே கல்லல்லாமல் கண்டறிந்து செய்தொழிலில்கலந்துகொள்ள, நாட்டினேன்கபடொன்று மில்லையப்பா நன்மையுடனபோடநாதனென்பார், பூட்டினேன்கெவனமுத லிதிலேயாகும் புண்யமனைவாதமொடு வைத்தியமடா, காட்டினேன் போகருடகடாட்சத்தாலே கனமாகப்புலிப்பாணி கலையில்தானே. சகூஅ

கலையிலேபதினாறும் இருபத்தைந்தும் கனமான வைம்பதுநூறும்பாரு, நிலையிலேகண்முகத்தில் பூசைமார்க்கம் நீமகனேசால்பாருநூறும்பாரு, மலையிலேபாதிரண்டுமுன்னூறப்பா மைந்தனேசோதிடமுமுந்நூறப்பா, குலையிலேகொக்கோகமுந்நூறுதானுங் குருவாணபோகருடகடாட்சமாமே. சகூகூ

## வைத்தியத்திற்கு புத்திகூறல்.

ஆமேதான்பண்டிதரேயறையக்கேளு ஆதரையிலொளியோர்க்குஅவிழ்தமீந்து, தாமேதானன்னமிட்டு வஸ்திரமீந்து தயவாகதன்னுயிர்போலவரைக்காத்து, தீமேதான் சேராமல் புண்ணிய வானாய் தீர்க்கமுள்ளவைத்தியனாய் இருந்துவாழ்வார், நாமேதான்போகருடகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணி நவின்றிட்டோமே. ரு௱

## வியாதி யஸ்தனுக்கு புத்திகூறல்.

நவின்றிட்டோம்புவிதனிலே வைத்தியமார்க்கம் நன்றாகச்சொல்லிவைத்தேனின்னூல்வேண்டும், பயின்றிட்டநோயாளர் வைத்தியோர்க்கு பண்பாகதொழுதேற்றிதாம்பூலமீந்து, இவன்றிட்டமவையெல்லாமவர்க்குச்சொல்லி இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தங்கொள்வாய், கவின்றிட்ட போகருடகடாட்சத்தாலே காசினியில்புலிப்பாணி யன்னூறுமுற்றே.

புலிப்பாணிமகாமுனிவர் அருளிச்செய்த

வைத்தியம்-ரு௱-முற்றிற்று.

சிவமயம்.

புலிப்பாணிமகா முனிவரருளிச்செய்த

# வயித்திய அகராதி.


| பெயர். | பாட்டு. |
| --- | --- |
| அக்கரசஞ்சீவிமாத்திரை | ௪௭௩ |
| அக்கினிபிளாஸ்திரி | ௪௱௪ |
| அக்கினிமந்தத்துக்குலேகி | ௪௩௩ |
| அண்டமெழுகு | ௪௫௧ |
| அண்டவியாதிக்கெண்ணெ | ௨௧ |
| அமிர்தசஞ்சீவிமாத்திரை | ௪௭௰ |
| அரிதாரபஸ்பம் | ௩௪௨ |
| அரையாப்புக்கு | ௪௮ |
| அர்த்தஞாதிசுரமாத்திரை | ௪௬௮ |
| ஆக்கிராணம் | ௩௫௧ |
| ஆடாதபேய்ஆட | ௩௯௫ |
| ஆணைக்கால்தீலேகியம் | ௪௬௬ |
| இடிவல்லாதி | ௨௨௭ |
| இரசசெந்தூரம் | ௩௭ |
| இரணங்களுக்குப்புகை | ௭௪ |
| இரணங்களுக்குப்புகை | ௩௫௬ |
| இரணமாறுகிறபிளாஸ்திரி | ௪௱௭ |
| இரத்தகொட்டலுக்குஞ்சீதபேதிக்கும்சூரணம் | ௪௮௪ |
| இரத்தசாமுண்டிசக்கரம் | ௪௮௩ |
| இரத்தசாமுண்டிமந்திரம் | ௩௯௪ |
| இராமபாணக்குளிகை | ௩௨௨ |
| இருமலுக்குலேகியம் | ௱௯௮ |
| இலவணச்செந்தூரம் | ௪௫௮ |
| ஈளைகாசம் பெருமூத்திரத்திச் சிறுநீரடைப்பு கிரிச்சினப்பெரும்பாட்டுக்குலேகியம் | ௪௩௯ |
| உண்ணகாங்கைக்குடிநீர் | ௨௯௮ |
| கெடி-௰௮-க்கும் | ௬௨ |
| வல்தீர்க்க | ௩௯௩ |
| ஐந்தெண்ணெதயிலம் | ௪௮ |
| ஒருதலைநோய்க்குநசியம் | ௨ |
| கடுகெண்ணெ | ௨௱௩ |
| கட்டுவாதிமாத்திரை | ௪௱௮ |
| கற்சிலை | ௱௪௩ |
| கணங்கள்பில்லி வஞ்சனைபோகதீபம் | ௩௯௬ |
| கண்ணில்நீர்வடிதலுக்குமை | ௩௩ |
| கண்டபலந்திராத்தக்குளிகை | ௩௮ |
| கண்வலிக்கெல்லாம் | ௩௬ |
| கர்ப்பமுண்டாகஎண்ணெ | ௱௫௬ |
| கற்பூரக்குளிகை | ௱௯௪ |
| கழிப்புசெய்யும்விதம் | ௩௮௨ |
| கற்சூழைநாற்றந்தீரகூட்டு | ௪௯௬ |
| காப்பு | ௧ |
| காதுவலிக்கெண்ணெ | ௨௬ |
| காதடைப்புக்குத்தயிலம் | ௱௮௯ |
| கிரகசாரத்திற்கு | ௱௨௬ |
| கிரந்திக்கெண்ணெ | ௭௯ |
| கிரந்திஅரையாப்புக்கெண் | ௱௩௮ |
| குஷ்டத்துக்குமருந்து | ௱௫ |
| குடைச்சலுக்குத்தயிலம் | ௩௱ |
| குமட்டிக்காய்பதங்கம் | ௨௨௫ |
| குழந்தைக்குவாந்திகண்ட | ௪௯௰ |
| குழந்தைகள்சிரங்கு | ௱௯௧ |
| குன்மம்வாந்தி எப்பம் வாய்நீருக்குக்கியாழம் | ௩௫ |
| குன்மம்-௬-க்கும் உப்பு | ௰௫ |
| குழந்தைகட்கு சுரமுதலிய தோஷங்கட்கு அமிர்தசஞ்சீவி | ௪௮௫ |

| பெயர். | பாட்டு. |
|---|---|
| கெந்தகரசாயனம் | ௨௬௮ |
| கெந்தகரசாயனம் | ௩௨௪ |
| சகலபேய்க்குங்குளிசம் | ௩௯௮ |
| சகலமேகங்களுக்கும் ரசகெந்தி மெழுகு | ௨௪௮ |
| சகலரணங்களுக்கும்களிம்பு | ௫௩ |
| சகலரோகத்திற்கு சித்திரமூலவ ண்ணை | ௩௪௬ |
| சகலரோகத்துக்குசூட்சகு | ௩௪௪ |
| சகலவிஷங்களுந்தீரமருந்து | ௱௨ |
| சதுரகிரி | ௱௯௬ |
| சன்னிக்குமேல்பூசதயிலம் | ௬ |
| சன்னிகள்பசாசுகள் விஷயங்கள் மயக்கத்துக்கு அகத்தீசர்கலி க்கம் | ௫௬ |
| சன்னிக்குயெண்ணை | ௬௰ |
| சகுனம் | ௨௭௫ |
| சாதிலிங்கக்கட்டு | ௱௭௯ |
| சிதம்பரமெழுதிக்கட்ட | ௩௯௰ |
| சிவகிரிவளப்பம் | ௱௪௩ |
| சிறங்குக்குமேல்பூசதயிலம் | ௪௯௩ |
| சிறுபாம்புகடிக்குமருந்து | ௰௪ |
| சிறுபிள்ளைகளுக்கு கட்டுவாதிமா த்திரை | ௪௮௨ |
| சிறுபிள்ளைகட்குகாதில் சீழ்வடிகி றதற்குரவிதயிலம் | ௪௮௭ |
| சிறுபிள்ளைகபெறுக்கமெ | ௪௮௮ |
| சீரகச்சூரணம் | ௩௩௯ |
| சுகபேதிச்சூரணம் | ௱௭௪ |
| சுரங்களுக்குகியாழம் | ௨௭௮ |
| சுரமாத்திரை | ௨ |
| சுத்தவல்லாதிஎண்ணை | ௪௪ |
| சூட்டுக்குமுழுத்தாமரைத் | ௩௫௯ |
| சூதகவலிக்குஉப்பு | ௯ |
| சூதகச்செந்தூரம் | ௨௫௬ |
| சூட்டுக்குகுடிநீர் | ௨௯௩ |
| சூனியந்திரப்புகை | ௱௰௯ |
| சூனியத்திற்குஎண்ணை | ௱௨௯ |
| சூலைக்கு | ௱௫௫ |
| சூலைவாய்மேகத்துக்குதயில | ௭௰ |
| சூலை-௰அ-க்குங்கியாழம் | ௱௮௧ |
| செங்காந்திதடிப்புக்கு | ௱௮௫ |
| செய்யான்பெருச்சாளிகடிக்கு | ௱ |
| சோகைகாமாலை வீக்கம்நீர்க்கோ வைபாண்டு மகோதரம் பீலி கைஇவைகளுக்குகியாழம் | ௬௬ |
| சோகைகாமாலைக்குலேகிய | ௨௱௰ |
| தந்தவியாதிக்கெல்லாம்பொ | ௩௮ |
| தலைப்பேனுக்குமரணம | ௯௭ |
| தலைவலிசன்னிக்குபுகை | ௱௯௩ |
| தளம்கண்டஅவிஷதம் | ௨௮௭ |
| தாகத்துக்குகியாழம் | ௨௮௯ |
| தாளகபஸ்மம் | ௩௨ |
| திலகஞ்செய்யுங்கிரியை | ௪௧௨ |
| திரும்வியாதி | ௭௬ |
| திரும்வியாதிகள் | ௩௪ |
| திரும்வியாதிகள் | ௩௨௯ |
| துவளை | ௱௬௰ |
| தேவிக்குஏசமூலம் | ௱௰௮ |
| தேள்காலிவிஷந்தீரமூலிகை | ௰௧ |
| நஞ்சுண்டவற்குகெற்பமழிக் | ௧௯ |
| நமனுசமெழுகு | ௪௬௧ |
| நல்லசகுணம் | ௨௨௭ |
| நவக்கிரகத்தியானம் | ௨௧௭ |
| நீரடைப்புக்கு வாழைக்கிழங்கின் நீர் | ௧௮ |
| நீரிலிரத்தங்கண்டால் | ௧௭ |
| நீரெறிவுக்கு | ௨௯ |
| நூல்தொகை | ௯௧ |
| நூற்றெருகுட்டி | ௪௯௯ |
| நோய்க்குபேதிக்குஔசாந் | ௩௭௫ |
| நோயின்நட்சத்திரங்களறி | ௨௩௩ |
| பல்லுக்குப்பொடி | ௱௯௯ |
| பச்சைகற்பூரமாத்திரை | ௪௮௰ |
| பஞ்சமுகச்செந்தூரம் | ௨௫ |
| பஞ்சீகரணசெந்தூரம் | ௨௫ |
| பஞ்சீகரணமாத்திரை | ௨௩ |
| பயித்தியத்திற்கு | ௩௯ |
| பயித்தியந்திர | |
| பயித்தியந்திர | |

| பெயர். | பாட்டு. |
|---|---|
| பல்புழுச்சாக | ௪௰ |
| பரங்கிப்பட்டைரசாயனம் | ௩௩௫ |
| பார்வைக்குக்குளிகை | ௱௰௫ |
| பித்தவெடிப்புக்கு | ௭௰ |
| பித்தபயித்தியத்திற்கு | ௩௬௬ |
| பிரமனுக்கும் வாசவனுக்கும் சாபம் | ௱௰௨ |
| பிர்மேகத்துக்குஎண்ணை | ௱௭௨ |
| பிர்மைக்குஅண்டபஸ்பம் | ௱௨௨ |
| பில்லிக்குத்தவளை | ௨௫௬ |
| பில்லிபயித்தியத்திற்கு | ௩௪௮ |
| பில்லிவஞ்சனை நோயுந்தீர்ப்பதற்குக்கிரியை | ௩௯௧ |
| பிள்ளைபெறமாட்டாதவற் | ௧௯௪ |
| பிள்ளைகட்குபேதிமாத்தி | ௪௭௬ |
| பிளாஸ்திரி | ௪௰௮ |
| பிநசத்துக்குநசியம் | ௨௫ |
| பிநசத்துக்கெண்ணை | ௪௪௬ |
| புகை | ௱௬௧ |
| புரையாதிரணங்கட்குதயி | ௨௨௰ |
| பூரான்கடிதீர | ௯௯ |
| பூரக்களிப்பு | ௨௯௭ |
| பூனைகடிதீரமூலிகை | ௯௫ |
| பெரும்பாடுக்குமருந்து | ௰௪ |
| பேதிமாத்திரை | ௱௯௨ |
| பேய்பூதம்ஓடிப்போகமை | ௪௧ |
| பேய்நரிநாய்கடிக்குமருந்து | ௯௪ |
| மருந்திட்டுக்குச்சிட்டை | ௧௭ |
| மருந்திட்டுக்குமுறிவுசுத்தி | ௱௭௭ |
| மரணநாளறிய | ௨௪௬ |
| மருந்திடுமுறிய | ௪௫௪ |
| மாலைக்கண்ணுக்குமை | ௩௧ |
| மாந்ததோஷத்துக்குளிகை | ௩௧௫ |
| முகசன்னிக்குஎண்ணை | ௫௮ |
| முழங்கால்வாதம் | ௭௨ |
| முளைமூலத்துக்குகட்டு | ௩௨௧ |
| மூலரோகத்திற்குச்சூரணம் | ௱௩௬ |
| மெத்தலவியாதிக்கெண்ணை | ௰௯ |
| மேகநவப்புள்ளிக்கு | ௪௭ |
| மேகம்-உக-க்கும் வாய்நாற்றத்திற்கு எண்ணை | ௮௮ |
| மேருவுக்குவடக்குமனிதர் | ௱௪௬ |
| மேகராசாங்கத்தெண்ணை | ௬௱௰ |
| மேகரணங்களுக்குதீப்பு | ௪௫௰ |
| வயிற்றிரைச்சல்இரத்தகடுப் | ௩௯ |
| வண்டுகடிக்குமருந்து | ௯௬ |
| வரக்கிரி | ௱௯௫ |
| வயிற்றுக்கடுப்புக்கு | ௱௯௧ |
| வல்லாதிதயிலம் | ௨௨௫ |
| வண்டுகெடி தடிப்பு செல்வீர்க்களிம்பு | ௨௯௪ |
| வயிற்றிரைச்சல்பேதிக்கு | ௩௮ |
| வலிகளுக்குசாதிலிங்ககட் | ௩௩௩ |
| வாய்வுவிக்கல்சோகைக்கு | ௨௧௧ |
| வாய்புண்ணுக்குஎண்ணை | ௪௨ |
| வாய்வுகுத்தலுக்குகியாழம் | ௭௭ |
| வாய்வுகளுக்கு | ௩௯௧ |
| விஷத்துக்குநசியம்கலிக்கம் | ௰௩ |
| விக்கலுக்கு | ௫௫ |
| விதவைவையைக்கூடபிள்ளையி | ௱௰௪ |
| விற்புருதிக்குமருந்து | ௧௭௫ |
| வியாதியஸ்தனுக்குபுத்தி | ௫௧௧ |
| விஷமுடித்தயிலம் | ௪௨௨ |
| விஷங்களுக்குமெழுகு | ௧௩௨ |
| வேதுநீர் | ௨௭௧ |
| வேதநகண்ணீர் | ௩௯௨ |
| வைத்தியமுப்பு | ௩௬௧ |
| வைத்தியருக்குபுத்திகூறல் | ௫௱ |


வயித்திய அகராதி

முற்றிற்று.

8362